# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4 தேசம்: 1 திருவள்ளுவர் ஆண்டு 2051 ஆணி / ஜூன் 2020 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be


## தேசத்தின் குரல்




**கறுப்பு உயிர்கள் பொருட்டாகும் -**

**அங்கும் இங்கும் எங்கெங்கும்!**

**ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவை போல் தோன்றும் இரு அண்மைச் செய்திகள் தமிழகத்தின் உளச்சான்றை உலுக்கியுள்ளன** ஒன்று: உடுமலை சங்கர் சாதி ஆணவப் படுகொலை மேல்முறையீட்டு வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் அளித்துள்ள மோசமான தீர்ப்பு! இரண்டு: தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் ஜெயராஜ், பென்னிக்ஸ் என்ற தந்தை மகனாகிய இரு வணிகர்களைக் காவல் துறையினர்

## உள்ளே...


1. தேசத்தின் குரல் -1
2. களம் காலம் - 9
3. செங்காட்டான் குறிப்புகள் -11
4. ஈழம் மெய்ப்படும்: உணர்ச்சிகளை விலக்கிய மெய்மை நோக்கிய பயணம் -15
5. தற்சார்பிற்கு இறுதிச்சடங்கு செய்யும் பாஜக அரசு - 22
6. லெனின் நினைவுக் கூட்டத்தில் லெனின் குறித்து தோழர்.ஸ்டாலினின் உரை - 28
7. நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (8) -39
8. கியூபாவின் புரட்சிப்பெண்க(4) - 46
9. டாலருக்கு வந்த வாழ்வு (3)-57



பதிவு எண் :R.Dis. No. 1964/2014

அடித்துக் கொன்ற இரட்டைக் கொலை!

உடுமலைப்பேட்டை சங்கர்-கௌசல்யா காதலையும் சாதிமறுப்புத் திருமணத்தையும் சகித்துக் கொள்ள முடியாத சாதி வெறியர்களே சங்கரைக் கொலை செய்தனர். 2016 மார்ச் 13 பட்டப்பகலில் நட்டநடுச்சாலையில் பலர் முன்னிலையில் உடுமலைப்பேட்டை பேருந்து நிலையத்திற்கு எதிரில் சங்கரையும் கௌசல்யாவையும் கூலிக் கொலைகாரர்கள் வெட்டிச் சாய்த்தனர். சங்கர் துடிதுடித்து உயிரிழந்தார். மிகத் தீவிரமான சிகிச்சைக்கு பிறகே கௌசல்யா உயிர் பிழைத்தார்.

இந்த சாதி ஆணவப் படுகொலையை சதித்திட்டம் தீட்டி நிறைவேற்றியவர்கள் கௌசல்யாவின் பெற்றோரே என்பது அனைவர்க்கும் தெரிந்திருந்தது. தன் பெற்றோரே முதல் குற்றவாளிகள் என்பதில் கௌசல்யாவும் தெளிவாக இருந்தார். அவ்வாறே உசாவல் நீதிமன்றத்தில் சான்றியமும் அளித்தார்.

இவ்வழக்கில் 2017 திசம்பர் 12ஆம் நாள் திருப்பூர் மாவட்ட அமர்வு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் கௌசல்யாவின் தந்தை சின்னச்சாமி உட்பட ஆறு குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் கௌசல்யாவின் தாயார் அன்னலட்சுமி, மாமா பாண்டித்துரை, பிரசன்னா ஆகிய 3 பேர் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

ஒருபுறம் குற்றவாளிகள் தங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்தும், மறுபுறம் அரசுத் தரப்பினர் மூவர் விடுதலையை எதிர்த்தும் மேல்முறையீடுகள் செய்தனர். இந்த மேல்முறையீட்டு வழக்கில்தான் சென்னை உயர்நீதிமன்றம் இப்போது தீர்ப்பு வழங்கியுள்ளது. அரசின் மேல்முறையீடு மறுதலிக்கப்பட்டு மூவர் விடுதலை உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் தூக்குத் தண்டனை விதிக்கப்பெற்ற அறுவரில் கௌசல்யாவின் தந்தை சின்னச்சாமி விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். மற்ற ஐந்து குற்றவாளிகளுக்கும் தூக்குத் தண்டனை 25 ஆண்டுகளுக்குக் குறையாத வாழ்நாள் சிறைத் தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அமர்வு நீதிமன்றம் கௌசல்யாவின் தாயார் அன்னலட்சுமியையும் மாமன் பாண்டித்துரையையும் விடுவித்த பின் இப்போது உயர்நீதிமன்றம் தந்தை சின்னச்சாமியையும் விடுதலை செய்திருப்பது இந்த வழக்கின் ஆணிவேரையே பிடுங்கியெறிவதாக உள்ளது. கௌசல்யாவின் பெற்றோரும் மாமாவும் இந்தக் கொலைக்குக் காரணமில்லை என்றால் கூலிக் கொலைக்காரர்களை யார் எதற்காக ஏவியிருக்கக் கூடும்? என்ற கேள்வி எழுகிறது.

நாம் வாழும் இந்த சாதிச் சமூகம் காதலையே கொடுங்குற்றமாகக் கருதி

வெறுத்தொதுக்குவதையும் அதற்குத் தண்டனையாகக் கொலையும் செய்யத் தயங்குவதில்லை என்பதையும் எத்தனையோ நேர்வுகளில் பார்த்து விட்டோம்.

சாதிமறுப்புத் திருமணம், அதுவும் தலித்துடன் என்றால் சாதி வெறியர்கள் வேட்டை விலங்குகளாகவே மாறிப் போவதைக் காண்கிறோம். பெற்றோரே பிள்ளையைக் கொன்று போடும் அளவுக்கு சாதியாணவம் தலைக்கேறி விடுகிறது. இந்தச் சாதியாணவம் கொலைகாரனின் வீச்சரிவாளில் வெட்டுமுனை ஆவது மட்டுமல்ல, காவல்துறை அதிகாரியின் தடியில் பித்தளைப் பூணாவது மட்டுமல்ல, நீதிபதியின் தூவலிலும் பச்சை மையாகி விடுகிறது.

இறுதி நோக்கில் சாதியாணவப் படுகொலைக்குச் சட்டநீதி முத்திரை வழங்கிய சென்னை உயர் நீதிமன்றத்தின் ஒளிர் மாடங்களிலிருந்து கிளம்பி சாத்தான்குளத்தின் இருண்ட காவல் கொட்டடிக்குச் சென்று பார்த்தால் இந்தியா என்னும் அடக்குமுறை அமைப்பின் இன்னொரு கோர முகம் காணக்கிடைக்கிறது.

**தூ**த்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் தந்தை ஜெயராஜ், மகன் பென்னிக்ஸ் ஆகிய இருவரும் காவல்துறையினரால் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். இருவரும் வணிகர்கள். கொரோனா முடக்க ஆணையை மீறிக் கூடுதல் நேரம் கடை திறந்து வைத்திருந்ததுதான் அவர்கள் செய்த குற்றம்!

கொரோனாத் தொற்று பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக மக்கள்-ஊரடங்கு என்று தொடங்கி முழு முடக்கம் ஆட்சி செய்யத் தொடங்கியது முதலே காவல்துறையின் காட்டாட்சி தொடங்கி விட்டது. நடந்தோ இருசக்கர ஊர்தியிலோ வருவோரை மறித்து எதுவும் கேட்காமல் தடியாலடிக்கும் காணொலிகள் ஏராளமாக வந்தன. கோயில், மசூதி போன்ற வழிபாட்டுத் தலங்களைக் கூட விட்டுவைக்காமல் தடித்தாண்டவம் ஆடியது காக்கி. இப்படிச் செய்வது சட்டப்புறம்பானது, ஊரடங்கு நெறிகளை மீறினால் வழக்குப் பதிவு செய்யலாம், தளைப்படுத்தவும் கூட செய்யலாம், அடிக்கும் அதிகாரம் காவல்துறைக்கு இல்லை என்று சுட்டிக்காட்டிய வழக்கறிஞர்கள் வெளிப்படையாகக் கண்டிக்கப்பட்டனர். இருசக்கர ஊர்தியில் வந்த ஒருவரை சீருடை அணியாத காவலர் ஒருவர் தடியால் விளாசுகிறார், தான் மருத்துவர் என்று அவர் சொன்னவுடன் இதை முன்பே சொல்லக் கூடாதா என்று அந்தக் காவலர் கேட்கிறார். அவர் மருத்துவர் இல்லையென்றால் தொடர்ந்து அடிக்கலாமா? அப்படி அடிப்பதற்கு அதிகாரமளித்தது யார்? எந்தச் சட்டப்படி?

ஓரிடத்தில் காவல்துறையின் அதிகாரத்தையும் முதலமைச்சரின் அதிகாரத்தையும்

கேள்விக்கு உள்ளாக்கிய துடுக்குத்தனமான இளைஞர் ஒருவரைக் காவல்நிலையத்தில் வைத்து அடிஅடியென்று அடித்து அவர் அலறுகிற காட்சியைப் படமெடுத்து வெளியிட்டு மகிழ்ந்தது காவல்துறை. இப்படிச் செய்த காவல் அதிகாரிகளின் நடவடிக்கை சட்டப்புறம்பானது மட்டுமன்று; அருவருக்கத்தக்கது, வதையின்ப மனங்களின் வக்கிர வெளிப்பாடு. இச்செயல் குறித்துப் பெயரளவுக்குக் கூட அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எல்லாவற்றையும் நீதித்துறையும் வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருந்தது. அப்போதே இதுபோன்ற காக்கிக் காலித்தனத்தைக் கண்டித்திருந்தால் சாத்தான்குளம் இரட்டைக் கொலை போன்ற கொடுமைகள் தவிர்க்கப்பட்டிருக்கக் கூடும்.

தந்தை - மகன் இருவரையும் சட்டப் புறம்பாகக் கடத்திச் சென்று அடித்து நொறுக்கிக் கொலை செய்திருக்கிறது காவல்துறை. நீதிகேட்டுப் பொதுமக்கள் தெருவில் இறங்கிப் போராட்டம் நடத்திய பிறகுதான் குற்றம்புரிந்த இரு காவல் அதிகாரிகளை மேலதிகாரி மெதுவாகப் பணியிடைநீக்கம் செய்துள்ளார்.

நடந்தது என்ன? கடந்த சூன் 19ஆம் நாள் தேதி கடை மூடுவது தொடர்பாக ஜெயராஜிடம் வாக்குவாதம் செய்திருக்கிறார் காவல் உதவி ஆய்வாளர் ரகுகணேஷ். இதற்காக மறுநாள் ஜெயராஜைக் கைது செய்து அழைத்துச் சென்றது காவல்துறை.

எவரை எதற்காகத் தளைப்படுத்தினாலும் அதற்கான காரணத்தை அவருக்குத் தெரிவிக்க வேண்டும், அவருக்கு நெருக்கமானவரிடம் தளைக் குறிப்பாணை (arrest memo) எழுதித் தர வேண்டும். இது உச்ச நீதிமன்ற ஆணை. ஆனால் இப்படி எந்த நடைமுறையையும் கடைப்பிடிக்காமல் ஜெயராஜை இழுத்துச் சென்றது காவல் துறை. இதனையொட்டி, ஜெயராஜை சந்திக்க அவர் மகன் பென்னிக்ஸ் காவல் நிலையம் சென்றுள்ளார். அங்கு 60 வயதான ஜெயராஜை பென்னிக்சின் கண் முன்னேயே உதவி ஆய்வாளர்கள் ரகுகணேஷ், பாலகிருஷ்ணன் ஆகியோரும் மற்றக் காவலர்களும் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதனை பென்னிக்ஸ் தட்டிக் கேட்டுள்ளார்.

அவர்களது கோட்டைக்குள் நுழைந்து அவர்களது அதிகாரத்தையே கேள்விக்குள்ளாக்கினால் எப்படிப் பொறுப்பார்கள்? வெறிகொண்டு பென்னிக்சைப் பாய்ந்து குதறி விட்டார்கள். பல மணி நேரம் கட்டி வைத்து விளாசியதோடு, அவரது ஆசனவாயிலும் லத்தியால் குத்தி, இரத்தம் சொட்டச் சொட்ட அடித்தார்கள்.

பிறகு ஜெயராஜ், பென்னிக்ஸ் இருவர் மீதும் பொய் வழக்குப் பதிவு செய்து, அதனடிப்படையில் இருவரையும் 'அரெஸ்ட்' காண்பித்து முதல் தகவல் அறிக்கை மற்றுமுள்ள ஆவணமெல்லாம் 'ரெடி' செய்து 'ரிமாண்டு'க்கு அனுப்பினார்கள். சட்டங்காக்கும் சாத்தான்(குளம்) நீதிமன்ற நடுவர் கண்ணையும் காதையும் பொத்திக் கொண்டு நேராக அவ்விருவரையும் சிறையிலடைக்க அனுப்பி வைத்தார். 21ஆம் நாள் இருவரும் கோவில்பட்டி கிளைச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

சாத்தான்குளம் நீதிமன்றத்திற்கு அருகில் திருவைகுண்டம், திருச்செந்தூர் கிளைச் சிறைச்சாலைகளும் பேரூரணி மாவட்டச் சிறைச்சாலையும் இருந்த போதிலும் 90 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கோவில்பட்டி கிளைச்சிறையில் அவர்கள் இருவரையும் கொண்டுபோய் அடைத்தார்கள். காரணம் என்னவோ? சிறையதிகாரிகள் அவர்களுக்கிருந்த காயங்கள் பற்றிக் கேட்கவும் இல்லை, அவர்களை உடனே மருத்துவமனைக்கு அனுப்பவும் இல்லை.

சிறையில் பென்னிக்சை நண்பர்கள் சந்தித்த போது காவல்துறை லத்தியால் குத்தியதைத் தொடர்ந்து ஆசனவாயில் தொடர்ந்து இரத்தம் வந்து கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார். 22 இரவு 7:30 மணியளவில் நெஞ்சு வலியால் பென்னிக்ஸ் மயங்கி விழுந்தார் என்று கூறி அவரைக் கோவில்பட்டி மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். மருத்துவர்கள் பென்னிக்ஸ் ஏற்கெனவே இறந்து விட்டதாகச் சொல்லி விட்டனர்,

அதே சமயத்தில் பென்னிக்சின் தந்தை ஜெயராஜுக்கு காய்ச்சல் என்று மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அவரும் அதே நாளில் சில மணிநேர இடைவெளியில் இறந்து போனார். இந்நிலையில் தந்தை மகன் கொல்லப்பட்டதைக் கண்டித்து சாத்தான்குளம், பேய்க்குளம் பகுதியில் பொதுமக்கள் கிளர்ச்சி செய்தனர். வணிகர் சங்கமும் பல்வேறு அரசியல் கட்சிகளும் சமுதாயச் சங்கங்களும் வழக்கறிஞர்களும் திரண்டு குரல் கொடுத்தனர்.

இருவரின் சாவுக்கும் காரணமான காவல் அதிகாரிகளைக் கொலை வழக்கில் தளைப்படுத்திச் சிறையிலடைக்க வேண்டும் என்பதுதான் கோரிக்கை. நாடெங்கும் வணிகர்கள் கடையடைப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கொரோனா முடக்கத்தை மீறி மக்கள் பெருந்திரளாகத் தெருவில் இறங்கி விட்டனர். எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கண்டன அறிக்கை வெளியிட்டனர்.

இத்தனைக்குப் பிறகு காவல் அதிகாரபீடம் கொலைகாரக் காவலதிகாரிகள் இருவரையும் ஆய்தக் காவல் பிரிவுக்கு மாற்றியது. அடித்துக் களைத்த விலங்குகள் அங்கு போய் ஓய்வாக

இருக்கலாம் அல்லவா? மக்கள் போராட்டம் ஓயவில்லை என்ற நிலையில் அந்த இரு கொலைகாரர்களையும் பணியிடைநீக்கம் செய்துள்ளார் எஸ்.பி அருண்பால கோபாலன்.

நாங்கள் கடையை மூடச் சொன்னோம், அப்பனும் மகனும் தரையில் படுத்து உருண்டார்கள், காயங்களுக்கு அதுவே காரணம்" என்று கொலைகாரக் காவல் அதிகாரிகள் தந்துள்ள அங்கப்பிரதட்சண விளக்கம் காக்கி உடையில் பொங்கி வழியும் கொழுப்பின் அடையாளம்!

ஜெயராஜும் பென்னிக்சும் அந்த இரு காவல் அதிகாரிகளையும் தற்காப்பின் பொருட்டுக் கொலை செய்திருந்தால் இதே ஊர்மாற்றம் அல்லது பணியிடை நீக்கம்தான் தண்டனையா? காவல்துறையினர் பொதுமக்களைக் கொலை செய்தாலும் பொதுமக்கள் காவல்துறையினரைக் கொலை செய்தாலும் இரண்டும் கொலைக் குற்றம் என்பதுதானே சட்டம்? இரண்டுக்கும் தண்டனை ஒன்றுதானே?

ஜெயராஜ், பென்னிக்ஸ் இருவரையும் சிறைக்கனுப்பிய குற்றவியல் நீதியர் அவர்களிடம் காயங்கள் குறித்துக் கேட்டறிந்து சிறைக்கனுப்பாமல் மருத்துமனைக்கு அனுப்பியிருக்க முடியும். என்ன குற்றச்சாட்டு என்ற செய்தி குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டதா என்று வினவவும் இல்லை. காவல்துறையினர் நீட்டிய இடத்தில் ஒப்பமிட கறுப்புக் குப்பாயத்தில் ஒரு நீதிதேவன் தேவையா?

இந்த இரட்டைக் கொலையில் காவல்துறைக்கு நீதித்துறையும் சிறைத்துறையும் உடந்தையாக இருந்துள்ளன என்பது தெளிவாகிறது. ஊரடங்கை மீறி மக்கள் திரண்டு வந்து போராடியதால் மட்டுமே இந்த உண்மைகள் வெளிவந்துள்ளன.

உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை தானாகவே (suo motu) இந்த வழக்கை ஆய்விற்கெடுத்துக் கொண்டது வரவேற்கத்தக்கது. ஆனால் அரசுக்கும் காவல் துறைக்கும் அறிவுறுத்தல், மென்மையாகக் கண்டனம் தெரிவித்தல், எதிர்காலத்தில் பார்த்து நடக்கச் சொல்லுதல் என்பதைத் தாண்டி உயர் நீதிமன்ற நீதியரால் வேறொன்றும் செய்ய இயலாது என்றால், குறிப்பாக இந்த வழக்கில் கொலைக் குற்றவாளிகளைத் தளைப்படுத்திச் சிறையிலடைத்துக் கொலை வழக்குப் போட ஆணையிட முடியாது என்றால் அவர்கள் தீயணைப்பு வேலை செய்யாமல் வாளாவிருப்பதே நன்று.

உடுமலை சங்கர் கொலை வழக்கில் உயர் நீதித்துறையே சாதியாணவப் படுகொலைக்குத் துணை போவதையும், சாத்தான்குளம் ஜெயராஜ், பென்னிக்ஸ் இரட்டைக் கொலையில்

காவல்துறையே குற்றவாளியாக நிற்பதையும் தற்செயல் நிகழ்வுகளாகவோ ஒருசில தனிமனிதர்களின் பிறழ்வுகளாகவோ புரிந்து கொள்ளப் பட்டறிவு உதவாது.

ஒடுக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட மாந்தர்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்குகளில் உயர்நீதிமன்றம் குற்றவாளிகளைப் பாதுகாப்பது இது முதல் முறையன்று. இதே உயர்நீதிமன்றம்தான் 44 தலித்துகள் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட கீழவெண்மணி வழக்கில் பெருநிலக்கிழார்களை பெருநிலக்கிழார்கள் என்பதற்காகவே விடுவித்தது என்பதை மறப்போமா?

2009 பிப்ரவரி 19ஆம் நாள் உயர்நீதிமன்ற வளாகத்துக்குள்ளேயே நுழைந்து மணிக்கணக்கில் தடியடி செய்து ஒரு நீதியர் உட்பட வழக்கறிஞர்களை அடித்து மண்டை பிளந்த காவல்துறை வல்லூறுகளின் ஒரே ஒரு இறகைக் கூட இந்த மாண்புமிகு நீதியரசர்களால் பிடுங்க முடியவில்லை. இவர்களா மக்களைக் காக்கி விலங்குகளிடமிருந்து காப்பாற்றப் போகின்றார்கள்?

உலகம் மாறிக் கொண்டிருக்கிறது, அடக்குமுறையாளர்களே! உங்கள் காலம் மலையேறிக் கொண்டிருக்கிறது! மே 25ஆம் நாள் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மின்னியபோலிஸ் நகரில் ஜார்ஜ் பிளாய்டு என்ற கறுப்பினத்தவரை முழங்காலால் கழுத்து நெரித்துக் கொன்ற டெரெக் சொவின் என்ற வெள்ளைக் காவலரும் அவருக்குத் துணையாக இருந்த மூன்று காவலர்களும் சிறையிலடைக்கப்பட்டு அவர்கள் மீது வேண்டுமென்றே கொலை (intentional murder) செய்த குற்றம் சாட்டி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

ஜார்ஜ் பிளாய்டுக்காக அமெரிக்க தேசம் கொதித்தது போல் ஜெயராஜ், பெனிக்சுக்காக நம் தமிழ்த் தேசம் கொதிக்க வேண்டும். டெரெக் சொவினை அவர் மனைவியே தள்ளி வைத்தது போல் கொலைகாரக் காவல் அதிகாரிகளை அவர்களின் சொந்தங்களே தள்ளி வைக்க வேண்டும். ஜார்ஜ் பிளாய்டு கொலை வழக்கில் நான்கு காவல் அதிகாரிகளைக் கொலைக் குற்றச்சாட்டில் தளைப்படுத்திச் சிறையிலடைத்தது போல் ஜெயராஜ் பென்னிக்ஸ் இரட்டைக் கொலை வழக்கில் ரகுகணேஷ், பாலகிருஷ்ணன் உள்ளிட்ட காவல்துறையினரை ஆள் கடத்தல், கொலைக் குற்றச்சாட்டுகளில் தளைப்படுத்திச் சிறையிலடைக்க வேண்டும்.

மின்னசோட்டா காவல்துறை கலைக்கப்பட்டது போல் தமிழக்க் காவல்துறையையும் கலைத்து விடலாம். அது எப்போதோ ஈரல் கெட்டுப் போனதுதானே?

உடுமலை சங்கர் வழக்கில் தமிழக அரசு தன் கடமை முடிந்தது என்று ஒதுங்கிக்

கொள்ளாமல், உச்ச நீதிமன்றத்துக்கு மேல்முறையீடு செய்து சின்னச்சாமி, அன்னலட்சுமி உள்ளிட்ட குற்றவாளிகள் அனைவருக்கும் கடுந்தண்டனை பெற்றுத்தர முனைதல் வேண்டும். சங்கர் பெயரால் சாதியாணவக் குற்றங்களுக்கு எதிரான சட்டம் இயற்ற வேண்டும் என்ற கோரிக்கையில் தோழர் கௌசல்யாவின் குரலோடு எமது குரலையும் இணைத்துக் கொள்கிறோம்.

இந்தியக் குடியரசு என்பதே சாதிகளின் குடியரசுதான் என்பார் ஆனந்த் டெல்டும்ப்டே. இந்திய, தமிழகச் சமூகத்தின் ஒவ்வோர் உயிரணுவிலும் சாதியம் மறைந்தும் மறையாமலும் கோலோச்சுவது உண்மை, பேருண்மை! இதை மறைத்துப் பேசுவதே சாதியத்துக்கு ஆற்றும் பெருந்தொண்டு!

உடுமலைக்குப் பிறகும் தமிழ்நாட்டில் பல சாதியாணவக் கொலைகளும் கொடுங்குற்றங்களும் நிகழ்ந்துள்ளன. இந்த கொரோனா முடக்கக் காலத்தில் மட்டுமே இவ்வாறான நான்கு கொலைகள் நிகழ்ந்துள்ளன என்று செய்தி. இவ்வாறான கொலைகளைத் தடுப்பதில் மட்டுமல்லாமல், சாதி மறுப்புத் திருமணங்களை நடத்தி வைத்து இல்லறம் ஏற்ற இணையரைக் காப்பதிலும் முற்போக்கு இயக்கங்கள் தனிக்கவனம் செலுத்த வேண்டும். காதல் அரண் போன்ற முயற்சிகள் **மேலும் வீச்சுப் பெற வேண்டும்.**

உயர் நீதிமன்றத்தின் இந்த மோசமான தீர்ப்பை சாதிவெறி ஆற்றல்கள் கொண்டாடுவது நமக்கு ஓர் எச்சரிக்கை. காதலையும் காதலர்களையும் காக்கக் காவல் நிலையங்களையும் நீதிமன்றங்களையும் மட்டுமே நம்பியிருக்க மாட்டோம் என்பது நாம் அவர்களுக்கு விடுக்கும் எச்சரிக்கை. உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பையே எதிர்மறை உந்தலாய்க் கொண்டு சாதியாணவக் குற்றங்களுக்கும் கொலைகளுக்கும் எதிரான மக்கள் எழுச்சியைத் தோற்றுவிக்க உழைப்போம்!

ஜார்ஜ் பிளாய்டு கொல்லப்பட்ட போது நீதிக்காக நடைபெற்ற போராட்டத்தின் பதாகைகள் “கறுப்பு உயிர்கள் பொருட்டாகும்” (BLACK LIVES MATTER) என முழங்கின. கறுப்பு உயிர்கள் பொருட்டாகும் இயக்கம் பிறந்ததே ஒரு நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்துத்தான் என்பதை நினைவிற்கொள்வோம்.

2012 பிப்ரவரியில் பதின்ம அகவையர் ட்ரவ்யோன் மார்ட்டின் என்ற ஆப்பிரிக்க அமெரிக்கர் அதாவது கறுப்பின இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட வெள்ளையினக் காவல் அதிகாரி ஜார்ஜ் சிம்மர்மன் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். இதற்கு எதிராகத்தான் BLACK_LIVES_MATTER என்ற முழக்கம்

சுட்டுரையாக சமூக ஊடகங்களில் பரவலாயிற்று. இந்த முழக்கம்தான் அடுத்தடுத்த ஆண்டுகளில் கறுப்பின இளைஞர்கள் படுகொலைக்கு எதிரான நாடு தழுவிய இயக்கமாயிற்று. ஜார்ஜ் பிளாய்டு படுகொலைக்குப் பின் இது புயல் வேகம் கொண்டு அட்லாண்டிக் பசிஃபிக் கரைகளைக் கடந்து உலகெங்கும் பரவியுள்ளது.

சங்கர் வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் இருதரப்பினரும் மேல்முறையீடு செய்யலாம். முடிவு என்னவாக இருக்கும் என்று நம்மால் உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால் தலித் உயிர்கள் பொருட்டாகும் என்ற இயக்கத் தீயைப் பரவச் செய்ய இந்தத் தீர்ப்பிலிருந்தே நெருப்பு எடுக்க முடிந்தால் சங்கர் உயிருக்கு விலை பெற்றதாக இருக்கும்.

கறுப்பு உயிர்கள் பொருட்டாகும்! சங்கர் உயிர் பொருட்டாகும்! ஜெயராஜ் உயிரும் பென்னிக்ஸ் உயிரும் பொருட்டாகும்! சாதிய வன்கொடுமைக்கும் காவல்துறை வன்கொடுமைக்கும் எதிராக ஓங்கி ஒலிக்கட்டும் இந்த முழக்கம்!

---

மகிழன்

## களம் காலம்

**கடந்த 2020 மே 31 ஞாயிறு காலை 11 மணிக்கு சிறையில் பத்தாண்டு கழித்து முடித்த அனைவரையும் மத இன பேதம் பார்க்காமல் விடுதலை செய்யக் கோரி தமிழக மக்கள் ஜனநாயகக் கட்சி ஒருங்கிணைத்த இணையவழிப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் பங்கேற்றது, தோழர் தியாகு நேரலையில் உரையாற்றினார்,**

**மே 31 மாலை ஊரடங்கில் பறிபோகும் மக்கள் உரிமை / மதவெறி பாசிசத்துக்கு எதிராக… என்ற தலைப்பில் பாப்புலர் பிரண்ட் ஆஃப் இந்தியா நடத்திய இணையத்தள மாநாட்டில் பல்வேறு தலைவர்களும் கலந்து கொண்டனர். தோழர் தியாகு உரையாற்றினார்,**

**சூன் 2 மாலை (கோவை) குறிஞ்சி இணையக் கருத்தரங்கில் தோழர் தியாகு “பற்றியெரியும் அமெரிக்கக் கனவு” என்ற தலைப்பில் உரையாற்ற்றினார்.**

**சூன் 4 மாலை தமிழ்த் தேசிய விடுதலை இயக்க முகநூல் நேரலையில் மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் த, செயராமன் ”கொரோனாவால் தாக்குறும் தமிழக உரிமைகள்” என்ற தலைப்பில் உரையாற்றினார்.**

**சூன் 9 மாலை தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் முகநூல் நேரலையில்**

"கொரோனாத் தொற்றில் தமிழகக் கல்வி" என்ற தலைப்பில் தோழர் நலங்கிள்ளி உரையாற்றினார்.

சூன் 10 மக்கள் கண்காணிப்பகத்தின் ஒருங்கிணைப்பில் ஜார்ஜ் பிளாய்டு நினைவாக 'கறுப்பு உயிர்கள் பொருட்டாகும்' இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற மெய்ந்நிகர் உறுதியேற்புக் கூடுகையில் தமிழகத்தின் முதன்மையான தலைவர்களும் மாந்தவுரிமைச் செயல்பாட்டாளர்களும் உரையாற்றினர். த தே வி இ சார்பில் தோழர் தியாகு உரையாற்றினார். மதுரையில் தோழர் நா, கதிர்வேலும், கோவையில் தோழர் பாரதி, சுதா காந்தி உள்ளிட்ட தோழர்களும் நேரில் சுடர் வணக்கம் செலுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சூன் 11 மாலை (கோவை) சங்கமம், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் (குமரி மாவட்டம்) இணைந்து நடத்திய மெய்ந்நிகர் சந்திப்பில் தோழர் தியாகு "சிறைக்கதவே தாழ்திறவாய்" என்ற தலைப்பில் உரையாற்றினார். அற்புதம் அம்மாள், இலண்டனிலிருந்து யமுனா இராசேந்திரன் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

ஆஸ்திரேலியாவில் நியூ சௌத் வேல்ஸ் நாடாளுமன்றத்தில் பிராஸ்பெக்ட் தொகுதிக்கான தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஹக் மெக்டெர்மோட் ஈழத் தமிழர் இனவழிப்புக்கு எதிராகக் குரல் கொடுத்தார் எனபதற்காக, சிங்கள அரசின் ஆதரவுடன் அயல் நாடுகளில் வாழும் சிங்களப் பேரினவாதிகள் அவருக்குத் தீங்கு செய்ய முற்பட்ட போது, மெக்டெர்மோட் அவர்களுக்கு ஆதரவான ஒரு கையெழுத்து இயக்கம் உலகத் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்டது. இந்த இயக்கத்தில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கமும் முனைப்புடன் பங்கேற்றது. சூன் 13ஆம் நாள் தோழர் தியாகு ஆஸ்திரேலியத் தமிழர்களுக்கு வேண்டுகோள் விடுத்து நேரலையில் உரையாற்றினார்.

சூன் 13ஆம் நாள் "நீதியின் கேலிக்கூத்தைத் தோலுரிப்போம்!" என்ற முழக்கத்துடன் பாப்புலர் பிரண்ட் ஆஃப் இந்தியா மேற்கொண்ட நாடு தழுவிய பரப்புரை இயக்கத்தில் தோழர் தியாகு தோழமையுரை ஆற்றினார்.

சூன் 18 மாலை மக்கள் கண்காணிப்பகம் ஒருங்கிணைத்த நீதியர் ஹொஸ்பெட் சுரேஷ் நினைவேந்தல் உறுதியேற்பு இணையவழிக் கூடுகையில் தோழர் தியாகு உரையாற்றினார்.

சூன் 21ஆம் நாள் தமிழக மக்கள் ஜனநாயகக் கட்சி ஒருங்கிணைத்த "6 கோரிக்கைகளுக்கான இணையவழிப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கமும்

**பங்கேற்றது. கோரிக்கைகளை விளக்கித் தோழர் தியாகு நேரலையில் உரையாற்றினார், அந்த 6 கோரிக்கைகள் இவைதாம்:**

**மின் கட்டணத்தை அரசே செலுத்து!**

**சாலைகளில் சுங்கம் வசூலிப்பதை நிறுத்து!**

**வங்கிக் கடன் மற்றும் வட்டியை நீக்கம் செய்!**

**தனியார் பள்ளிக் கட்டணத்தை அரசே செலுத்து!**

**தனியார் மருத்துவமனைகளிலும் கொரோனா சிகிச்சையை இலவயமாக்கு!**

**வீட்டுக்கு வீடு மாதம் பத்தாயிரம் கொடு!**

**சூன் 21 மாலை சாதி ஒழிப்புப் போராளி, நீலப் புலிகள் நிறுவகத் தலைவர் டி எம் உமர் பாரூக் (தோழர் டி.எம் மணி) அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் "அங்கும் சிறை, இங்கும் சிறை" என்ற தலைப்பில் தோழர் தியாகு உரையாற்றினார். தோழர் புரட்சிமணி நிகழ்வுக்குத் தலைமையேற்றார்.**

**சூன் 25ஆம் நாள் மாலை "சாதிய முரண்பாடுகளைத் தொழிலாளி வர்க்கம் எப்படி எதிர்கொள்வது?" என்ற தலைப்பில் சென்னையைச் சேர்ந்த ஒரு தொழிலாளர் குழுவிற்குத் தோழர் தியாகு இணையவழி அரசியல் வகுப்பெடுத்தார்.**

---

## செங்காட்டான் குறிப்புகள்

### தோழர் திருமாறன்

அது 1982 அல்லது 83ஆம் ஆண்டு, நானும் தோழர் லெனினும் திருச்சிராப்பள்ளி மையச் சிறையில் வாழ்நாள் சிறையாளர்களாக இருந்தோம். எங்களை மற்றச் சிறைப்பட்டோருடன் சேர விடாமல் தனியாக வைத்திருந்ததால் எங்களுக்குச் சிறு உதவிகள் செய்வதற்காக ஏவலராக (ஆர்டர்லி) வேலைக்கு ஆள் அமர்த்துவார்கள். குறைந்த தண்டனை பெற்ற ஒருவர்தான் இப்படி வேலைக்கு வருவார். அப்படி எங்களிடம் வந்தவர்தான் சிறிதர் என்ற இளைஞர். திருட்டு வழக்கில் இரண்டு ஆண்டுக் கடுங்காவல் சிறைத்தண்டனை. ஊர் உடையார்கோவில் அங்கேதான் திருட்டு வழக்கில் சிக்கினார். சொந்த ஊர் அம்மாப்பேட்டை என்றார். எல்லாம் எனக்குப் பழகிய ஊர்கள், தயங்காமல் படபடவென்று பேசினார். பெயர் கேட்டேன் சொன்னார், "இந்தப் பெயர் வேண்டாம், திருமாறன் என்றே நாங்கள் கூப்பிடுவோம்." என்றேன். என் பழைய சென்னை நண்பர் ஒருவர் சிறிதர் என்ற பெயரை திருமாறன் என்று மாற்றிக் கொண்ட

நினைவுடன் இப்படிச் சொன்னேன். அது முதல் அவர் திருமாறன் ஆகி விட்டார்.

1974ஆம் ஆண்டு தோழர் ஏஜிகே தலைமையில் சிறைப்படுத்தப்பட்டோர் நலவுரிமைச் சங்கம் அமைத்து 25 கோரிக்கைகளுக்காக வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டம் நடத்திய பின் தமிழகத்தின் 9 மையச் சிறைகளையும் ஒருங்கிணைத்துப் போராடுவது எங்கள் கனவாக இருந்தது. தோழர் லெனினும் நானும் அதற்காகவே திட்டமிட்டு வேலை செய்து கொண்டிருந்தோம். சிறைக்குள் இரகசிய அமைப்பு ஒன்றைக் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தோம். சுதந்திர தாகம் என்ற திங்கள் கையேடு வெளியிட்டுச் சுற்றுக்கு அனுப்பினோம். இதற்கான தொடர்புப் பணிகளில் திருமாறனை ஈடுபடுத்த மெல்ல மெல்லப் பழக்கி வந்தோம். 50 கோரிக்கைகள் வரைந்து சிறையமைப்பில் விவாதித்து இறுதி செய்து முடித்தோம். பிற மையச் சிறைகளிலும் அமைப்பை விரிவாக்க முயன்று கொண்டிருந்தோம். இந்தப் பணிகளில் நாங்கள் ஒதுக்கிய வேலைகளைக் கவனமாகச் செய்து திருமாறன் இப்போது எங்கள் தோழராகியிருந்தார்.



காலவரையற்ற பட்டினிப் போராட்டத்துக்கு உறுதியான ஒரு குழுவைத் தெரிவு செய்ய வேண்டியிருந்தது. நான் அவ்வளவு கறாராக இருக்க மாட்டேன் என்பதால் இந்தப் பொறுப்பைத் தோழர் லெனின் ஏற்றுச் செய்தார். உள்ளே நாங்கள் அமைத்திருந்த தொகுதிக் குழுக்கள் தேர்ந்தெடுத்து அனுப்புகிறவர்களை நேர்காணல் செய்து கடுமையாக வடிகட்டி, சாகும்வரை உண்ணாமலிருக்க அணியமானவர்களை மட்டும் லெனின் தெரிவு செய்வார். 1974 போராட்டப் பட்டறிவைக் கருத்தில் கொண்டு அவர் கடுமையாக நடந்து கொண்டார்.

ஒருநாள் திருமாறன் என்னிடம் "உங்களோட நானும் உண்ணாவிரதம் இருக்கலாம்னு ஆசைப்படுறன். அண்ணன் கிட்ட சொல்லி என்னை சேத்துக்க சொல்லுங்க" என்றார். நான் லெனினிடம் சொன்ன போது, "என்ன தியாகராஜா விளையாடுறியா? அதெல்லாம் முடியாது" என்றார். மேலும் இந்தக் குழுவில் இடம் பெற்றவர்கள் அனைவரும் ஜென்மக்காரர்கள், இவன் வெறும் ரெண்டு வருசக்காரன் என்றார். ஆனால் திருமாறன் விடுவதாக இல்லை. இறுதியாகத்

தேர்வு செய்யப்பட்ட 16 பேர் குழுவில் அவரும் இடம் பெற்று விட்டார். அது மிகப் பெரிய போராட்டம். பாளையங்கோட்டை தவிர எல்லா மையச் சிறைகளிலும் போராட்டம் பரவலாக நடைபெற்றது. அப்போதைய டிஐஜி வித்யாசாகர் “என்னய்யா, திருச்சில என்னய்யா பண்றிங்க? இங்கதான்யா ஹெட்குவார்ட்டர்? ஒடுக்குங்கய்யா” என்று எங்கள் எதிரிலேயே கொக்கரித்தார்.

நானும் லெனினும் உட்பட 15 பேர் காலவரையற்ற பட்டினிப் போராட்டாத்தில் இருந்தோம். திருமாறன் இந்தக் குழுவில் இருப்பது சிறையதிகாரிகளுக்குப் பெரிய உறுத்தலாக இருந்தது. சிறை முழுக்கவும் பல்வேறு வடிவில் போராடிக் கொண்டிருந்தது. எங்கள் குழுவில் ஒருசிலர் நலிவுறத் தொடங்கிய போது எங்களைச் சிறை மருத்துவ மனையில் கொண்டுபோய்ப் படுக்க வைத்தனர். 12 அல்லது 13ஆம் நாள் திருமாறன் மயங்கி விட்டார். மருத்துவர்கள் ஊசிபோட்டு குளுக்கோஸ் ஏற்ற முயன்ற போது விழித்துக் கொண்டு தட்டி விட்டார். எவ்வளவு சொல்லியும் அசைந்து கொடுக்கவில்லை. சிறையலுவலர் (ஜெயிலர்) வந்தார். திருமாறனிடம் எடுத்துச் சொன்னார்: “ஒங்க தோழர் ரெண்டு பேரும் சொல்றாங்கண்ணு கேட்காதே. எல்லாம் ஜென்மக்காரன். அவன் கோரிக்கைக்காகப் போராடுறான். பத்து வருசம் கழிச்சவனை விடுதலை பண்ணுங்கறான், நீ ரெண்டு வருசக்காரன். சரின்னு சொல்லு, மார்க்கு போட்டு நாளைக்கே ரிலீஸ் பண்றன். நீ இப்படியே இருந்தின்னா முழுசா ரெண்டு வருசம் கழிச்சுதான் வெளிய போக முடியும், என்ன சொல்ற?” திருமாறன் நிதானமாகச் சொன்னார்: “ஐயா, நான் உசுர் பொழைச்சு வீடு போகணும்னு இதில சேரலிங்கய்யா. எனக்கு மார்க்கே வேணாங்கய்யா. இவங்களோட இருக்கிறதுக்கு அப்பறம் வாய்ப்புக் கிடைக்காதுங்க.” அதிகாரி வாயடைத்துப் போனார்.

போராட்டம் முடிந்து சில மாதகாலம் திருமாறன் எங்களோடு இருந்தார். வெளியே போய் என்ன செய்யலாம்? ஊருக்குப் போனால் மீண்டும் மீண்டும் பொய் வழக்குப் போட்டு உள்ளே தள்ளி விடுவார்கள். வேறு எங்காவது அனுப்ப வேண்டும்? வயிற்றுப்பாட்டுக்கு என்ன செய்வது? “ஒரு பழைய சைக்கிள் இருந்தால் பிழைத்துக் கொள்வேன்” என்றார். அதற்கு 300 ரூபாய் இருந்தால் போதும்.

பந்துவாக்கோட்டை தோழர் லெனின் இல்லத்துக்கு அனுப்புவது, சிபிஎம் கட்சியிடம் 300 ரூபாய் கொடுக்கச் சொல்வது என்று முடிவு செய்தோம். அப்போது திருச்சியில் டி.கே. ரெங்கராஜன், கே, வரதராஜன் ஆகிய தோழர்கள் இருந்தார்கள். அவர்களுக்குச் சொல்லியனுப்பினோம். “சரி, கொடுப்போம், ஆனால் 300 ரூபாயை வைத்துக் கொண்டு என்னசெய்வது? மூலதனம் மொழிபெயர்த்த தோழர் தியாகுவுக்கு நடைமுறைப் பொருளாதாரம் தெரியவில்லையே?” என்றார்களாம்.

திருமாறன் விடுதலையான பின் பந்துவாக்கோட்டை சென்று அம்மா, தங்கைகளோடு இருந்து கொண்டார். பழைய சைக்கிள் வாங்கி இரண்டு மூன்று நாளைக்கு ஒரு முறை ஜெகதாப்பட்டினம், மல்லிப்பட்டினம் சென்று கருவாடு வாங்கி வருவார், சைக்கிளிலேயே ஊர் ஊராகப் போய் விற்று வருவார். ஓய்வு கிடைக்கும் போது மானாவரி நிலத்தில் பயிர்ச் செலவும் செய்வார். எங்கள் குடும்பத்துக்கு உதவியாகவும் பாதுகாப்பாகவும் இருந்தார். கொஞ்சம் காசு பணம் சேர்த்துக் கொண்டு திருவாரூர் சென்று கமலாலயக் கரையில் தேநீர்க்கடை வைத்துப் பிழைக்கலானார்.

திருமாறன் பின்னணியைத் தெரிந்து கொண்டு திருவாரூரில் காவல்துறை தொல்லை கொடுக்கத் தொடங்கியது. எங்கே திருட்டுப் போனாலும் அவரைக் கூப்பிட்டு விசாரிப்பார்கள். ஒரு முறை உயரதிகாரி ஒருவரிடம் அவர் என் பெயரைச் சொன்னாராம். “நீ சொல்வது உண்மையானால் நான் உனக்காக எதுவும் செய்வேன்” என்றாராம் அவர், பிறகு உண்மைதான் என்று உறுதி செய்து கொண்டு “உன் பெயரை லிஸ்ட்லேருந்து எடுத்தாச்சு, போய் வேலையைப் பார்” என்று அனுப்பி விட்டாராம்.

அவர் வாழ்க்கையில் திருமணம் நடந்து குழந்தைகள் பிறந்தன, அவர்களை நன்கு படிக்க வைத்தார். என்னோடு தொடர்ந்து தொடர்பில் இருந்தார். அரசியலிலும் ஈடுபாடு இருந்தது, என்னை “தலைவரே” என்றுதான் அழைப்பார். திருவாரூர் செல்லும் போதெல்லாம் அவர் கடையில்தான் உணவு! என் குறிப்பறிந்து உதவுவார், தமிழ்த் தேசிய முன்னணி அமைத்த போது கமலாலயக் கரையில் தன் தேநீர்க் கடையின் எதிரில் கொடியேற்றி வைத்தார். முன்னணி செயல்பாடுகளில் முடிந்தவரை உதவியாக இருந்தார். முன்னணி கலைந்து போனபின் அவரது அரசியல் ஈடுபாடும் மங்கி விட்டது. கடைசியாக இந்திய ஜனநாயகக் கட்சியில் திருவாரூர் மாவட்டச் செயலாளராக இருந்தார்.

கடைசியாக மார்ச் 12 இரவு கூத்தாநல்லூரில் பேசி விட்டு திருவாரூர் வந்துதான் தொடர்வண்டியேறினேன். பிறகு ஒரு நாள் திருமாறனிடமிருந்து அழைப்பு “என்ன தலைவரே, திருவாரூர் வந்து விட்டு சொல்லால் போய் விட்டீர்களே?” என்று வருத்தமாகப் பேசினார். சரிய்யா, அடுத்த முறை வருகிறேன் என்றேன்.

மே தொடக்கத்தில் தமிழர் தன்மானப் பேரவை தோழர் பிரகாஷ் அழைத்துச் சொன்னார்: “ஐயா, ஏப்ரல் 24ஆம் தேதி திருமாறன் திடீர்னு செத்துட்டாராம். மாரடைப்பாம்! கொரோனா ஊரடங்குனால உடனே தெரியாமப் போச்சு” என்றார். எனக்கு ஒரு தோழனை இழந்ததை விடவும் ஒரு பிள்ளையை வளர்த்துப் பறிகொடுத்த உணர்வு!

திருமாறனின் மகன் தினேஷ், காவல் துறையில் பணி செய்கிறார், ”தலைவரே, நம்ம வீட்ல ஒரு போலீஸ்காரன்” என்று அவர் சொல்லிச் சிரித்தது கண்ணில் நிற்கிறது. மகள் வெளிநாட்டில் இருக்கிறார். வாழ்க்கையின் சுழற்சிதான் எவ்வளவு வியக்கத்தக்கது!

போராட்டம் ஒரு மனிதனை எப்படி மாற்றியமைக்கும் என்பதற்கு நான் கண்ட சான்றுகளில் ஒருவராக எனக்கு என்றென்றும் திருமாறன் இருப்பார்.

---

**சிலம்புச்செல்வன்**

## ஈழம் மெய்ப்படும்:

## உணர்ச்சிகளை விலக்கிய மெய்மை நோக்கிய பயணம்.

தற்போதைய ஈழம் தொடர்பான 'கருத்து' மோதல்கள் கருத்து என்ற எல்லையைத் தாண்டிப் பெரும்பாலும் உணர்ச்சிகளுக்குள் சென்று விடுகின்றன. அங்கு இரைச்சல்களும் எதிரொலிகளுமே அதிகம். எனவே மெய்மை என்பது குரல்களின் எதிரொலிகளில் மூழ்கடிக்கப்பட்டு விடுகிறது. தற்போதைய ஈழம் தொடர்பான பல்வேறு விவாதங்களும் இந்த எல்லைக்குள்ளேயே அமைந்து விட்டது துயரமானது.

இந்த சூழலில்தான் "ஈழம் மெய்ப்படும்" என்பதை முன்வைத்து தோழர் தியாகுவால் எழுதப்பட்ட தொடரானது அருமையானதொரு முயற்சியாகும். தலைப்பில் மட்டும் ஈழம் மெய்ப்படும் என்று கூறுவதோடு நில்லாமல் அதன் நோக்கங்களை நிறைவு செய்வதை நோக்கி அனைத்துக் கோணங்களிலும் அவரது தூரிகை பயணிக்கிறது.

தனது பயணத்திற்கு மெய்மைகளிலிருந்து உண்மைக்கு (From facts to the truth) என்பதை வழிமுறையாக முன்வைக்கிறார் இது பயணத்தை வழிநடத்தும் கருவியாக அவருக்குத் துணை செய்கிறது.

ஈழம் தொடர்பாகப் பல்வேறு பிரிவினர் கருத்துக்கள் கூறினாலும், அவர்களில் தொடக்கம் முதலே ஈழ விடுதலைப் போராட்டத்தில் பங்காற்றியவர்களும் தோழர் தியாகுவின் உற்ற தோழர்களுமான கொளத்தூர் மணி, பேராசிரியர் சுப.வீ, பெ.மணியரசன் ஆகியோரின் அறிக்கைகளை மட்டும் இங்கு விவாதத்துக்கு எடுத்துக் கொள்கிறார்.

அவர்களின் கருத்துகளிலிருந்து குறிப்பாக நான்கு கேள்விகளை மட்டும் முன்வைத்து இத்தொடரின் மூலம் விடை தேட முயல்கிறார். (1) தமிழின அழிப்புப் போரில் இந்தியாவின் பங்கு என்ன? (2) திமுகவின் பங்கு என்ன? (3) ஈழப் போராட்டத்தின் இன்றைய நிலை என்ன? (4) இந்த அடிப்படையில் நாம் செய்ய வேண்டியது என்ன? ஆகிய இவையே முதன்மையான கேள்விகள்.

இந்தியாவின் பங்கு தமிழின அழிப்புப் போரில் அறுதியிடப்பட்ட உண்மை. இனப்படுகொலையில் இந்தியாவின் பங்கு குறித்து நம்முன் பல்வேறு தரவுகளும் ஏராளமாகக் கொட்டிக் கிடக்கின்றன. அவற்றையெல்லாம் ஈழ ஆதரவாளர்களாகிய நாம் எடுத்து பேசுகின்ற ஒரே காரணத்திற்காகவே பலரும் மறுக்கலாம். ஆனால் உலக நாடுகள் ஏற்றுக்கொண்ட அமைப்பான ஐநாவின் அறிக்கைகளை ஒருவர் மறுக்க இயலாது. எனவே ஐநா அறிக்கைகளையும் டப்ளின், பிரெமன் தீர்ப்பாயங்களின் அறிக்கைகளையும் நார்வே நாட்டின் அரசு சாரா அமைப்பு வெளியிட்ட அறிக்கைகளையும் சான்று காட்டி இந்திய அரசு இனப்படுகொலைப் போரில் கூட்டுக் குற்றவாளி என்பதை நிறுவுகிறார்.

அவ்வாறு நிறுவும் போது இந்தியாவின் பங்கைக் கூட்டியோ குறைத்தோ அவர் மதிப்பிடவில்லை. சிலர் இந்தியாதான் போரை நடத்தியது என்பதன் மூலம் இந்தியாவின் பங்கை மிகைமதிப்பீடு செய்கின்றனர். மற்றும் சிலர் இந்தியா மட்டுமல்ல உலக நாடுகள் பலவும் இணைந்தே செய்தன என்று கூறுவதன் மூலம் இந்தியாவின் பங்கைக் குறைத்து மதிப்பிடுகின்றனர். இவ்வாறு பிழையான மதிப்பீடுகளின் நடுவில் தோழர் தியாகுவின் கருத்தானது குன்றிலிட்ட விளக்காய் ஒளிர்கிறது.

அடுத்து இங்கு எழுகின்ற துணைக் கேள்வி: இந்தியா நினைத்திருந்தால் போரை நிறுத்தி இருக்க முடியுமா? இல்லையா? என்பது. இது 'புலி புல்லைத் தின்னுமா?' என்ற பழமொழியை ஒத்தது. ஏனெனில் போரைத் திட்டமிட்டு வழிநடத்திய கூட்டாளியான இந்தியா எவ்வாறு போரை நிறுத்த விரும்பும்? இதைத்தான் "இந்த இறுதிக் கட்டத்தில் இந்தியாவே நினைத்திருந்தாலும் போரை நிறுத்தி இருக்க முடியாது என்பதைவிட இந்தியா அப்படி நினைத்திருக்கவே வாய்ப்பில்லை" என்று மதிப்பிடுகிறார்.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

இந்தியா போரை நிறுத்த எப்போது முடிவெடுத்திருக்கும். அது விரும்பவில்லை என்றாலும் தமிழகத்தில் வலுவான எதிர்ப்பு உண்டாகி இருந்திருப்பின் அந்த நெருக்கடியில் அது பின்வாங்கி இருக்கலாம். இது ஒரு கணிப்பு மட்டுமே இதை "இந்தியாவுக்கு தமிழகம் போதிய அழுத்தம் தந்து, புலிகளும் ஓரளவு வலிமையோடு களத்தில் நின்றிருந்தால் இந்தியாவால் போரை நிறுத்தி இருக்க முடியும்" என்று கணிக்கிறார்.

விவாதத்தின் இரண்டாவது புள்ளி திமுகவின் பங்கு பற்றியது. திமுக இறுதிப் போர் நடந்த காலத்தில் இந்திய நடுவண் அரசின் அமைச்சரவைக் கூட்டாளியாக இருந்தது. தமிழகத்தில் திமுக ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. திமுக தலைவர் கருணாநிதி முதலமைச்சராக வீற்றிருந்தார். ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் என்ற முறையில் அவர்கள் மீது கேள்வி எழுவது ஞாயமானது.

இங்கு ஒரு சிக்கல் குறித்துக் குறிப்பிட்டாக வேண்டும். அது நெடுங்காலமாகத் தமிழக அரசியலில் நிலவிவரும் குழப்பமும் கூட. அது குறித்து முடிவெடுக்கும் போது பல கட்சிகளும் இயக்கங்களும் கூட குழம்பி விடுகின்றன. என்னவெனில் ஒரு கட்சியை ஆட்சிப் பொறுப்பில் வைத்து மதிப்பிடுவதற்கும் தனித்து அந்த கட்சிக்கான கொள்கை மற்றும் செயல்பாட்டை வைத்து மதிப்பிடுவதற்கும் உள்ள இடைவெளியாகும். பலரும் இவ்விரு இடைவெளிகளையும் புரிந்து கொள்ளாமல் ஒன்றாக்கி விடுகின்றனர்.

அவ்வாறு ஒன்றாக்கும் போது திமுக போன்ற ஒரு கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் போது அதன் நடவடிக்கைகளை மதிப்பிடுவதற்கும் கட்சி என்ற வகையில் அதன் கொள்கைகள், நடவடிக்கைகளை வேறுபடுத்தி மதிப்பிடுவதற்கும் உள்ள வேறுபாடுகளை மறந்து விடுகின்றனர்.

சுருக்கமாகக் கூறினால் ஆட்சிப் பொறுப்புக்கும், கட்சிப் பொறுப்புக்கும்; ஆட்சித் தலைவருக்கும், கட்சித் தலைவருக்கும் உள்ள வேறுபாட்டை மறந்து குழப்புகின்றனர். இந்த வேறுபாட்டைப் பிரித்து வகைப்படுத்தி நுட்பமாகக் கையாள்கிறார் தோழர் தியாகு.

இறுதிப் போர் நடைபெற்ற ஆண்டுகளில் திமுக இந்திய நடுவண் அரசின் அமைச்சரவையில் அங்கம் வகித்தது. அது மட்டுமன்றி அதன் நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும்

அது பங்கெடுத்தது. அந்த வகையில் ஈழத்தின் மீதான இந்திய அரசின் முடிவுகளில் இலங்கையுடன் இணைந்து போர் நடத்தியதில் திமுகவுக்கு பங்குண்டு.

இரண்டாவதாக திமுக தலைவர் கருணாநிதி தலைமையிலான தமிழக அரசு ஈழ ஆதரவுப் போராட்டங்களைக் கடுமையாக ஒடுக்கியது. பலர் மீது கருப்புச் சட்டங்களைப் போட்டு வழக்குப் பதிந்தது. இது அனைவரும் அறிந்ததும் அனுபவித்ததுமான உண்மை ஆகும்.

எனவே திமுகவும் அதன் தலைவர் கலைஞர் கருணாநிதியும் போரை நிறுத்தியிருக்க முடியுமா? இல்லையா? என்பது முகன்மையானதல்ல. போரில் அவர்களின் பங்கு என்ன என்பதே முகன்மையானது. அது சிறுமப் பங்காக இருக்கலாம் பெரியதாக இருக்கலாம். ஆனால் பங்கு உண்டு என்பதே தெள்ளத் தெளிந்த உண்மை. இது சிலருக்குக் கசப்பாகவும் இருக்கலாம். கசப்பான மருந்துதான் நோயைத் தீர்க்க வல்லது.

திமுகவின் இந்தக் குற்றம் விமர்சிக்கப்பட வேண்டியதுதான். அதேவேளை அதைத் தாண்டி ஒரு கட்சியின் தலைவராக கலைஞர் கருணாநிதி அன்று ஈழ ஆதரவுப் போராட்டங்களை முன்னெடுத்தார் என்பதும் மற்றொரு மறுக்க முடியாத உண்மை.

திமுக என்ற கட்சியையும் அதன் தலைவரையும் ஈழப் போரின் இறுதி நாட்களில் 2008-2009 காலத்தில் இருந்து மட்டும் மதிப்பிடாமல் ஈழ விடுதலைப் போராட்டத்தின் தொடக்கக் காலத்தில் இருந்தும் அதன் பின்பு இனவழிப்பு போர் நடைபெற்றதற்கு பின்பான தற்போதைய நாட்கள் வரையிலும் சேர்த்து இணைந்த ஒரு மொத்த மதிப்பீடே நமக்குத் தேவை. அப்படிப்பட்ட ஒரு மதிப்பீட்டை வந்தடைகிறார் தோழர் தியாகு. அதற்கு அவர் பல்வேறு வரலாற்றுச் சான்றுகளையும் முன்வைத்துள்ளார்.

ஒருவேளை இப்படி ஒரு மதிப்பீட்டிற்கு வரவில்லை எனில் என்ன நடக்கும். திமுக என்ற கட்சியின் பின் திரட்டப்பட்டுள்ள பல லட்சக்கணக்கான தொண்டர்களையும், கோடிக்கணக்கான பற்றாளர்கள்களையும் ஈழச் சிக்கலின்பால் கவனம் குவிக்கும்படி செய்ய முடியாது. அது ஈழப் போராட்ட நலன்களுக்கு எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும்.

அடுத்து விவாதத்தின் மூன்றாவது நடுவம் ஈழப் போராட்டத்தின் இன்றைய நிலை என்ன?

என்பது குறித்தது. அதில் இரண்டு கருத்துக்கள் அலசப்படுகின்றன

முதல் கருத்து ஈழத்தில் தற்போது நடைபெற்று வரும் போராட்டங்கள் குறித்தது. அரசியல் கைதிகள் விடுதலைப் போராட்டம், காணாமல் போனோருக்காக நடத்தப்படும் போராட்டம், சிங்களப் படையை தமிழீழத்தில் இருந்து வெளியேற்றக் கோரி நடக்கும் போராட்டம், சிங்களப் படையால் கைப்பற்றப்பட்ட நிலங்களை (காணிகளை) ஒப்படைக்கக் கோரும் போராட்டம் எனப் பலவும் ஈழத்தில் நடைபெற்று வருகின்றன. பத்தாண்டுகளுக்கு முன் நடைபெற்றதையே தற்போதும் பேசுவதா? என்று கூறும் தோழர் கொளத்தூர் மணியே கூட இப் போராட்டங்கள் குறித்து பல கூட்டங்களில் வியந்து பேசியுள்ளார்.

தோழர் தியாகு இக்கோரிக்கைகளுக்கான போராட்டங்கள் எவ்வாறு ஈழவிடுதலை போராட்டத்துடன் இணைந்தவை என்பதை வரலாற்றுச் சான்றுகளுடன் இணைத்து நிறுவுகிறார். அவர் இந்தக் கோரிக்கைகளில் இருந்து ஈழவிடுதலை என்னும் இலக்குக்கு (கோட்பாட்டுக்கு) செல்லும் வழிமுறையின் மெய்மையை விளக்கப்படுத்துகிறார். வேறொரு வகையிலும் இதை ஒப்பிட்டு பார்க்க முடியும். சிங்கள தேசமும் சிங்கள அரசும் இன ஒடுக்குமுறைக் கொள்கைகளைக் கைவிடாத வரை ஈழவிடுதலை என்பதற்கான வரலாற்று தேவைகள் இருந்து கொண்டேதான் இருக்கும். அதாவது தமிழீழ மக்களின் முதன்மை முரண்பாடு என்பது தமிழீழத்தின் மீதான சிங்கள அரசின் இன ஒடுக்குமுறைக்கும் அதை எதிர்த்த தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்துக்குமானதாக இருக்கும் இக்கோட்பாட்டிலிருந்தும் நாம் இன்றைய தமிழீழ மக்களின் போராட்டங்களை அணுகலாம்.

இரண்டாவது கருத்து என்பது சிங்களவர்கள் என்பவர்கள் ஆரியர்களே என தோழர் பெ.ம. அடையாளப்படுத்துவது குறித்து. சிங்களர்கள் தங்களது வரலாற்றுப் பெருமிதங்களுக்காகப் புனைந்து கொண்ட ஒரு புனைவை அவர்கள் கூறி விட்டார்கள் என்ற ஒரே காரணத்திற்காக எவ்வித ஆய்வு நோக்கமும் இன்றி ஏற்றுக் கொண்டு வாதிடுவது. இது எவ்வாறு தமிழீழ விடுதலைக்கு ஊறு செய்யும் என்பது குறித்துத் தரவுகளுடன் விளக்குகிறார் தோழர் தியாகு. தமிழகத்திலும் சாதிச் சங்கங்களைச் சேர்ந்த சிலர் ஆண்ட பரம்பரைப் பெருமிதங்களைக் கூறி வருகிறார்கள் அல்லவா, அவற்றுக்கும் இது பொருந்தும்.

ஈழம் தொடர்பான இந்த விவாதங்களின் ஊடாக எழுந்த மற்றொரு துணை விவாதமும் குறிப்பிடத்தகுந்தது. அது தமிழகத்தையும் தமிழீழத்தையும் ஒன்றாக வைத்து அணுகுவது குறித்தது. அவ்வாறு அணுகும் சிலர் தமிழகத்தையும் தமிழீழத்தையும் ஒரே சமூகம் போலவும் அதில் நிலவும் சிக்கல்களும், அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளும், தாக்குதல் இலக்குகளும் ஒன்று போலவும் ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகின்றனர்.

தோழர் பெ.ம வும் இவ்வரிசையில் இணைந்து கொள்கிறார். தமிழகத்திற்கும் தமிழீழத்திற்கும் ஒரே எதிரி இந்திய அரசுதான் என்று கூறுகிறார். இது கேட்க இனிமையான கருத்தே தவிர கடுகளவும் உண்மை இல்லை. இது தாக்குதல் இலக்கை திசைதிருப்பி தமிழீழ விடுதலைக்கு ஊறு செய்வதாகும்.

இது போலவே தந்தை பெரியார் ஈழத்திற்கு உதவ மறுத்தார் என்ற கருத்தையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு அல்லது பிரபாகரன் என்ற தனியொரு தலைவர் என்ற அடையாளத்துக்குள் அடைக்க முயலும் தவறான போக்குகளையும் பார்க்க முடிகிறது. அவற்றையும் இந்த விவாதத்தில் பகுப்பாய்வு செய்கிறார்.

இறுதியாக நாம் என்ன செய்யவேண்டும் என்ற கேள்வி எழுகிறது. தமிழீழ விடுதலையில் அக்கறை கொண்ட தோழர்கள் அனைவரும் தமிழீழம் என்ற கோரிக்கைக்காக ஒன்றிணைய வேண்டும் அதை எவ்வாறு செய்வது?

அதைப் புரிந்து கொள்ள இங்கு மற்றொரு சிக்கலை நுணுகிப் பார்க்க விரும்புகிறேன். தேர்தலில் பங்கேற்காத அமைப்புகள் மற்றும் இயக்கங்களில் நிலவுகின்ற குழப்பம் என்பது திமுக போன்ற தேர்தல் கட்சிகளை ஒருசில அமைப்புகள் ஆதரிக்க நேர்கிற போது அதை வைத்து மக்கள் நலன்சார்ந்த கொள்கை முடிவுகளோடு அவற்றை போட்டு குழப்பிக் கொள்வது.

இதனால் ஒன்றாக இணைந்து நிற்க வேண்டிய சிக்கல்களில் கூட உடன் இணைந்து நிற்காமல் ஒருவரோடு ஒருவர் மோதிக்கொள்வது. எடுத்துக்காட்டாக தோழர்கள் கொளத்தூர் மணி, சுப.வீ இருவரும் தற்போது திமுகவுடன் நெருக்கம் காட்டி வருகின்றனர். தோழர் பெ.ம திராவிட இயக்கங்களைக் கடுமையாக விமர்சித்து வருகிறார். இம்மூவரும் இந்த

அணுகுமுறையை ஈழம் குறித்த கொள்கை அணுகுமுறையிலும் பிரதிபலிக்கின்றனர். விளைவு ஈழச் சிக்கலில் தற்போது தமிழக இயக்கங்களின் ஒற்றுமைக்கு இது ஊறு விளைவிப்பதாக மாறி விட்டது.

ஈழ விடுதலை மட்டுமல்ல, வேறு எந்தத் தமிழக உரிமைக் கோரிக்கைக்கும் இந்த நிலை ஏற்படலாம் எனவே இது கவலையோடு, அக்கறையோடு அணுகி தீர்க்கப்படவேண்டிய சிக்கலாகும்.

தோழர் தியாகு ஈழத்துக்கு என்ன செய்ய வேண்டும் என்று இறுதியாகத் தொகுத்து முன்வைப்பதில் இந்த சிக்கலை களையவேண்டும் என்ற அக்கறை வெளிப்படுகிறது.

தலைவர்கள் தமது அமைப்புகள், கொள்கைகள், வழிமுறைகள் குறித்து தோழமைவழி விவாதங்களை மேற்கொள்வதில் தவறில்லை. ஆனால் அவற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழீழக் கோரிக்கை என்ற ஒற்றைக் கருத்தியலை சிதைவடைய விடக்கூடாது. தேர்தல் நிலைப்பாடுகள் அல்லது ஒரு கட்சியை ஆதரிப்பது / எதிர்ப்பது ஆகியவை அந்தந்த இயக்கங்கள் சார்ந்த முடிவுகளே தவிர அவற்றையும் ஈழத்தையும் இணைத்துக் குழப்பிக் கொள்ளவும் அதன் வழியில் ஈழக் கோரிக்கையை சிதைவடையும் விடக்கூடாது.

ஈழத்தை ஆதரிக்கும் போது கவனம் கொள்ள வேண்டிய மற்றொன்று தமிழீழத்தின் ஈழத்தமிழர்களின் வரலாற்று பூர்வமான கோரிக்கைக்கு நமது முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்க வேண்டுமே தவிர, நமது கருத்துகள், முடிவுகளை ஈழத்தின் மீது ஏற்றி ஈழப் போராட்டத்திற்கான இலக்குகளை பாதிக்கும் படி செயல்பட கூடாது.

இங்ஙனம் விவாத இறுதியில் தோழர் தியாகு முன்வைத்துள்ள இந்த ஆணித்தரமான கருத்து அனைவரும் ஏற்று செயல்படுத்த முன்வர வேண்டிய கருத்தாகும். அது நம்மைப் போன்றவர்களை மெய்மையின் பக்கம் நிற்கச் செய்வதாக மாற்றுகிறது. நமது கடமையானது இத்துடன் நின்று விடாமல் இந்த மெய்மையை அனைவரும் ஏற்கும்படி செய்ய வேண்டும்.

சமந்தா

# தற்சார்பிற்கு இறுதிச்சடங்கு செய்யும் பாஜக அரசு

மெகா பட்ஜெட் திரைப்படங்களுக்கு விளம்பரம் கொடுப்பது போல் இரண்டாம் நிதித் தொகுப்பு இதோ வருகிறது அதோ வருகிறது என்று 7-8 வாரங்களுக்கு ஓட்டினார்கள். நாமும் பெரிதாக எதிர்பார்ப்புக்கு உள்ளாக்கப்பட்டோம், 10% ஜிடிபி மதிப்பளவில் 20 லட்சம் கோடி நிதித் தொகுப்பு என்றார்கள். கடைசியில் பார்த்தால் 'தாராள' மனதுடன் இல்லாத கணக்கில் எழுதப்பட்ட வெற்றுக் காசோலையைத் தந்துள்ளார்கள். கண்ணில் காசைக் காட்டாமலே அதில் பல கட்டங்களையும் காட்டியுள்ளார்கள். உடனடி துயர்துடைப்பு நிதி எதுவும் வழங்காமல் யாவும் வருங்காலத்திற்கான கடன் திட்டங்களாகவே அறிவிக்கப்பட்டுள்ளன. தலைமை வங்கி எவ்வளவுதான் வங்கிக் கடன் வீதத்தைக் குறைத்தாலும், அதன் பயன்பாடு இடைநிலையில், கடைநிலையில் உள்ள பயனாளிகளை அடையவே இல்லை என்பதுதான் எதார்த்தம். தலைமை வங்கி வங்கிகளைக் கடன் வழங்கச் செய்வதற்காகவும், பணப் புழக்கத்தை அதிகரிக்கவும் தலைகீழ் வங்கிக் கடன் வீதத்தை ('ரிவர்ஸ் ரெபோ') 3.75%ஆகக் குறைத்துள்ளது. இது வங்கிகளிடமிருந்து தலைமை வங்கி பெறும் வைப்புத் தொகைக்கான வட்டிவீதம். வங்கிகள் வாராக் கடன் ஏற்படும் வாய்ப்புகளைக் குறைக்க அதீத எச்சரிக்கை உணர்வுடன் செயல்படுகின்றன. அதனால் வட்டிவீதம் குறைந்தாலும் சரி, கடன் கொடுப்பதற்கு பதில், தலைமை வங்கியிலேயே பணம் பாதுகாப்புடன் இருக்கட்டும் என 8.5 லட்சம் கோடிக்கும் அதிகமான தொகையை கடன் கொடுக்கப் பயன்படுத்தாமல், தலைமை வங்கியில் வரவு வைத்துள்ளன.

பணக் கொள்கையில் என்னதான் தலைகீழ் மாற்றங்கள் கொண்டு வந்தாலும், நடைமுறையில் இங்கிருக்கும் வங்கி அமைப்பின் மூலம், ஜனநாயக முறையில் கடன் விநியோகம் தேவையானவர்களை சென்றடைவதற்கான வாய்ப்புகள் இல்லை. பெருநிறுவனங்களே வங்கிகளிடம் பெரும்பங்கு வாராக்கடன் வைத்துள்ளன என்ற போதிலும், வங்கிகள் செய்வதென்ன? கடன் தேவைப்படும் சிறு நிறுவனங்களுக்குத் தர முன்வராமல், முதலீடு செய்ய முன்வராத பெரும் நிறுவனங்களுக்கே கடன் தர முன்வருகின்றன.

"மத்திய, மாநில அரசுகளும் பெருநிறுவனங்களும் ரூ.5 லட்சம் கோடி அளவுக்கு சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு நிலுவைத்தொகை வைத்துள்ளன" என மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி கூறினார். நிதியமைச்சரோ சிறு, குறு,

நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.3 லட்சம் கோடி அளவிற்கு வங்கிக் கடன் வழங்கப்படும் என அறிவித்தார். மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகை, அரசு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைக் காட்டிலும் மிகக்குறைவு. அதனால்தான் ”கடன் கொடுத்தது யார், வாங்கியது யார்? இரு அமைச்சர்களும் பேசி முடிவெடுங்கள்” என ப. சிதம்பரம் கேட்டுள்ளார்.

மத்திய அரசு, சிறு குறு பயனாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் விதமாக சிறு குறு நிறுவனத்திற்கான முதலீட்டு வரம்பை அதிகரித்துள்ளது. சிறு குறு மத்திய நிறுவனங்களுக்கான முதலீட்டு உச்ச வரம்பை 50 கோடியாகவும், ஆண்டுப் புரள்வை 200 கோடியாகவும் உயர்த்தியுள்ளது. ஆயிரங்களில் வருமானம் பெறும் குறு நிறுவனங்களை, கோடிகளில் வருமானம் பெறும் நிறுவனங்களுடன் ஒரே அமைப்பு வரையறையில் வைப்பது, சிறு குறு நடுத்தர நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் கடன் மற்றும் பிற சலுகைகளை அதிலுள்ள பெருநிறுவனங்களே பெற்றுக் கொள்ளும் சூழலுக்கே வழி வகுக்கும். மத்திய அரசு வேளாண்மை உள்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துவதற்குக் கூடுதலாக ஒரு பைசா கூட செலவு செய்யாமல் அதற்கான 13 பில்லியன் டாலர் நிதித் தொகையை நபார்ட் வங்கியின் பொறுப்பில் விட்டுள்ளது. ஆனால் நபார்டு வங்கிக்கான அரசின் ஆதரவோ குறைந்து கொண்டே வருகிறது. மத்திய அரசு 2018-19ல் நபார்டு வங்கிக்கு ஒதுக்கிய நிதித் தொகை 2,000 கோடி, 2019-20ல் ஒதுக்கிய தொகை1,500 கோடி, 2020-21ல் 1,000 கோடி மட்டுமே ஒதுக்கியுள்ளது.

போராட்டங்கள் முடக்கப்பட்ட இந்த ஊரடங்குச் சூழலைப் பயன்படுத்தி எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் மக்கள் விரோதத் திட்டங்களை நடைமுறைபடுத்தியுள்ளது பாஜக அரசு. பொதுத் துறை நிறுவனங்களை வரைமுறை இல்லாமல் தனியார்மயப்படுத்தும் பாஜக, எஞ்சியுள்ள பொதுத் துறை நிறுவனங்களையும் தனியாருக்கு விற்க முடிவெடுத்துள்ளது. முக்கியமான துறைகளில் செயல்படும் நான்கு பொதுத்துறை நிறுவனங்களை மட்டும் விட்டு வைத்து விட்டு மற்ற அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும் தனியாருக்கு விற்க முடிவெடுத்துள்ளது. ‘தற்சார்பு’ என்ற பெயரில் பொருளாதாரத் தற்சார்பை அழிக்கும் விதமாக 8 திருத்தங்களைக் கொண்டுவந்துள்ளது. நிலக்கரி உற்பத்தி, சுரங்க வேலைகள்-தாது உற்பத்தி, பாதுகாப்புத் துறைக்கான உற்பத்தி, விமானத் துறை, மின் விநியோகம், விண்வெளி ஆய்வு, அணு ஆற்றல் என எஞ்சியிருந்த துறைகளிலும் அரசின் முற்றுரிமையை நீக்கி அவை முற்றிலுமாகத் தனியாருக்குத் திறந்து விடப்பட்டுள்ளன. நிலக்கரி, பாதுகாப்புத் துறையில் நேரடி முதலீட்டின் உச்ச வரம்பை 49%இலிருந்து 74% ஆக உயர்த்தியுள்ளது. ‘மின்சார சட்டத் திருத்த

மசோதா - 2020'இன் மூலம் மின்சார உற்பத்தியையும், மின் விநியோகத்தையும் முற்றிலும் தனியார்மயப்படுத்தும் திட்டத்தால், மின் கட்டணத்தை நிர்ணயிக்கும், வசூலிக்கும் உரிமை அனைத்தும் தனியார் நிறுவனங்களிடமே சென்று விடும். இதனால் மின் கட்டணம் கடுமையாக உயரும் அபாயம் உள்ளது. விவசாய வேலைகள், சிறு, குறு நிறுவனங்கள், ஏழை மற்றும் நடுத்தர வர்க்க மக்கள் அனைவரையும் இது கடுமையாக பாதிக்கும்.

பேரிடர் மேலாண்மை விதியைப் பயன்படுத்தி மாநிலங்களின் உரிமைகளில் வரம்பின்றி தலையிடுகிறது மத்திய அரசு. மாநில அரசுகள் செலவினங்களுக்கான நிதியில்லாமல் அல்லாடும் நிலையில் இறுதியாக மாநில அரசுகளின் கடன் பெறும் உச்ச வரம்பு 3 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மாநில அரசுகள் கூடுதலாக ரூ.4 லட்சம் கோடி கடன் பெற முடியும் என்ற போதிலும், அதிலும் கூட மாநில அரசுகளின் கழுத்தில் கத்தி வைத்துள்ளது பாஜக அரசு. இந்த 2% கூடுதல் கடனில் 0.5% கடனை மட்டுமே மாநில அரசுகள் நிபந்தனையின்றிப் பெற முடியும், மீதமுள்ள 1.5% கடனைப் பெற வேண்டுமானால் மத்திய அரசு பரிந்துரைத்துள்ள மேலே கூறப்பட்ட மக்கள் விரோதத் திருத்தங்களை மாநில அரசுகள் செயல்படுத்த வேண்டும். பொது விநியோகம், மின் விநியோகம் ஆகியவற்றை தனியார்மயப்படுத்த வேண்டும், தொழிலாளர் நலச் சட்டங்களை நீக்க வேண்டும். இல்லையென்றால் கூடுதல் கடன் கிடையாது என மாநிலங்களை தவிக்கவிட்டுள்ளது பாஜக அரசு.

இனிமேல் விவசாயிகள் தம் விருப்பம் போல், விரும்பிய விலையில் எங்கு வேண்டுமானாலும் விற்கலாம் என்பது போல் படங்காட்டி விவசாயச் சந்தைகளை முற்றிலும் தனியார்மயமாக்கப் போகிறது பாஜக அரசு. இதன் மூலம் விலையை நிர்ணயிக்கும் உரிமை அரசிடமிருந்து விவசாயிகளுக்கு செல்லவில்லை, அரசிடமிருந்து முற்றிலும் தனியாருக்குச் சென்றுள்ளது. அரசின் உதவியுடன் விலை நிர்ணயம் செய்யும் அமைப்புமுறை விவசாய விளைபொருட்களுக்குக் குறைந்தபட்ச ஆதார விலை அளிப்பதன் மூலம் தனியார் சந்தைகளின் விலைவீழ்ச்சியிலிருந்து விவசாயிகளைப் பாதுகாத்து வந்தது. அதை நீக்கும் விதமாக இப்போது விவசாயச் சந்தைகளை முற்றிலும் தனியார்மயப்படுத்த உள்ளதால் விலையை நிர்ணயம் செய்யும் முற்றுரிமை தனியார் பெருநிறுவனங்களிடம் சென்று விடும். இதனால் விலைவீழ்ச்சியால் விவசாயிகள் மேலும் கடுமையாக பாதிக்கப்படவுள்ளார்கள். ஆனால் இது வெறும் விவசாயிகளுக்கான பிரச்சினை மட்டுமல்ல. விவசாய சந்தைகள் முற்றிலும் தனியார்மயமாக்கப்படுவதால் பொது விநியோக முறையும் முடிவுக்கு வரவுள்ளது. உணவு

கார்ப்பரேசன் விவசாயிகளிடம் குறைந்தபட்ச ஆதார விலை தந்து விவசாய விளைபொருட்களைக் கொள்முதல் செய்வதன் மூலமே பொது விநியோக முறை செயல்பட்டு வந்தது. குடும்ப அட்டைகளின் மூலம் மாதம்தோறும் மலிவு விலையில் உணவுப் பொருட்கள் பெற்று வாழும் கோடிக்கணக்கான எளிய மக்களின் வயிற்றில் மண் வார்க்கவுள்ளது. இத்திட்டத்தினால் விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்குகிறோம் என இதுவரை ஏமாற்றிவந்தார்கள். இப்போழுது விவசாய விளைபொருட்களின் சந்தையை முற்றிலும் தனியார்மயப்படுத்துவதால் குறைந்தபட்ச ஆதார விலைக்கான உத்தரவாதம் கூட இல்லாமல் விவசாயிகளை நிர்க்கதி நிலைக்குத் தள்ளியுள்ளனர்.

பாஜக அரசு இந்தியாவெங்கும் 461,589 ஹெக்டேர் நிலங்களைப் பெருநிறுவனங்களுக்குத் தாரைவார்க்கவும் தயாராக உள்ளது. புலம்பெயர் தொழிலாளர்களின் பயணத்துக்காக விடப்பட்டிருந்த ரயில்களை ரியல் எஸ்டேட் தொழிலதிபர்களுக்காக வேண்டி ரத்துச் செய்த கர்நாடகாவின் பாஜக அரசு, தொழில் நிறுவனங்கள் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நிலங்களை கையகப்படுத்துவதற்கான சட்டம் கொண்டுவந்துள்ளது.

இந்த ஆண்டில் இது வரை இந்தியாவிலிருந்து 16 பில்லியன் டாலர் மதிப்பிலான அந்நிய முதலீடுகள் வெளியேறியுள்ளன. மே மாதத்தில் மட்டும் 21,418 கோடிக்கு மேல் அந்நிய முதலீடுகள் வெளியேறியுள்ளன. டாலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு வீழ்ந்து வருகிறது. இந்நிலையில் அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்காக, குறிப்பாக சீனாவிலிருந்து வெளியேறும் அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்காக தொழிலாளர் நலச் சட்டங்களை நீக்க வேண்டும் என மத்திய அரசு மாநிலங்களுக்கு ஆணையிட்டு வருகிறது.

தொழிலாளர்களை சித்திரவதை செய்துதான் அந்நிய முதலீடுகளை அழைத்து வர வேண்டுமா என்ன? சீனாவைக் காட்டிலும் இந்தியாவில் கூலி குறைவாக இருப்பதை அறிந்திருந்தும் இதுவரை வராத அந்நிய முதலீட்டாளர்களா இந்தப் பொருளாதார மந்தநிலையிலா முதலீடு செய்ய வரப்போகிறார்கள்?

நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் 27.1%ஆக எகிறியுள்ளது. கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்க எந்தத் திட்டங்களும் இல்லை. உழைப்பை மலிவாக்கி, உழைப்புச் சுரண்டலைக் கடுமையாக்கவே திட்டம் வகுத்துள்ளது பாஜக அரசு. உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், குஜராத், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் தொழிலாளர் நலச் சட்டங்களை நீக்கியுள்ளார்கள். தொழிலாளர் நலச் சட்டங்கள் நீக்கப்பட்டதால் நிறுவனர்கள் நினைத்தபடி தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்ய முடியும்; அவர்களின் கூலியைக் குறைக்க முடியும்;

இதனால் தொழிற்சங்கங்களுடைய கூலி நிர்ணயிக்கும் ஆற்றல் பறிக்கப்பட்டுள்ளது, வேலை-நாள் 8 மணி நேரத்திலிருந்து 12 மணி நேரமாக உயர்த்தப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் சுகாதாரமான சூழலில், பாதுகாப்பாக வேலை செய்வதற்கான குறைந்தபட்ச உத்தரவாதமும் இதன் மூலம் அழிக்கப்பட்டுள்ளது.

வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட ஏப்ரல் மாதத்திற்கான அறிக்கையின் படி மார்ச் மாதத்தில் எட்டு முதன்மைத் தொழில்துறைக் குறியீட்டின் வளர்ச்சி விகிதம் (-9%) சரிந்தது, ஏப்ரல் மாதத்தில் (-38.1%) மேலும் சரிந்துள்ளது. கோவிட்-19 தொற்றுநோயால் ஏப்ரல் மாதத்தில் நடைமுறைபடுத்தப்பட்ட நாடு தழுவிய பொருளாதார முடக்கத்தால் பல்வேறு தொழில்துறைகளின் உற்பத்தியிலும் கணிசமான இழப்பு ஏற்பட்டுள்ளது. நிலக்கரி உற்பத்தி (-15.5%), கச்சா எண்ணெயின் உற்பத்தி (-6.4%), இயற்கை எரிவாயு உற்பத்தி (-19.9%), சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலிய பொருட்களின் உற்பத்தி (-24.2%) உர உற்பத்தி (-4.5%), உருக்கு உற்பத்தி (-83.9%), சிமெண்ட் உற்பத்தி (-86%), மின்சார உற்பத்தி (-22.8%) எல்லாமே குறைந்துள்ளன.

மார்ச் மாதத்திற்கான தொழில்துறை உற்பத்திக் குறியீட்டு அறிக்கையின் (ஐஐபி) படி உற்பத்தித்துறையின் இருபத்துமூன்று தொழில் வகைகளில் சுரங்கத் துறை தவிர மற்ற அனைத்துத் துறைகளிலும் உற்பத்தி வளர்ச்சி எதிர்மறையாக உள்ளது. உற்பத்தித் துறை (-20.6%) குறுக்கமடைந்துள்ளது. உணவுப் பொருட்களின் உற்பத்தி (-10.5%) குறைந்துள்ளது. முதன்மைப் பொருட்களின் உற்பத்தி (-3.1%), மூலதனப் பொருட்களின் உற்பத்தி (-35.6%), இடைநிலைப் பொருட்களின் உற்பத்தி (-18.5%), உள்கட்டமைப்பு/கட்டுமானப் பொருட்களின் உற்பத்தி (-23.8%), நீடித்த நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி (-33.1%), உடனடி நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி (-16.2%) எல்லாமே குறைந்துள்ளன.

2019-20 நிதியாண்டின் நான்காம் காலாண்டின் (ஜனவரி-மார்ச்) பொருளாதார நிலை: 2019-20ஆம் நிதியாண்டின் நான்காவது காலாண்டில் (ஜனவரி-மார்ச்) இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 3.1 சதவீதமாகக் குறைந்துள்ளது. 2019-2020 நிதியாண்டின் மொத்த வளர்ச்சி தற்காலிக மதிப்பீட்டில் 4.2% ஆகக் குறைந்துள்ளது.மொத்த மூலதன உருவாக்கத்தின் மதிப்பு 2018-19 நிதியாண்டின் நான்காம் காலாண்டில் 31.7% ஆக இருந்தது, 2019-20 நிதியாண்டின் நான்காம் காலாண்டில் 28.8% ஆகக் குறைந்துள்ளது. 2018-19 நிதியாண்டின் நான்காம் காலாண்டில் 20.8%ஆக இருந்த ஏற்றுமதி 2019-20 நிதியாண்டின் நான்காம் காலாண்டில் 18.5% ஆகக் குறைந்துள்ளது. மொத்த மதிப்பாக்கம் (GVA) அடிப்படையில் உற்பத்தித் துறையின் வளர்ச்சி 2018-19 நிதியாண்டின்

நான்காம் காலாண்டில் 5.2% ஆக இருந்தது 2019-20 நான்காம் காலாண்டில் 0.2% ஆகக் குறைந்துள்ளது. கட்டுமானத் துறையின் வளர்ச்சி 2.1%ஆக இருந்தது -1.4 சதவீதமாகக் குறைந்துள்ளது. சிமெண்ட் உற்பத்தி 2018-19 நிதியாண்டின் நான்காம் காலாண்டில் 11.7% ஆக இருந்தது 2019-20 நான்காம் காலாண்டில் -4.9% ஆகக் குறைந்துள்ளது. அதே போல் உருக்கின் நுகர்வும் 9.4%லிருந்து -3.9%ஆகக் குறைந்துள்ளது. வாகன விற்பனையும் 3.8%இலிருந்து -42.1%ஆகக் குறைந்துள்ளது.

வர்த்தகம், ஹோட்டல், போக்குவரத்து, தகவல் தொடர்பு, சேவை, ஒளிபரப்பு ஆகியவற்றின் வளர்ச்சி 2018-19ஆம் நிதியாண்டின் நான்காம் காலாண்டில் 6.9 சதவீதமாக இருந்த நிலையில் 2019-20 நான்காம் காலாண்டில் 2.6% சதவீதமாகக் குறைந்துள்ளது. வேளாண்துறை உற்பத்தி சென்ற நிதியாண்டின் நான்காம் காலாண்டில் 1.6% ஆக இருந்து 2019-20 நான்காம் காலாண்டில் 5.9% ஆக குறைந்துள்ளது. உற்பத்தித் துறையின் வளர்ச்சி, 2018-19 நிதியாண்டின் நான்காம் காலாண்டில் 2.1% ஆக இருந்து, 2019-20 நிதியாண்டின் நான்காம் காலாண்டில் -1.4% ஆகக் குறைந்துள்ளது. கட்டுமானத் துறையிலான வளர்ச்சி 2018-19 நிதியாண்டின் நான்காம் காலாண்டில் 6% ஆக இருந்து 2019-20 நிதியாண்டின் நான்காம் காலாண்டில் -2.2% ஆகக் குறைந்துள்ளது. நிகர மொத்த மதிப்பாக்கம் 2018-19 நிதியாண்டின் நான்காம் காலாண்டில் 5.6% ஆக இருந்து 2019-20 நிதியாண்டின் நான்காம் காலாண்டில் 3%ஆகக் குறைந்துள்ளது.

கச்சா எண்ணெயின் விலை படுவீழ்ச்சி அடைந்த நிலையிலும் கூட அதன் பலன்களை மக்களுக்கு வழங்காமல் பெட்ரோலில் லிட்டருக்கு 13 ரூபாயும், டீசலில் லிட்டருக்கு 10 ரூபாயும் 'கலால்' வரியை உயர்த்தியுள்ளது மத்திய அரசு. தமிழக அரசும் மதிப்புக் கூட்டல் வரி மூலம் பெட்ரோல் விலையை லிட்டருக்கு ரூ.3.25, டீசல் விலையை லிட்டருக்கு ரூ.2.50 உயர்த்தியுள்ளது.

நோய்த் தொற்று, பொருளாதார நெருக்கடி என இரட்டை அச்சுறுத்தலால் பாதிக்கப்பட்டுள்ள புலம்பெயர் தொழிலாளர்கள், விவசாயிகளின் துயர்தணிக்கவும் நிதி ஒதுக்கவில்லை. அவர்களுக்கு உதவாததோடு, விவசாயிகளுக்கு இதுவரை அளிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதரவையும் நீக்கி, தொழிலாளர் நலச்சட்டங்களையும் நீக்கி அவர்களின் வாழ்வுரிமைகளை அழித்து சாவதற்கான உரிமையை மட்டுமே தாராளமய பாஜக அரசு வழங்கியுள்ளது. இந்த நெருக்கடியிலும் அவர்கள் தலையில் பேரிடி விழச் செய்து அதை 'தற்சார்பு' என்ற பெயரில் கொண்டாடுவது அரசியல் பொருளாதார வரலாற்று வக்கிரங்களுள் உச்சக்கட்டமாகும். இந்துத்துவ வெறியர்களை நடுநிலையாளர்கள், தேசப்பற்றாளர்கள் என்றும்,

உண்மையான தேசப்பற்றாளர்களை தேசவிரோதிகள் என்றும் எல்லாவற்றுக்கும் தலைகீழாக முத்திரை குத்தும் பாஜக அரசின் அகராதியில் 'தற்சார்பு' என்பது உண்மையான தற்சார்பிற்கான இறுதிச் சடங்காகவும், உழைக்கும் மக்களுக்கான சாவுரிமையாகவுமே உள்ளது.

---

## லெனின் நினைவுக் கூட்டத்தில் லெனின் குறித்து தோழர்.ஸ்டாலினின் உரை

**(தமிழாக்கம்: சமந்தா)**

இடம்: கிரெம்ளின் இராணுவப் பள்ளி

காலம்: ஜனவரி 28, 1924

தோழர்களே, இன்று மாலை நீங்கள் இங்கே லெனின் நினைவுக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளதாகவும், பேச்சாளர்களில் ஒருவராக நான் அழைக்கப்பட்டுள்ளதாகவும் எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. லெனினின் செயல்பாடுகள் குறித்து நான் ஒரு உரை நிகழ்த்த வேண்டியது அவசியம் என்று நான் நினைக்கவில்லை. ஒரு மனிதராகவும் தலைவராகவும் லெனினின் சிறப்பியல்புகளை வெளிக்கொணரும் சில உண்மைகளைப் பற்றி மட்டும் நான் கூறுவது இன்னும் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஒருவேளை, இந்த உண்மைகளுக்கு இடையில் எந்த உள்ளார்ந்த தொடர்பும் இல்லாமல் இருக்கலாம், ஆனால் லெனின் குறித்து ஒரு பொதுவான கருத்தைப் பெறுவதற்கு அது அப்படி ஒன்றும் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. எப்படியிருந்தாலும், இந்த தருணத்தில் நான் வாக்குறுதியளித்ததை விட அதிகமாக என்னால் செய்ய இயலாது..

### மலைக் கழுகு

நான் முதலில் லெனினுடன் 1903ல் அறிமுகம் ஆனேன். ஆம், அது ஒரு தனிப்பட்ட அறிமுகம் அல்ல,கடிதப் பரிமாற்றத்தால் ஏற்பட்டது. ஆனால் அது என் மீது ஒரு அழியாத பதிவை ஏற்படுத்தியது, கட்சியில் நான் செய்த எல்லா வேலைகளிலும் என்னை விட்டு அது விலகவேயில்லை. நான் அப்போது சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டிருந்தேன். தொண்ணூறுகளின் முடிவில் இருந்து லெனினின் புரட்சிகர நடவடிக்கைகள் பற்றி நான் அறிந்ததில், குறிப்பாக 1901 க்குப் பிறகு, இஸ்க்ரா-1 தோன்றிய பிறகு, லெனினுக்குள் எங்களுக்கான அசாதாரண திறமை வாய்ந்த ஒரு மனிதர் இருப்பதை எனக்கு உணர்த்தியது. அந்த நேரத்தில் நான் அவரை வெறுமனே கட்சியின் தலைவராகக் கருதவில்லை, ஆனால்

அதன் உண்மையான நிறுவனர் என்றேக் கருதினேன், ஏனென்றால் அவர் மட்டும்தான் எங்கள் கட்சியின் உள்சாரத்தையும் அவசரத் தேவைகளையும் புரிந்து கொண்டார். நான் அவரை எங்கள் கட்சியின் மற்ற தலைவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது, அவர் தனது சக பணியாளர்களான பிளெக்கானோவ், மார்த்தோவ், ஆக்செல்ரோட் இன்ன பிறருக்கு மேல் மிகவும் உயர்ந்தவராக எனக்குத் தோன்றியது; அவர்களுடன் ஒப்பிடும்போது, லெனின் தலைவர்களில் ஒருவர் மட்டுமல்ல, மிகவும் உயர்ந்த தகுநிலையில் இருந்தவர், ஒரு மலைக் கழுகு, போராட்டத்தில் எந்த பயமும் அறியாதவர், மேலும் ரஷ்ய புரட்சி இயக்கத்தின் முன்னறியாத பாதைகளில் கட்சியை தைரியமாக முன்னோக்கி அழைத்துச் சென்றவர். இந்த எண்ணம் என்னை மிகவும் ஆழமாகப் பற்றியது, வெளிநாட்டில் அரசியலுக்காக நாடுகடத்தப்பட்ட என் நெருங்கிய நண்பருக்கு இதைப் பற்றி எழுதத் தூண்டப்பட்டேன், அவருடைய கருத்தை எனக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டேன். சிறிது காலம் கழித்து, நான் ஏற்கனவே சைபீரியாவில் நாடுகடத்தப்பட்டிருந்த போது-இது 1903 ஆம் ஆண்டின் இறுதியில்-எனது நண்பரிடமிருந்து இருந்து ஒரு உற்சாகமான பதிலையும், லெனினிடமிருந்து ஒரு எளிய, ஆனால் ஆழ்ந்த வெளிப்பாடுடன் கூடிய சுருக்கமானக் கடிதத்தையும் பெற்றேன், அவருக்கு, அது கைமாறியுள்ளது, என் நண்பர் எனது கடிதத்தைக் காட்டியுள்ளார். லெனினின் குறிப்பு ஒப்பீட்டளவில் சுருக்கமாக இருந்தது, ஆனால் அதில் எங்கள் கட்சியின் நடைமுறைப் பணிகள் குறித்த துணிவான மற்றும் அச்சமற்ற விமர்சனமும், உடனடி எதிர்காலத்தில் கட்சியின் முழு வேலைத் திட்டமும் குறிப்பிடத்தக்க தெளிவுடனும் சுருக்கமாகவும் இருந்தது. லெனினால் மட்டுமே மிகவும் சிக்கலான விஷயங்களை மிகவும் எளிமையாகவும் தெளிவாகவும், சுருக்கமாகவும் துணிவாகவும் எழுத முடிந்தது, ஒவ்வொரு வாக்கியமும் அதிகம் பேசாது ஒரு துப்பாக்கிச் சூட்டைப் போல் ஒலித்தது. லெனின் எங்கள் கட்சியின் மலைக் கழுகு என்னும் என் கருத்தை இந்த எளிய துணிச்சலான கடிதம் மேலும் வலுப்படுத்தியது. பழைய தலைமறைவு ஊழியனுக்கான பழக்கத்தில் ,மற்ற கடிதங்களைப் போலவே, லெனினின் இந்த கடிதத்தையும் தீச்சுவாலைக்குக் கொடுத்ததற்காக என்னை மன்னிக்கவே முடியாது.

அந்த நேரத்திலிருந்தே லெனினுடன் எனது அறிமுகம் ஆரம்பமானது

**அடக்கம்:**

நான் முதன் முதலில் லெனினை 1905 டிசம்பரில் டாம்மர் ஃபோர்ஸில் (ஃபின்லாந்து) நடந்த போல்ஷிவிக் மாநாட்டில் சந்தித்தேன். நான் எங்கள் கட்சியின் மலைக் கழுகை, ஒரு

மாமனிதராக, அரசியல் ரீதியாக மட்டுமல்ல, உடல் ரீதியாகவும் மாமனிதராகக் காண்பேன் என்று நம்பினேன், ஏனென்றால் என் கற்பனையில் லெனினை ஒரு வாட்டசாட்டமான, கம்பீரமான மற்றும் கவர்ச்சிகரமானவராக நான் சித்தரித்திருந்தேன்.அதனால் பின்னர், சராசரி உயரத்திற்கு குறைவாக, எந்த வகையிலும், உண்மையில் எந்த வகையிலும், சாதாரண மனிதர்களிடமிருந்து வேறுபடாத ஒரு சாதாரண தோற்றமுடைய மனிதரைப் பார்த்தது எனக்கு ஏமாற்றமாக இருந்தது.

ஒரு "பெரிய மனிதர்" கூட்டங்களுக்கு தாமதமாக வருவது வழக்கமான விஷயமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது, இதனால் கூட்டம் அவரது வருகைக்காக மூச்சை அடக்கி காத்திருக்கக்கூடும், பின்னர், “பெரிய மனிதர்” நுழைவதற்கு சற்று முன்பு, எச்சரிக்கையும் கிசுகிசுப்பும் மேலேழும்: “ஹஷ்! . . . அமைதி! . . . அவர் வருகிறார். ”இந்த சடங்கு எனக்கு மிதமிஞ்சியதாகத் தெரியவில்லை, ஏனென்றால் இது ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது, மரியாதையை வரவைக்கிறது. அதன் பிறகு மற்ற, பிரதிநிதிகளுக்கு முன்பாகவே லெனின் மாநாட்டிற்கு வந்துவிட்டார் எனத் தெரிந்ததும் எனக்கு ஏமாற்றம்.மாநாட்டில் எங்கோ ஒரு மூலையில் தன்னைத் இருத்திக்கொண்டு,மிகவும் சாதாரண பிரதிநிதிகளுடன் மிகவும் சாதாரண ஒரு உரையாடலைத் தடையின்றி நடத்தி வந்தார், இது சில அடிப்படை நெறிகளை மீறுவதாக எனக்குத் தோன்றியது என்பதை நான் உங்களிடமிருந்து மறைக்க மாட்டேன்.

இந்த எளிமை மற்றும் அடக்கம், கவனிக்கப்படாமல் இருக்க முயற்சிப்பது, அல்லது, குறைந்தபட்சம், தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமல், தனது உயர்நிலையை வெளிக்காட்டாமல் இருக்கும் இந்தப் பண்பு மனிதகுலத்தின் "புதியமக்களின், எளிய, சாதாரண வெகுமக்களின் புதிய தலைவரான லெனினின் மிகவும் வலுமிக்க பண்புகளில் ஒன்று என்பதை நான் பின்னாளிலே உணர்ந்தேன்,

**தர்க்கத்தின் ஆற்றல்:**

இந்த மாநாட்டில் லெனின் ஆற்றிய இரண்டு உரைகள் குறிப்பிடத்தக்கவை. ஒன்று தற்போதைய நிலைமை குறித்தது இன்னொன்று விவசாயக் கேள்வி குறித்தது துரதிர்ஷ்டவசமாக, அவை பாதுகாக்கப்படவில்லை. அவை அனைவரையும் ஈர்த்தது மேலும் முழு மாநாட்டையும்

உற்சாகப்புயலென எழுப்பியது. மனத்திட்பத்தின் அசாதாரண ஆற்றல், வாதத்தின் எளிமை மற்றும் தெளிவு, சுருக்கமான மற்றும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வாக்கியங்கள், நாடாளுமன்ற "சொற்பொழிவாளர்களின், பாசாங்கோ, மயக்கும் சைகைகளோ மற்றும் தாக்கத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட நாடகபாணி வசனங்களோ இல்லாமை, - இவையாவும் வழக்கமான நாடாளுமன்ற சொற்பொழிவாளர்களின் உரைகளுக்கு மாறாக லெனினின் உரைகளை சாதகமாக்கின..

ஆனால் அந்த நேரத்தில் என்னை வசீகரித்தது லெனினின் உரைகளின் இந்த அம்சம் அல்ல. அவற்றின் தவிர்க்கமுடியாத தர்க்க ஆற்றலால் நான் ஈர்க்கப்பட்டேன், அது சற்றே கடுமையானதாக இருந்தாலும், அவரது பார்வையாளர்களை அது உறுதியாகப் பற்றிக் கொண்டது, படிப்படியாக அது காந்தம் போல் கவர்ந்து, பின்னர் அவர்களை முழுமையாக வென்றது என்றே சொல்லலாம்.

. பிரதிநிதிகள் பலர் சொன்னது எனக்கு நினைவிருக்கிறது: "லெனினின் உரைகளின் தர்க்கம் ஒரு வலிமையானக் கொடுக்கைப் போன்றது, அது ஒரு கவ்வியைப் போல் உங்களைச் சுற்றிலும் பற்றுகிறது, அதன் பிடியில் இருந்து உங்களை விடுவித்துக் கொள்ளும் ஆற்றல் அற்று போவீர். ஒன்று நீங்கள் சரணடைய வேண்டும் இல்லை முழு தோல்வியுற்று விலக வேண்டும். "

லெனினின் உரைகளின் இந்த சிறப்பியல்பு அவரது பேச்சுக்கலையின் வலுவான அம்சமாக இருந்தது என்று நான் நினைக்கிறேன்.

**சிணுங்காமை:**

நான் இரண்டாவது முறையாக லெனினை சந்தித்தது 1906 இல் எங்கள் கட்சியின் இரண்டாவது ஸ்டாக்ஹோம் காங்கிரஸின் போது. இந்த மாநாட்டில் போல்ஷிவிக்குகள் சிறுபான்மையினராக இருந்தனர் என்பதும் தோல்வியை சந்தித்தனர் என்பதும் உங்களுக்குத் தெரியும். தோல்வியுற்ற நிலையில் லெனினை நான் பார்த்தது இதுவே முதல் முறை. ஆனால் தோல்வியின் பின்னர் சிணுங்கி, இதயத்தை இழக்கும் தலைவர்களைப் போல தோல்வி அவரை சிறுமைப்படுத்தவில்லை மாறாக அது, லெனினை அழுத்தப்பட்ட ஆற்றலுடைய நீரூற்றாக மாற்றியது, இது அவரது ஆதரவாளர்களை புதிய போர்களுக்கும் எதிர்கால வெற்றிக்கும்

ஊக்கமளித்தது. லெனின் தோற்கடிக்கப்பட்டார் என்று சொன்னேன். ஆனால் அது என்ன வகையான தோல்வி? அவரது எதிர்ப்பாளர்களை, ஸ்டாக்ஹோம் காங்கிரஸின் வெற்றியாளர்களான பிளெக்கானோவ், ஆக்செல்ரோட், மார்த்தோவ் இன்ன பிறரை மட்டும் நீங்கள் பார்த்திருக்கவேண்டும்உண்மையான வெற்றியாளர்களுக்கான தோற்றம் அவர்களிடம் குறைவாகவே இருந்தது. ஏனென்றால் மென்ஷிவிசத்தைப் பற்றிய லெனினின் இரக்கமற்ற விமர்சனம் அவர்களின் உடலில் ஒரு முழு எலும்பையும் விடவில்லை என்றே சொல்லலாம்.

நாங்கள், போல்ஷிவிக் பிரதிநிதிகள்,ஒன்றுகூடி, லெனினைப் பார்த்து, அவருடைய ஆலோசனையைக் கேட்டோம் என்பது எனக்கு நினைவிருக்கிறது. சில பிரதிநிதிகளின் உரைகள் சோர்வையும், விரக்தியையும் குறிப்பால் வெளிக்காட்டியது.இந்த உரைகளுக்கு லெனின் பற்களைக் கடித்தவாறே பதிலளித்ததை நான் நினைவு கூர்கிறேன்: "தோழர்களே, சிணுங்காதீர்கள், நாம் வெல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம், ஏனென்றால் நாம் சொல்வது தான் சரி." சிணுங்கும் அறிவுஜீவியின் மேல் வெறுப்பு, நம்முடைய சொந்த பலத்தில் நம்பிக்கை, வெற்றியின் மீதான நம்பிக்கை -அவையே லெனின் எங்களிடம் ஏற்பத்திய தாக்கம். போல்ஷிவிக்குகளின் தோல்வி தற்காலிகமானது, மிக விரைவில் அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பது உணரப்பட்டது.

"தோல்வி குறித்து சிணுங்குவதில்லை" - லெனினின் இந்த நடைமுறை பண்பே அவரது படையினை இறுதிவரை விசுவாசமாகவும், தன் வலிமையில் நம்பிக்கையுடையதாகவும் இருக்க அவருக்கு உதவியது.

**தற்பெருமை இல்லை:**

1907 இல் லண்டனில் நடைபெற்ற அடுத்த மாநாட்டில் (3), போல்ஷிவிக்குகள் வெற்றி பெற்றனர். லெனினை வெற்றியாளர் நிலையில் பார்த்தது இதுவே முதல் முறை. வெற்றி சில தலைவர்களின் தலைகளை சுற்ற வைத்து அவர்களை அகந்தையும், தற்பெருமையும் கொண்டவர்களாக்குகிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்கள் வெற்றி புகழ்கொண்டு, அவர்களின் புகழிலே ஓய்வெடுக்கவும் தொடங்குகிறார்கள். ஆனால் லெனின் சிறிதளவு கூட அத்தகைய தலைவர்களை ஒத்திருக்கவில்லை. மாறாக அவர், ஒரு வெற்றியின் பின்னர் தான் குறிப்பாக விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருந்தார். லெனின் பிரதிநிதிகளிடம் வற்புறுத்தியதை நான் நினைவு கூர்கிறேன்: "முதல் விஷயம் வெற்றியால்

போதையேறக்கூடாது,தற்பெருமை கொள்ளக்கூடாது; இரண்டாவது விஷயம் வெற்றியை பலப்படுத்துவது; மூன்றாவது, எதிரிக்கு இறுதி அடி கொடுப்பது, ஏனென்றால் அவர் தாக்கப்பட்டார், ஆனால், எந்த வகையிலும் அழியவில்லை.

இத்துடன் மென்ஷெவிக்குகளுடன் எல்லாம் முடிந்துவிட்டது. ”என்று முட்டாள்தனமாகக் கூறிய பிரதிநிதிகள் மீது அவர் வெறுப்புடன் வசைமழை பொழிந்தார். மென்ஷிவிக்குகள் இன்னும் தொழிலாள வர்க்க இயக்கத்தில் வேர்களைக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் திறமையுடன் போராட வேண்டும் என்றும், ஒருவரின் சொந்த பலத்தை மிகைப்படுத்தி மதிப்பிடுவதையும், குறிப்பாக, எதிரியின் வலிமையைக் குறைத்து மதிப்பிடுவதையும் தவிர்க்க வேண்டும் என்று காட்டுவது அவருக்குக் கடினமல்ல.

"வெற்றியில் தற்பெருமை கொள்வதில்லை" - இது லெனினின் ஆளுமையின் பண்பாகும், இது எதிரியின் வலிமையை எடைபோடவும், சாத்தியமான ஆச்சரியங்களுக்கு எதிராக கட்சியை காப்பதற்கும் அவருக்கு உதவியது.

**கோட்பாட்டில் உறுதிப்பாடு:**

கட்சித் தலைவர்கள் தங்கள் கட்சியின் பெரும்பான்மையினரின் கருத்தை பாராட்டாமல் இருக்க முடியாது. பெரும்பான்மை என்பது ஒரு தலைவரால் கணிக்க முடியாத ஒரு ஆற்றல். இதை வேறு எந்த கட்சித் தலைவரையும் காட்டிலும் லெனின் குறைவாக அறியாதவரில்லை.

ஆனால் லெனின் ஒருபோதும் பெரும்பான்மையினரிடம் சிறைபடவில்லை, குறிப்பாக அந்த பெரும்பான்மைக்கு எந்த கோட்பாட்டு அடிப்படையும் இல்லாத போது. எங்கள் கட்சியின் வரலாற்றில் பெரும்பான்மையினரின் கருத்து அல்லது கட்சியின் தற்காலிக நலன்கள் பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படை நலன்களுடன் முரண்பட்ட நேரங்கள் உண்டு. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், லெனின் ஒரு போதும் தயங்கமாட்டார், கட்சியின் பெரும்பான்மைக்கு எதிராக கோட்பாட்டிற்கு ஆதரவாக தனது நிலைப்பாட்டை உறுதியாக எடுத்தார். மேலும், இதுபோன்ற சந்தர்ப்பங்களில் அவர் அனைவருக்கும் எதிராக தனித்து நிற்க வேண்டும் என்று அவர் அஞ்சவில்லை, -அவர் அடிக்கடி சொல்வது போல் - “கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கொள்கை மட்டுமே சரியான கொள்கை” என்று கருதினார்.

இந்த விஷயத்தில் குறிப்பான சிறப்பியல்புடைய இரண்டு உண்மைகள்.பின்வருமாறு

**முதல் உண்மை:** 1909-11 காலகட்டத்தில், எதிர் புரட்சியால் கட்சி அடித்து நொறுக்கப்பட்ட போது முழுமையான சிதைவிலிருந்தது. அது கட்சியில் நம்பிக்கையின்மையான காலம், கட்சியிலிருந்து மொத்தமாக வெளியேறினர், அறிவுஜீவிகள் மட்டுமல்ல, ஓரளவு தொழிலாளர்களும்கூட; சட்டமறுப்பு இயக்கத்தின் தேவை மறுக்கப்பட்ட ஒரு காலம்,கலைப்பு மற்றும் சரிவின் காலம். மென்ஷிவிக்குகள் மட்டுமல்ல, போல்ஷிவிக்குகளும் கூட பல பிரிவுகளையும் போக்குகளையும் கொண்டிருந்தனர், பெரும்பாலானோர் தொழிலாள வர்க்க இயக்கத்திலிருந்து துண்டிக்கப்பட்டிருந்தனர்.. அந்தகாலகட்டத்தில் தான் சட்டமறுப்பு இயக்கத்தை முற்றிலுமாக கலைத்து, தொழிலாளர்களை சட்டபூர்வமான, தாராளவாத ஸ்டோலிபின் கட்சியாக ஒழுங்கமைக்கும் எண்ணம் எழுந்தது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அந்த நேரத்தில் பரவலான தொற்றுநோய்க்கு ஆளாகாமல், கட்சி கொள்கையின் பதாகையை உயர்த்திப் பிடித்து, கட்சியின் சிதறிய மற்றும் சிதைந்த ஆற்றல்களை வியக்க வைக்கும் பொறுமை மற்றும் அசாதாரண விடாமுயற்சியுடன் திரட்டி,தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் ஒவ்வொரு கட்சி விரோத போக்கையும் எதிர்த்துப் போராடி, அசாதாரண துணிவுடனும், இணையற்ற விடாமுயற்சியுடன் கட்சி கொள்கையை பாதுகாத்தது லெனின் மட்டுமே.

கட்சி கோட்பாட்டிற்கான இந்த போராட்டத்தில், லெனின் தான் பின்னர் வெற்றியாளராக நிரூபித்தார் என்பதை நாங்கள் அறிந்தோம்.

**இரண்டாவது உண்மை:** இது 1914-17 காலகட்டத்தில், ஏகாதிபத்தியப் போர் முழு வீச்சில் இருந்தபோது, அனைத்து அல்லது கிட்டத்தட்ட அனைத்து சமூக ஜனநாயக மற்றும் சோசலிசக் கட்சிகள் பொது தேசபக்தி வெறிக்கு ஆளாகி அந்தந்த நாடுகளின் ஏகாதிபத்தியத்தின் சேவையில் தங்களை நிலைநிறுத்திக் கொண்டன. இரண்டாம் அகிலம் அதன் நிறம் வெளுத்து முதலாளித்துவத்தின் கீழ் இழுத்துச் செல்லப்பட்ட ஒரு காலகட்டம், பிளெக்கானோவ், காவுத்ஸ்கி, கியூஸ்டே போன்றவர்களால் கூட பேரினவாதத்தின் அலைகளைத் தாக்குப்பிடிக்க முடியவில்லை. அந்தகாலகட்டத்தில், கிட்டத்தட்ட ஒரே ஒருவராக சமூக-பேரினவாதம் மற்றும் சமூக-சமாதானத்திற்கு எதிராக ஒரு உறுதியான போராட்டத்தை நடத்தியதும், கியூஸ்டெஸ் மற்றும் காவுத்ஸ்கியின் துரோகத்தை கண்டனம் செய்ததும், அரை மனதுடனான இடைப்பட்ட "புரட்சியாளர்களை" இழிந்துரைத்ததும் லெனின் மட்டுமே. லெனின் ஒரு சிறிய சிறுபான்மையினரால் மட்டுமே ஆதரிக்கப்படுகிறார் என்பதை அறிந்திருந்தார், ஆனால் அவருக்கு அது ஒரு முக்கியமான தருணம் அல்ல, ஏனென்றால் எதிர்காலத்தை தன் முன் கொண்ட ஒரே

சரியான கொள்கை முரணற்ற சர்வதேசத்தின் கொள்கை, கோட்பாடுகளின் அடிப்படையிலான கொள்கை மட்டுமே சரியானக் கொள்கை என அவர் அறிந்திருந்தார்.

ஒரு புதிய சர்வதேசத்திற்கான இந்த போராட்டத்திலும், லெனினே வெற்றியாளராக நிரூபித்தார் என்பதை நாங்கள் அறிந்தோம்..

"கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு கொள்கை மட்டுமே சரியான கொள்கை" - இந்த வாய்ப்பாட்டின் படி லெனின் தாக்குதலின் மூலம் "தோற்கடிக்க முடியாத" புதிய நிலைகளை எடுத்து, பாட்டாளி வர்க்கத்தின் சிறந்த கூறுகளை புரட்சிகர மார்க்சியத்திற்கு வென்றெடுத்தார்

**வெகுஜனங்களிடம் நம்பிக்கை:**

கோட்பாட்டாளர்கள் மற்றும் கட்சிகளின் தலைவர்கள், நாடுகளின் வரலாற்றை நன்கு அறிந்தவர்கள் மற்றும் புரட்சிகளின் வரலாற்றை ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை படித்தவர்கள், சில நேரங்களில் வெட்கக்கேடான நோயால் பாதிக்கப்படுகிறார்கள். இந்த நோய் வெகுஜன பயம், என்று அழைக்கப்படுகிறது.வெகுஜனங்களின் படைப்பு ஆற்றலில் அவநம்பிக்கை இது சில சமயங்களில் தலைவர்களிடையே ஒரு வகையான மேட்டுக்குடி அணுகுமுறையை உருவாக்குகிறது, அவர்கள் புரட்சிகளின் வரலாற்றில் தேர்ச்சி பெறாவிட்டாலும், பழைய ஒழுங்கை அழிக்கவும், புதியதை உருவாக்கவும் விதிக்கப்படுகிறார்கள். இந்த வகையான மேட்டுக்குடி அணுகுமுறை, மக்கள் கட்டற்று போகக்கூடும், மக்கள் "அதிகமாக அழிக்கக்கூடும்" என்ற அச்சமே காரணமாகும்; புத்தகங்களிலிருந்து வெகுஜனங்களுக்குக் கற்பிக்க முயற்சிக்கும் ஆனால் மக்களிடமிருந்து கற்றுக் கொள்ள வெறுக்கும் ஒரு வழிகாட்டியாக ஆகும் விருப்பமே இதற்கு காரணமாகிறது.

அத்தகைய தலைவர்களின் மறுதளிப்பே லெனின். பாட்டாளி வர்க்கத்தின் படைப்பு சக்தியிலும், அதன் வர்க்க உள்ளுணர்வின் புரட்சிகர செயல்திறனிலும் லெனின் போன்று இவ்வளவு ஆழமான நம்பிக்கை வைத்திருந்த வேறு எந்த புரட்சியாளரையும் நான் அறியவில்லை. "புரட்சியியை குழப்பம்" என்றும் "வெகுஜனங்களின் அங்கீகரிக்கப்படாத நடவடிக்கைகளின் கலவரம்" என்றும் மோசமாக விமர்சிப்பவர்களை லெனினைப் போல இரக்கமின்றி துன்புறுத்தக்கூடிய வேறு எந்த புரட்சியாளரையும் நான் அறியவில்லை.

ஒரு உரையாடலின் போது ஒரு தோழர் "புரட்சியை சாதாரண விஷயங்களின் ஒழுங்கின் படி பின்பற்ற வேண்டும்" என்று கூறியபோது லெனின் கிண்டலாகக் குறிப்பிட்டார்: "புரட்சியாளர்களாக இருக்க விரும்பும் மக்கள் வரலாற்றில் மிகவும் சாதாரண ஒழுங்கு என்பது விஷயங்களின் புரட்சிகர ஒழுங்கு என்பதை மறந்துவிடுவது பரிதாபம். "

ஆகவே, வெகுஜனங்களை மேலோட்டமாகக் குறைத்து மதிப்பிட்டு, புத்தகங்களிலிருந்து அவர்களுக்குக் கற்பிக்க முயன்ற அனைவரையும் லெனின் அவமதித்தார். எனவே, லெனினின் நிலையான கட்டளை: மக்களிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள், அவர்களின் செயல்களைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள், வெகுஜனங்களின் போராட்டத்தின் நடைமுறை அனுபவத்தை கவனமாகப் படிக்கவும் என்பதே.

வெகுஜனங்களின் படைப்பு ஆற்றலில் நம்பிக்கை - இது லெனினின் செயல்பாட்டுப் பண்பாகும், இது தன்னிச்சையான செயல்முறையைப் புரிந்துகொள்ளவும், அதன் இயக்கத்தை பாட்டாளி வர்க்க புரட்சியின் வழியில் செலுத்தவும் அவருக்கு உதவியது.

**புரட்சியின் மேதை:**

லெனின் புரட்சிக்காகவே பிறந்தவர். அவர் உண்மையில், புரட்சி வெடிப்புகளின் மேதையாகவும் புரட்சிகர தலைமைக் கலையின் மிகச்சிறந்த தலைவராகவும் இருந்தார். புரட்சி எழுச்சியின் காலத்தைப் போல அவர் ஒரு போதும் அவ்வளவு சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் உணர்ந்ததில்லை. இதன் மூலம் லெனின் அனைத்து புரட்சிகர எழுச்சிகளுக்கும் சமமாக ஒப்புதல் அளித்தார் , அல்லது எல்லா நேரங்களிலும் எல்லா சூழ்நிலைகளிலும் புரட்சி வெடிப்புகளுக்கு ஆதரவாக இருந்தார் எனும் பொருளில் நான் சொல்லவில்லை. இல்லவே இல்லை. நான் சொல்வது என்னவென்றால், லெனினின் நுண்ணறிவின் மேதமை ஒருபோதும் புரட்சி வெடித்த காலத்தைப் போல முழுமையாகவும் தெளிவாகவும் வெளிப்படவில்லை. புரட்சியின் காலங்களில் அவர் உண்மையில் மலர்ந்தார், ஒரு பார்வையாளராக ஆனார், வர்க்கங்களின் இயக்கத்தையும் புரட்சியின் சாத்தியமான வளைவு சுழிவையும் முன் நோக்கினார், அவை அவரது உள்ளங்கையில் கிடப்பதைப் போல பார்த்தார்.. இதுவே எங்கள் கட்சி வட்டாரங்களில் " புரட்சி அலைகளில் லெனின் நீரிலுள்ள ஒரு மீனைப் போல நீந்துகிறார்."என சொல்லப்பட்டதற்கு நல்ல

காரணமாக அமைந்தது.

இதனாலே லெனினின் செயல் தந்திர முழக்கங்கள் “ஆச்சரியமான” தெளிவுடனும் அவரது புரட்சிகர திட்டங்கள் “திகைக்க வைக்கும்” துணிவுடனும் இருந்தது.

லெனினின் இந்த பண்பின் சிறப்பியல்புடைய இரண்டு உண்மைகளை நான் நினைவு கூர்கிறேன்.

**முதல் உண்மை:** அக்டோபர் புரட்சிக்கு சற்று முந்தைய காலகட்டத்தில், நாட்டிலும், போர்முனையிலும் ஏற்பட்ட நெருக்கடியால் கோபமுற்ற மில்லியன் கணக்கான தொழிலாளர்களும், விவசாயிகளும் வீரர்களும் அமைதியையும் சுதந்திரத்தையும் கோரிய போது, தளபதிகளும் முதலாளித்துவ வர்க்கமும் "இறுதி வரை போரிடும்" பொருட்டு ஒரு இராணுவ சர்வாதிகாரத்திற்காக பணியாற்றிய போது; "பொதுக் கருத்து" என்று அழைக்கப்படுபவை மற்றும் "சோசலிசக் கட்சிகள்" என்று அழைக்கப்படுபவை அனைத்தும் போல்ஷிவிக்குகளுக்கு விரோதமாக அவர்களை ஜேர்மன் உளவாளிகள்" என்று முத்திரை குத்திய போது, "; போல்ஷிவிக் கட்சியை கெரென்ஸ்கி தலைமறைவாக்க முயன்ற போது - ஏற்கனவே அதில் கொஞ்சம் வெற்றியும் பெற்ற போது-; ஆஸ்திரிய-ஜேர்மன் கூட்டணியின் இன்னும் சக்திவாய்ந்த, ஒழுக்கமான படைகள் எங்கள் சோர்வுற்ற, சிதைந்துபோன படைகளை எதிர்கொண்டபோது, மேற்கு-ஐரோப்பிய “சோசலிஸ்டுகள்” “முழுமையான வெற்றிக்கான போர்” என்ற பெயரில் தங்கள் அரசாங்கங்களுடன் ஆனந்தமான கூட்டணியில் வாழ்ந்தனர். . .

அத்தகைய தருணத்தில் ஒரு எழுச்சியைத் தொடங்குவது என்றால் என்ன பொருள்? அத்தகைய சூழ்நிலையில் ஒரு எழுச்சியைத் தொடங்குவது எல்லாவற்றையும் அபாயத்திற்குட்படுத்துவது. ஆனால் லெனின் ஆபத்துக்கு அஞ்சவில்லை, ஏனென்றால் அவர் அறிந்திருந்தார், அவர் தனது தீர்க்கதரிசனக் கண்ணால், ஒரு எழுச்சி தவிர்க்க முடியாதது, அது வெல்லும்; ரஷ்யாவில் ஒரு எழுச்சி ஏகாதிபத்தியப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு வழிவகுக்கும், அது மேற்கு நாடுகளின் போரினால் சோர்ந்து போன மக்களைத் தூண்டும், அது ஏகாதிபத்தியப் போரை உள்நாட்டுப் போராக மாற்றும்; இந்த எழுச்சி சோவியத் குடியரசுக்கு வழியமைக்கும் என்றும், சோவியத் குடியரசு உலகம் முழுவதும் புரட்சிகர இயக்கத்திற்கு ஒரு அரணாக செயல்படும் என்பதையும் கண்டார்.

லெனினின் புரட்சிகர தொலைநோக்கு இணையற்ற துல்லியத்துடன் பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது என்பதை நாங்கள் அறிந்தோம்.

**இரண்டாவது உண்மை:** அக்டோபர் புரட்சியின் ஆரம்ப நாட்களில், கலகம் செய்த தளபதி ஜெனரல் துகோனினை, மக்கள் ஆணையர்களின் அவை ஜெர்மனியருடன் விரோதத்தை முடிவுக்கு கொண்டுவந்து போர் நிறுத்த பேச்சு வார்த்தையை ஆரம்பிக்குமாறு வலியுறுத்த முயன்ற போது நடந்தது. லெனின், கிரைலென்கோவுடன் (வருங்கால தளபதி) நான் பெட்ரோகிராடில் உள்ள பொது பணியாளர் தலைமையகத்திற்குச் சென்றேன், துக்கோனினுடன் நேரடி கம்பி தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தினேன். அது ஒரு பயங்கரமான தருணம். துகோனினும், கள தலைமையகமும் மக்கள் ஆணையர்கள் அவையின் உத்தரவுக்கு கீழ்ப்படிய மறுத்துவிட்டன. இராணுவ அதிகாரிகள் முற்றிலும் கள தலைமையகத்தின் கட்டுப்பாட்டில் இருந்தனர். படைவீரர்களை பொறுத்தவரை, பதினான்கு மில்லியனுக்கும் அதிகமான இந்த இராணுவம் என்ன சொல்லும் என்று யாராலும் சொல்ல முடியவில்லை, இது சோவியத் சக்திக்கு விரோதமாக இருந்த இராணுவ அமைப்புகள் என்று அழைக்கப்படுபவைகளுக்கு அடிபணிந்திருந்தது. பெட்ரோகிராடில், இராணுவ கேடட்டுகளின் கலகம் உருவெடுப்பது எங்களுக்குத் தெரிய வந்தது, கெரென்ஸ்கி பெட்ரோகிராடில் அணிவகுத்து வந்தார். நேரடி கம்பித் தொடர்பு இடைநிறுத்தப்பட்ட பிறகு, லெனினின் முகம் திடீரென்று ஒரு அசாதாரண ஒளியுடன் பிரகாசித்தது எனக்கு நினைவிருக்கிறது. அவர் ஒரு முடிவுக்கு வந்திருந்தார் என்பது தெளிவாகிறது. "வயர்லெஸ் நிலையத்திற்கு செல்லலாம், அது நமக்கு நல்ல வாய்ப்பைத் தரும். தளபதி துகோனைனை பதவி நீக்கம் செய்து, அவருக்குப் பதிலாக தோழர் கிரைலென்கோ தளபதியை நியமிப்போம், தலைமை அதிகாரிகளை பற்றி படையினரிடம் முறையிட்டு, தளபதிகளைச் சுற்றி வளைத்து, ஆஸ்ட்ரோ-ஜெர்மன் வீரர்களுடன் பகைமகளை விடுத்து, தொடர்புகளை ஏற்படுத்தவும் அமைதிக்கான காரணத்தை தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளுமாறும் அவர்களுக்கு அழைப்பு விடுப்போம்.

இது "இருட்டில் ஒரு பாய்ச்சல்" ஆகும். ஆனால் லெனின் இந்த "பாய்ச்சலில்" இருந்து பின்வாங்கவில்லை; மாறாக, அவர் அதை ஆவலுடன் செய்தார், ஏனென்றால் இராணுவம் சமாதானத்தை விரும்புவதால், அமைதியை வெல்லும் என்று அவர் அறிந்திருந்தார், ஒவ்வொரு

தடையையும் அதன் பாதையிலிருந்து துடைத்தார்; சமாதானத்தை ஏற்படுத்தும் இந்த முறை ஆஸ்ட்ரோ-ஜேர்மன் படையினரிடம் அதன் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதையும், விதிவிலக்கு இல்லாமல் ஒவ்வொரு முன்னணியிலும் அமைதிக்கான முழு ஆளுகையை கொண்டுவரும் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

இங்கேயும், லெனினின் புரட்சிகர தொலைநோக்கு பின்னர் மிகத் துல்லியத்துடன் உறுதிப்படுத்தப்பட்டது என்பதை நாங்கள் அறிந்தோம்.

மேதையின் நுண்ணறிவு, வரவிருக்கும் நிகழ்வுகளின் உள் அர்த்தத்தை விரைவாகப் புரிந்துகொள்வதும் முன் நோக்குவதுமான லெனினின் இந்தப் பண்பு தான் புரட்சி இயக்கத்தின் திருப்புமுனைகளில் சரியான உத்திகளையும் தெளிவான நடைமுறையையும் வகுக்க அவருக்கு உதவியது.

---

**சமந்தா**

## நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (8)

## ஆசிரியர்: விகாஸ் ராவல்

விகாஸ் ராவல் அவர்கள் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் திட்டமிடலுக்கான மையத்தில் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

## தலைப்பு: கிராமப்புறத்தில் சமூகப் பொருளாதாரக் கள ஆய்வு:

இமாச்சலப் பிரதேசத்தின் மண்டி மாவட்டத்தில் நக்வெய்ன் கிராமத்தை சுற்றியுள்ள பகுதிகளின் சமூகப் பொருளாதார நிலைமை குறித்து ஒரு நாள் கள ஆய்வை நாம் மேற்கொள்ளப் போகிறோம். கள ஆய்வு செய்வதற்கான திட்டமிடலையும், அதற்கான வழிகாட்டலையும் இப்பொழுது பார்ப்போம்.

கள ஆய்வுக்கான திட்டம்:

மூன்று வேறுபட்ட இடங்களில் களஆய்வு மேற்கொள்ளப் போகிறோம். அவை பின்வருமாறு:

1. இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள கினி கிராமத்தில் 50 ஏழை விவசாயிகளின் வீடுகளில் கள ஆய்வு செய்தல்.

2. ஜ்வலபுரில் உள்ள ஆப்பிள் பழத் தோட்டங்களில் கள ஆய்வு செய்தல்

3. சம்ரதாவில் சுரங்கச் சாலை வேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களிடம் கள ஆய்வு செய்தல்.



அனைவரும் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு மேற்குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று கள ஆய்வை மேற்கொள்ள வேண்டும். மூவர் அல்லது நால்வர் சேர்ந்த குழுக்கள் விவசாயிகளின் வீடுகளைத் தேடிச் சென்று, அவர்கள் செய்யும் விவசாயம் குறித்தும், இதர தொழில்கள் குறித்தும் கேட்டறிந்து, அப்பகுதியின் சமூகப் பொருளாதார நிலைமைகளையும், அவற்றில் காணப்படும் பிரச்சனைகளையும் கண்டறிய வேண்டும். பொருளாதார அடிப்படையில் பாலியல் வேறுபாடுகள், சாதி வேறுபாடுகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதையும் கண்டறிய வேண்டும். குறிப்பாகக் கீழ்காணும் முக்கிய வினாக்களுக்கு கள ஆய்வின் மூலம் விடை காண வேண்டும்.

**வினாக்களின் பட்டியல்:**

அங்கு வாழ்வாதார விவசாயம் கடைபிடிக்கப்படுகிறதா, அதாவது அவரவர் குடும்ப உணவு நுகர்வுக்குத் தேவையானவற்றை மட்டும் விளைவித்துக் கொள்ளும் விவசாயம் நடைபெறுகிறதா? அல்லது விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கான விவசாயம் நடைபெறுகிறதா? எல்லா விவசாய விளைபொருட்களும் நுகர்வுக்காக பயன்படுத்தப்படுகின்றனவா? அல்லது பகுதியளவு நுகரப்பட்டு, பகுதியளவு சந்தையில் விற்கப்படுகிறதா?

விவசாயத்தின் மூலம் அவர்களால் போதுமான வருவாய் பெற முடிகிறதா?

விவசாயத்தில் உற்பத்தி உறவுகள் எத்தகையவை? அங்கு காணப்படும் நில உறவுகள் / குத்தகை முறைகள் எத்தகையவை?

அங்கு செயல்படுத்தப்படும் விவசாய மூலதனத்தின் தன்மையும் கூலி உழைப்பின் தன்மையும்

எத்தகையவை?

விவசாய வேலையாட்களை எங்கிருந்து எவ்வாறு வேலைக்கு அமர்த்துகிறார்கள்?

அங்குள்ள நிலத்தின் தன்மை எவ்வாறு உள்ளது? அது வளமான நிலமா, நிலத்தை மேம்படுத்த தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றனவா?

விவசாய மூலப்பொருட்களை எங்கிருந்து பெறுகிறார்கள்?

விவசாயம் செய்வதற்கான நீர்ப்பாசன வசதிகளின் நிலைமை எவ்வாறுள்ளது?

விவசாயிகள் வெளிவேலைகளுக்குச் செல்கிறார்களா? வேறு தொழில்களில் ஈடுபடுகிறார்களா?

விவசாயத்தில் உழைப்புப் பிரிவினை எவ்வாறு உள்ளது? அங்குள்ள பெண்களின் உழைப்பு எத்தகையது?

விவசாயத்தில் உழைப்புப் பரிவர்த்தனைகள் எவ்வாறுள்ளன, வேலைகள் அவர்களுக்குள்ளே பகிரப்படுகின்றனவா? கூலியுழைப்பு பயன்படுத்தப்படுகிறதா?

விவசாயத்தில் வரலாற்று வழியில் அங்கு காணப்படும் மாற்றம் எத்தகையது?

விவசாய செலவுகளுக்கு அவர்களுக்கு வங்கிக் கடன் கிடைக்கிறதா?

**களஆய்வின் போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள்:**

நாளைய கள ஆய்வை இன்னொரு வகுப்பறையாகப் பாருங்கள். நீங்கள் கள ஆய்வை வீடுகளில் மேற்கொண்டாலும், அதுதான் உங்கள் வகுப்பறை என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள், நாம் அங்கு செல்வது அவர்களுக்கு கற்றுக் கொடுக்க அல்ல, அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளப் போகிறோம், ஆகையால், பணிவுடன், மரியாதையாகவும், கண்ணியமாகவும் பழகுங்கள். பிறகு அவர்கள் உங்களிடமிருந்தும் கற்றுக் கொள்வார்கள்.

நீங்கள் அங்கு செல்வது உங்கள் கோட்பாடுகளை நிரூபிக்க அல்ல, அவற்றுக்கான தரவுகளைப் பெறுவதற்கே என்பதை மனத்தில் கொள்ளுங்கள். அவர்கள் எவ்வாறு விவசாயம் செய்கிறார்கள்? எப்படி அவர்கள் சோளம் பயிரிடுகிறார்கள்? என்பதை அவர்களிடமிருந்து தெரிந்து

கொள்ளுங்கள். அதே நேரத்தில் அவர்கள் நேரத்தையும் விரயம் செய்யாதீர்கள். அங்கு கூச்சலிடாமல், உங்களின் இருப்பு அவர்களின் சூழலை பாதிக்காதவாறு செயல்படுங்கள்.

அவர்கள் உங்கள் அனைத்து கேள்விகளுக்கும் விடையளிக்க வேண்டிய கட்டாயம் இல்லை என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். உங்களின் கேள்விகளுக்கு விடைகள் கிடைக்கலாம், கிடைக்காமலும் போகலாம். அவர்களை விடையளிக்குமாறு வற்புறுத்தாதீர்கள். கேள்விகள் கேட்கும் போது உணர்திறன் மிக்கவர்களாக செயல்படுங்கள், அவர்கள் மனத்தைப் புண்படுத்தும்படியான கேள்விகளைக் கேட்காதீர்கள். காட்டாக, அவர்களுக்கு எவ்வளவு கடன் உள்ளது என்பதையோ, யாரிடமிருந்து பெற்றார்கள் என்பதையோ சொல்ல அவர்கள் தயங்கலாம், சொல்ல விருப்பமில்லாமலும் இருக்கலாம்.உங்களிடம் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதால் அவர்களுக்கு எந்தப் பலனுமில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர்கள் பேசவோ, விடையளிக்கவோ மறுத்தால் அந்த இடத்தை விட்டு வந்து விடுங்கள்.அவர்களது தனிப்பட்ட விசயங்களில் தலையிடாதீர்கள். நீங்கள் அங்கு போராளியாகச் செயல்படச் செல்லவில்லை, கள ஆய்வு செய்வதில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும்.

## களஆய்வில் அறியப்பெற்றவை:

**கினி கிராமத்தின் விவசாயப் பொருளாதாரம்:**

நாங்கள் ஆய்வு மேற்கொண்ட பகுதியில் சிறு நிலவுடைமையாளர்களே இருந்தனர். அவர்கள் பழைய விவசாய முறைகளையே பின்பற்றி வருகின்றனர். பழைமையான உற்பத்தி உறவுகளே அங்கு இன்னும் நீடித்துள்ளன. விவசாயத்திற்குத் தேவையான பணத்தை உறவினர்களிடமிருந்தே பெறுகிறார்கள். அவர்கள் வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதில்லை. முதலாளித்துவ விவசாய முறை அங்கு காணப்படவில்லை. வாழ்வாதார விவசாயமே அங்கு செய்யப்படுகிறது. விவசாயம் பெருமளவில் அவர்களது உணவுத் தேவைகளுக்காகவே செய்யப்படுகிறது.

அங்கு இரு போகம் விளைவிக்கப்படுகிறது. ஃபிப்ரவரி முதல் அக்டோபர் வரை சோளம் பயிரிட்டு, ஊடுபயிராக தக்காளி மற்றும் பிற காய்கறிகள் பயிரிடுகிறார்கள். அக்டோபர் முதல் மார்ச் வரை கோதுமை பயிரிட்டு அதனூடே காலிஃபிளவரோ பட்டாணியோ பயிரிடுகிறார்கள். ஆப்பிள் மரம் வளர்க்கிறார்கள். பெரும்பாலான இடங்களில் விவசாயத்திற்கான நீர்ப்பாசன வசதிகள் இல்லை. விவசாயத்திற்கு மழை நீரையே நம்பியுள்ளனர். நிலங்களை உழுவதற்கு எருதுகளையே பயன்படுத்துகின்றனர். அவை கலப்பினமில்லை, நாட்டு மாடுகள். பசு

மாடுகளிடமிருந்து உபரியாக கிடைக்கும் பாலை விற்கின்றனர். ஆடு வளர்க்கிறார்கள். அவர்கள் விவசாயத்திற்குக் கலப்பு விதைகள் பயன்படுத்தவில்லை, விதைகள், உரம், பூச்சிக் கொல்லி மருந்துகளைக் கடைகளிலிருந்துதான் வாங்குகிறார்கள், விளைச்சல் குறைவாகவே உள்ளது. நிலங்களைத் தரிசு போடுவதில்லை.

ஆண்கள் விவசாயச் சந்தைகளில் வேலை செய்யச் செல்கின்றனர் (தேர்ச்சியற்ற உழைப்பு). அதன் மூலம் தினம் 500-600 ரூபாய் வரை சம்பாதிக்கிறார்கள். சிலர் கடைகளைப் பராமரித்து வருகின்றனர். அங்கு விவசாயிகளுக்கு வேளாண்மையின் மூலம் போதிய வருமானம் கிடைக்கவில்லை. வெளிவேலைகளில் வருவாய் கிடைத்த போதும் அவர்கள் நிலத்துடன் பிணைந்தவர்களாகவே உள்ளனர். பெண்கள் பெருமளவில் விவசாய வேலைகளிலும், நெய்வதிலும் ஈடுபடுகின்றனர். கால்நடைப் பராமரிப்பு, கால்நடைத் தீவன வளர்ப்பு, களையெடுப்பு, அறுவடை, ஆகியவற்றைப் பெண்களே செய்து வருகிறார்கள். நிலத்தை உழுவது, விதை விதைப்பது ஆகியவற்றை ஆண்கள் செய்கிறார்கள். சிலர் கால்நடைத் தீவனங்களைத் தனியாக விளைவிக்காமல், அறுவடையிலிருந்தே பெறுகிறார்கள்.

போக்குவரத்து வசதிகள் இல்லாததால், பெண்கள் வெளி வேலைகளுக்குச் செல்ல முடியாமல் விவசாய வேலைகளிலே முடங்கிப் போய் உள்ளனர். பெண்களின் உழைப்பு சரியாக அங்கீகரிக்கப்படாமல், குறைவாகவே மதிப்பிடப்படுகிறது. அங்குள்ள கிராமங்களில் பெருமளவு முதலீடுகளும் செய்யப்படுவதில்லை.

தங்களுக்குள்ளே விவசாய வேலைகளைப் பகிர்ந்து செய்து வருகின்றனர்.அறுவடை நேரத்தில் வேலைகளைத் தங்களுக்குள் பகிர்ந்தும் செய்கிறார்கள். கூலிக்கு ஆள் வைத்தும் செய்யப்படுகிறது. கூலி உழைப்பு குறைந்த அளவிலே பயன்படுத்தப்படுகிறது.

அவர்கள் தொடர்வரிசையிலமைந்த வீடுகளில் உறவினர்களோடு கூட்டுக் குடும்பங்களாக வசித்து வருகின்றனர். சிலர் மாவு அரைவை மில் வைத்துள்ளனர். அது வருவாய் பெறுவதற்காக என்றில்லாமல், அங்குள்ளவர்களின் சொந்தத் தேவைகளுக்காகப் பயன்படுத்தி வருகிறார்கள். அதற்கான மின்சாரக் கட்டணத்தையும் பகிர்ந்து கொள்கிறார்கள். மாவு அரைப்பதற்கு பணத்திற்கு பதில் மாவைப் பெற்றுக் கொள்கிறார்கள். அவரவர் வீட்டில்தான் உண்ண வேண்டும் என்றில்லாமல் பகிர்ந்து உண்கிறார்கள். சமையலுக்கு எல்.பி.ஜி. எரிவாயு பயன்படுத்துகின்றனர். சாண வரட்டிகளையும் அடுப்பெரிக்கப் பயன்படுத்துகின்றனர்.

அங்கு பல வீடுகளில் சால்வை நெய்வதற்கான தறி வைத்துள்ளனர். அதற்கான

கம்பளியை வெளியிலிருந்து பெறுகிறார்கள். அந்தச் சால்வையை அவர்களின் பேச்சுவழக்கில் பட்டு என்று அழைக்கிறார்கள். ஒரு பட்டுச் சால்வையை 5000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாய் வரை விற்க முடியும். சிலரே இரு சக்கர மோட்டார் வாகனங்கள் வைத்துள்ளனர். வாகனங்களை தங்களுக்குள் பகிர்ந்து கொள்கிறார்கள். ஊராட்சி ஏற்பாட்டில் குழாய்களில் தினம் 2 மணி நேரம் குடிநீர் வழங்கப்படுகிறது. காய்கறிகள், உப்பு, துணிமணிகளை கடைகளிலிருந்து வாங்கிக் கொள்கிறார்கள். ஒரு அரசு மருத்துவமனையும்,அரசு பள்ளிக்கூடமும் உள்ளது. அவர்கள் சொந்தத்திற்குள்ளேயே மணம் செய்து கொள்கிறார்கள். வரதட்சணை முறை இல்லை. மணமகன், மணமகள் இருவரின் ஒப்புதலின் மூலமே திருமணம் நடைபெறுகிறது. திருமணச் செலவுகளுக்கும் உறவினர்களிடமிருந்தே பெற்றுக் கொள்கிறார்கள். அங்கு பிள்ளையாரைக் கும்பிடும் வழக்கம் உள்ளது. ராதாஷ்வாமி முறையைப் பின்பற்றுவோர் இறைச்சி உண்பதை நிறுத்தி விட்டார்கள். அங்கு பெரும்பாலானவர்களிடம் குடும்ப அட்டைகள் இல்லை. 100 நாள் வேலைத் திட்டத்தில் சேர ஆர்வம் இல்லை என சிலர் தெரிவித்தனர். அரசின் திட்டங்கள் சரியாகச் செயல்படுத்தப்படாத நிலையே அங்கு காணப்படுகிறது.

ஆவாஸ் யோஜனா போன்ற அரசுத் திட்டங்கள் அரசியல் கட்சி சார்பிலே வழங்கப்படுவதாகத் தெரிவித்தனர். அந்தக் கிராமத்தில் பெரும்பாலும் பிராமணர்கள், தலித்துகள், ராஜபுத்திர சாதியினர் உள்ளனர். 'உயர்சாதி'யினரின் வீடுகள் மலை ஏற்றங்களிலும், தலித்துகளின் வீடுகள் தாழ் நிலத்திலும் காணப்படுகின்றன.

2. ஜ்வலபுரியில் இரண்டு ஆப்பிள் தோட்டங்களுக்குச் சென்றோம். ஒரு ஆப்பிள் தோட்டத்தில் 5000 ஆப்பிள் மரங்கள் இருந்தன. அதன் சொந்தக்காரர் காங்கிரசுக் கட்சியை சேர்ந்த அரசியல் பிரமுகர் ஒரு பெட்ரோல் நிலையமும், உணவு விடுதியும் சொந்தமாக வைத்துள்ளார். இரண்டாவது ஆப்பிள் தோட்டத்தில் 2000 ஆப்பிள் மரங்கள் இருந்தன. அதன் சொந்தக்காரர் உள்ளூர் சட்ட மன்ற உறுப்பினரின் மகன். ஆப்பிள் தோட்டங்களில் முதலாளித்துவ அமைப்பு போல் காணப்பட்டாலும் நிலக்கிழாரிய முறையே உள்ளது. மூதாதையர்களின் நிலச் சொத்துக்களில் நிலக்கிழார்கள் அரசியல் ஆதரவுடன் லாபகரமான சந்தைப் பொருட்களை விளைவிக்க பயன்படுத்துகிறார்கள். பொருளாதாரச் சரிவில் அழியக் கூடிய விவசாயப் பொருட்களான ஆப்பிள்களின் விலை வீழ்ந்துவிட்டது. காஷ்மீருக்கான வழங்கலும் தடைப்பட்டுள்ளது.

3. சுரங்கசாலை: மண்டி மாவட்டத்தில் சண்டிகர்-மணாலி நெடுஞ்சாலையில் நான்கு

வழிச்சாலையை ஏற்படுத்துவதற்காக மலைகளைக் குடைந்து சுரங்கப் பாதைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. வெளியிலிருந்து பார்க்கும் போது அங்கு எந்தப் பிரச்சனையும் இல்லாதது போல்தான் தென்படுகிறது. சம்ரதா பகுதியில் சுரங்கப் பாதை உருவாக்கும் வேலையில் 1,200 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். அதில் 700 பேர் உள்ளூரை சேர்ந்தவர்கள், 500 பேர் புலம்பெயர் தொழிலாளர்கள். அவர்கள் தினமும் 12 மணி நேரம் வேலை செய்கிறார்கள். இரவு வேலையும் செய்கின்றனர். 20 அறைகளில் 120 பேர் வசித்து வருகிறார்கள். புலம்பெயர் தொழிலாளர்களுக்குத் தனிப்பட்ட சமூகவாழ்வு இல்லாததால், அவர்கள் அதிகம் சுரண்டப்படுகிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் ஆரம்பத்தில் ஆர்.எஸ்.எஸ்/பாஜக சார்ந்த பி.எம்.எஸ் தொழிற் சங்கத்தில் இருந்து தற்பொழுது சி.ஐ.டி.யுவில் இணைந்துள்ளனர். அந்தச் சுரங்க வேலைக்காக அதிக அளவில் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மண்டியில் அந்தச் சுரங்கச் சாலையின் வழியாகச் செல்லும் போது பயணத் தொலைவு 85 கிமீ குறைக்கப்படும் என்ற ஒரே காரணத்திற்காக இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அது பெருகிவரும் சுற்றுலாவாசிகளைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட சாலைத் திட்டம். அது ஒரு பாரபட்சமான வளர்ச்சித் திட்டம். அங்கு உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான வேறு எந்த முதலீடுகளும் செய்யப்படவில்லை. இதனால் அங்குள்ள சுற்றுச்சூழல் மாசடைந்துள்ளது குடிநீர் மாசு, ஒலி மாசு மற்றும் நில அதிர்வுகளால் அங்குள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆக, புதிய தொழில் நுட்ப முறைகள் அறிமுகப்படுத்தப்படாமல், தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்படாமல் உள்ளது. முறைசாராத் தொழில்களில் தொழில்நுட்ப அறிமுகம் குறைவாகவே உள்ளது. பஞ்சாபில் பார்த்தோமானால் அதிக அளவில் விவசாயத் தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 2000ஆம் ஆண்டு முதல் அங்கு அனைத்து வேலைகளும் எந்திரமயமாக்கப்பட்டுள்ளன. (மேற்கு வங்கத்தில் 1990ஆம் ஆண்டு முதல் நெல் வேளாண்மையில் கதிரடித்தல் கைகளால் செய்யப்படுவதில்லை.) நாங்கள் கள ஆய்வு செய்த இடங்களில் கிராமப் பொருளாதாரம் தொழில்நுட்ப வளர்ச்சியின்றி முடங்கிப் போன நிலையே தெரிய வருகிறது.

(தொடரும்)

சமந்தா

# கியூபாவின் புரட்சிப் பெண்கள் (4):

# வில்மா எஸ்பின்

**புரட்சிக்கு முன்:**



வில்மா எஸ்பின் கில்லோயிஸ் 1930 ஏப்ரல் 7 அன்று கியூபாவில் உள்ள சாண்டியாகோவில் வசதிமிக்க குடும்பத்தில் தந்தை ஜோஸ் எஸ்பினுக்கும், தாயார் மார்கரிட்டா கில்லோயிஸுக்கும் மகளாகப் பிறந்தார். வில்மாவின் தாய் பிரெஞ்சு மரபைச் சேர்ந்தவர். வில்மாவின் தந்தை 'பகார்டி ரம்' நிறுவனத்தில் வழக்கறிஞராகப் பணி புரிந்தார். அவர்களுக்கு லிலியானா, வில்மா, நில்சா, ஐவன், சோனியா, ஜோஸ் அலெஜான்ட்ரோ என ஆறு குழந்தைகள். அவர்கள் குழந்தைகளைத் தங்களைப் போலவே சமூக, இன, மதத் தடைகள் கருதாதவர்களாகவும், அதிக உணர்திறன் உள்ளவர்களாகவும், இயற்கையை நேசிப்பவர்களாகவும், வாசிக்கும் பழக்கமுடையவர்களாகவும், கலாச்சார மேம்பாட்டிலும் விளையாட்டிலும் ஆர்வமுடையவர்களாகவும் வளர்த்தனர். கார்ல் மார்க்சின் மருமகனும், பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவனருமான பால் லாபர்கு வில்மாவின் மூதாதையர்களில் ஒருவர். வில்மா தன் பள்ளிக் கல்வியைத் தனது ஊரிலுள்ள பெரெஸ் பேனா அகாடமியிலும், சாக்ராடோ கொராஸானிலும் படித்தார். 1940களில் அசோசியசியன் புரோ-ஆர்டே கியூபானோவில் பாலே நடனமும், இசையும் பயின்றார்.

**மாணவர் போராட்டங்கள்:**

வில்மா சாண்டியாகோவில் ஓரியண்டெ பல்கலைக்கழகத்தில் 1954இல் வேதியல் பொறியியலில் பட்டம் பெற்றார். கியூபாவில் இந்தத் துறையில் பட்டம் பெற்ற முதல் இரண்டு பெண்களில் வில்மாவும் ஒருவர். பல்கலைக்கழக குரலிசைக் குழுவின் ஒரே உச்சக் குரல் பாடகராக இருந்த வில்மா சிறு வயதிலிருந்தே பாலே கற்றதால் நடனக் குழுவிலும் இருந்தார். பல்கலைக்கழகக் கைப்பந்து அணியின் தலைவராகவும் இருந்தார்.

ஓரியண்டெ பல்கலைக்கழகத்தில் வில்மாவின் அரசியல் கல்வியும் தொடங்கியது. ஓரியண்டெ பல்கலைக்கழக மாணவர் கூட்டமைப்பின் போராட்டங்களில் வில்மா ஆர்வத்துடன்



பங்கேற்றார், சாண்டியாகோவின் தெருக்களில் நடைபெற்ற அனைத்து ஆர்ப்பாட்டங்களிலும் தனது பொறியியல் பள்ளிக்குரிய கொடியுடன் முன்னணியில் பங்கேற்றார்.

1952 மார்ச் 17 ஆட்சிக் கவிழ்ப்பிற்குப் பிறகு சர்வாதிகாரி பாத்திஸ்டாவிற்கு எதிரான போராட்டங்களில் வில்மா தீவிரமாகப் பங்கேற்றார். ஓரியண்டெ பல்கலைக்கழக மாணவர் கூட்டமைப்பு அரசியலமைப்பு மீட்கப்படும் வரை கல்லூரிகளைப் புறக்கணித்தது. 1940 அரசியலமைப்பை மீண்டும் நிர்மாணிக்கக் கோரி, "கிழக்கிலிருந்து மாண்டுவாவுக்கு அரசியலமைப்புப் படையெடுப்பு" என்ற அரசியல் இயக்கத்தில் வில்மா பங்கேற்றார், சாண்டியாகோ நகரம் முழுவதும் அதற்கான பிரகடனங்களை விநியோகித்தார். 1952 ஜூன் 8ஆம் தேதி பல்கலைக்கழகத்திற்குச் சென்று தேசப்பற்றை மறுவுறுதி செய்யும் கூட்டத்தில் கலந்து கொண்டு, 50ஆம்ஆண்டு சுதந்திர தின விழாவைக் கொண்டாடுமாறு மக்களைக் கேட்டுக் கொண்டார்.

அந்த நாள் மாணவர்களையும், ஆசிரியர்களையும் 1940 அரசியலமைப்பின் மீது உறுதிமொழியேற்க அழைத்தது. வில்மா எஸ்பினும், மாணவர் அமைப்பும் அதில் பங்கேற்று சர்வாதிகாரத்தின் மீதான தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் பனாமா கால்வாய்க்கும் இடையே கடல்போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் கியூபாவை இரண்டாகப் பிரிக்கும் விதமாக கியூப வழிக் கால்வாய் திட்டம் பாத்திஸ்டா அரசால் கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தை எதிர்க்கும் அமைப்பிலும் வில்மா அங்கம் வகித்தார்.

1953ல், ஃபிராங்க் பயஸ் என்பவர் ஓரியண்டே புரட்சிகரச் செயல்பாட்டமைப்பை (ARO)

நிறுவினார்.இவ்வியக்கம் பின்னர் ஜூலை 26 இயக்கத்துடன் ஒன்றிணைந்தது. ஃபிராங்க் பயஸுடன் வில்மா இணைந்து செயல்பட்டார். வில்மாவின் தங்கை நில்சா அவருக்கு முன்பே ஃபிராங்க் பயஸின் செயற்குழுவில் போராளியாகி வேலை செய்ய ஆரம்பித்து விட்டார்.

வில்மா மன்கடா தாக்குதலின் போது சர்வாதிகாரப் படைகளிடமிருந்து தப்பி வந்த போராளிகளுக்கும், காயமுற்றவர்களுக்கும் உதவி புரிந்தார். வில்மாவின் புரட்சிகர நடவடிக்கைகளால் அவருக்கு ஆபத்து நேரிடும் என அஞ்சிய அவர் தந்தை, வில்மா அமெரிக்கா சென்றால் அவரின் அரசியல் செயல்பாடுகள் தடைபடும் என்ற நம்பிக்கையில் மாசசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் (எம்ஐடி) முதுகலைக் கல்வி பெற வில்மாவை அமெரிக்காவிற்கு அனுப்பினார்.

வில்மா 1955ல் 'எம்ஐடி'யில் முதுகலைப் பட்டம் பெற்றார். அமெரிக்காவில் ஏழைகளும் கறுப்பின மக்களும் ஒடுக்கப்படுவதை நேரில் கண்டார். வில்மாவின் அமெரிக்க அனுபவம் அமெரிக்க அரசின் மீதான எதிர்ப்பை மேலும் தீவிரப்படுத்தியது. அவர் அமெரிக்காவிலிருந்து மெக்ஸிகோ வழியாக கியூபாவுக்குத் திரும்பும் வழியில் ஜூலை 26 இயக்கத்தின் போராளிகளைச் சந்தித்தார்.

கியூபாவில் தலைமறைவாக இருக்கும் போராளிகளுக்கான வழிமுறைகளையும். கியூபாவுக்குத் திரும்பி பாத்திஸ்டாவைத் தோற்கடிப்பதற்கான தங்கள் திட்டங்களை விவரிக்கும் கடிதங்களையும் வரைபடங்களையும் ஃபிடல் காஸ்ட்ரோவிடமிருந்து பெற்று அவற்றை ஃபிராங்க் பயஸிடம் ஒப்படைக்கும் பொறுப்பை ஏற்றார்.

**புரட்சியில்:**

1956 நவம்பர் 30இல் ஃபிராங்கின் உத்தரவுப்படி கியூபாவின் சுதந்திரத்திற்கான போராட்டத்தைத் தொடர மெக்ஸிகோவிலிருந்து ஃபிடல் மற்றும் ஜூலை 26 இயக்கப் போராளிகளை அழைத்து வந்த கிரான்மா படகு தரையிறங்குவதை ஆதரிப்பதற்காக சாண்டியாகோவில் எழுச்சியை ஏற்படுத்தியதில் வில்மா முக்கியப் பங்காற்றினார். வில்மாவின் வீடு இதற்கான தயாரிப்பு மையமாகச் செயல்பட்டது.

1957 ஜூலை 30இல் தலைசிறந்த புரட்சியாளர் ஃபிராங்க் பயஸ் 22 வயதில் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னரே வில்மாவை ஜூலை 26 இயக்கத்தின் கிழக்கு மாகாண ஒருங்கிணைப்பாளராக நியமித்தார். ஜூலை 30 ஃபிராங்க் பயஸின் நினைவு தினம் கியூபாவில்

தியாகியர் தினமாக போற்றப்படுகிறது.

பாத்திஸ்டாவின் கொடுங்கோன்மைக்கு எதிரான போராட்டத்தில் தங்கள் உயிரைக் கொடுத்த ஆயிரக்கணக்கான புரட்சிகரப் போராளிகளின் தைரியம், நல்லொழுக்கங்கள், மகத்துவம் என அனைத்திற்கும் எடுத்துக்காட்டாக ஒரு மனிதரை காண்பது எளிதல்ல. அந்த மனிதர் ஃபிராங்க் பயஸ் என்பதைத் தயக்கமின்றி காண முடியும் என வில்மா கூறியுள்ளார்.

ஃபிராங்க் பயஸின் மறைவுக்குப் பிறகு கிழக்கு கியூப நகர்ப்புறத் தலைமறைவுக் கிளர்ச்சி இயக்கத்தின் தலைவராக வில்மா பொறுப்பேற்றார். அவரது வீடு அதன் தலைமையகமானது. பாத்திஸ்டா படையினரின் தேடுதல் வேட்டையின் போது அவர் வீட்டுக் கூரையில் ஏறி தப்பி ஓடியுள்ளார்.

**சியரா மிஸ்ட்ராவில்:**



நகர்ப்புற இயக்க வேலைகளின் போது சர்வாதிகாரப் படைகளால் வில்மா தொடர்ந்து அச்சுறுத்தப்படுவதன் காரணமாக, சியரா மேஸ்ட்ரா மலைகளில், குறிப்பாக ஃபிராங்க் பயஸ் இரண்டாம் முன்னணியின் கிளர்ச்சிப் படையில் சேர வேண்டும் என்று இயக்கம் முடிவு செய்தது. வில்மா ஸ்பானியம், ஆங்கிலம் இரண்டும் சரளமாகப் பேசும் திறன் கொண்டவர் என்பதால் சர்வதேச அளவில் புரட்சிகர இயக்கத்தைக் கொண்டுசேர்க்கும் பிரதிநிதியாக முக்கியப் பங்காற்றியுள்ளார்.

1957ஆம் ஆண்டில் நியூயார்க் டைம்ஸ் நிருபர் ஹெர்பர்ட் மேத்யூஸ், பிடல் காஸ்ட்ரோ இடையிலான நேர்காணலுக்கு அவர் மொழிபெயர்ப்பாளராகச் செயல்பட்டார், இது புரட்சி குறித்த செய்திகளைப் பரப்புவதற்கும், கியூபர்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் காஸ்ட்ரோவின் மரணம் குறித்த பாத்திஸ்டாவின் கூற்றுகள் பொய்யானவை என்பதை உறுதிசெய்வதற்கும் உதவியது. அமெரிக்கப் பத்திரிகையாளர்கள் கெரில்லாப் போராளிகளைப் பற்றி எழுத மலையேறி வந்த சமயங்களில் வில்மாதான் மொழிபெயர்ப்பாளராக உதவியுள்ளார்.

வில்மா ஒரு வேதியல் பொறியியலாளராக இயக்கத்திற்கான வெடிகுண்டுகளைத் தயாரித்துள்ளார். கெரில்லாப் படைத் தூதர்களின் தகவல்தொடர்புக்காக வில்மா சிறந்த முறையில் தகவல்களை குறியாக்கம் செய்வதிலும், மறைவிலக்கம் செய்வதிலும் உதவினார்.



கெரில்லாப் படைகளுக்குத் தேவையானவற்றைப் பெற்று வழங்கும் பொறுப்பும் அவருக்கு அளிக்கப்பட்டது. லூஸ், அலிசியா, மோனிகா, டெபோரா என்று பல புனைப்பெயர்களுடன் அவர் போராட்டப் பணிகளில் ஈடுபட்டார். ஃபிராங்க் பயஸ் இரண்டாம் முன்னணியின் சார்பாக 11 மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களைப் பராமரிப்பதற்கு பொறுப்பான நிர்வாக வலையமைப்பை ஏற்படுத்துவதிலும், 100 பள்ளிகளை உருவாக்குவதிலும் வில்மா சிறப்பாக செயல்பட்டார்.

**புரட்சிக்குப் பின்:**

ஃபாத்திஸ்டாவை கியூபாவிலிருந்து வெற்றிகரமாக துரத்தியடித்த பின் 1959, ஜனவரி 26ல் கியூப கம்யூனிஸ்ட் கட்சியின் தற்போதைய முதன்மை செயலாளரும், ஃபிடல் காஸ்ட்ரோவின் சகோதரருமான ராவுல் காஸ்ட்ரோவை வில்மா மணம் புரிந்தார். அவருக்கு டெபோரா, மரியெலா, நில்சா, மற்றும் அலெஜான்ட்ரோ காஸ்ட்ரோ எஸ்பான் என நான்கு குழந்தைகள் பிறந்தனர். வில்மாவுக்கு எட்டு பேரக்குழந்தைகள் உள்ளனர். அவரது மகள் மரியெலா காஸ்ட்ரோ தற்போது கியூபாவின் பாலியல் கல்விக்கான தேசிய மையத்தின் தலைவராக உள்ளார், அவரது மகன் அலெஜான்ட்ரோ காஸ்ட்ரோ எஸ்பான் உள்துறை அமைச்சகத்தில் படைத்தலைவராக உள்ளார்.

**நிர்வாகப் பொறுப்புகள்:**

புரட்சியின் வெற்றிக்குப் பின் ஜூலை 26 இயக்கத்தின் முன்னணி உறுப்பினராக, புரட்சிகர அரசின் நிர்வாகத்தில் வில்மா பல முக்கியப் பொறுப்புகளை ஏற்றார். உணவுத் தொழில்துறையின் தொழில்துறை மேம்பாட்டு இயக்குநராக வில்மா பணியாற்றினார். 1967 முதல் 1971 வரை சமூக தடுப்பு ஆணையத்தின் தலைவராகவும், 1969 இல் உணவு அமைச்சகத்தின் தொழில்துறை மேம்பாட்டு இயக்குநராகவும் பணியாற்றினார்.

1971ல் குழந்தைகள் பராமரிப்பு அமைப்பின் தலைவராகவும், குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான கியூபா நாடாளுமன்ற ஆணையத்தின் தலைவராகவும், மற்றும் பாலியல் கல்வி தொடர்பான தேசிய குழுவின் தலைவராகவும் செயல்பட்டார். கியூப இளம்

தலைமுறையினருக்கு பயிற்சியளிப்பதிலும் நாட்டின் விஞ்ஞான வளர்ச்சியை மேம்படுத்தும் பல்வேறு நடவடிக்கைகளிலும் பங்கேற்றார்.1976ல் கியூப மக்களவையின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். கியூப மேலவையின் உறுப்பினராகவும் செயல்பட்டார் வில்மா 1965 முதல் 1989 வரை கியூப கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினராக செயல்பட்டார். . 1980 முதல் 1991 வரை கியூப ஆட்சிக்குழுவின் உறுப்பினராகவும் இருந்தார். ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையிலும் கியூபாவின் பிரதிநிதியாகவும் பணியாற்றினார்.

## கியூபப் பெண்கள் கூட்டமைப்பு:

கியூபப் பெண்களை ஒருங்கிணைத்து அமைப்பாக்கும் பணியை வில்மா ஏற்றுக் கொண்டார். 1960 ஆகஸ்ட் 23இல் கியூபாவின் அனைத்துப் புரட்சிகரப் பெண்கள் குழுக்களையும் ஒன்றிணைக்கும் அமைப்பாக கியூபப் பெண்கள் கூட்டமைப்பு நிறுவப்பட்டது. வில்மா இவ்வமைப்பின் தலைவராகச் செயல்பட்டார். பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதும், அவர்கள் வேலைவாய்ப்பு பெறத் தேவையான திறன்களை வழங்குவதும், எல்லாவற்றிற்கும் மேலாக அனைத்து அரசியல், சமூக, பொருளாதார நடவடிக்கைகளிலும் கியூபப் பெண்கள் சம பங்கு ஏற்க ஊக்குவிப்பதுமே இவ்வமைப்பின் முதன்மைக் குறிக்கோள்கள். கியூப மகளிர் கூட்டமைப்பின் (எஃப்எம்சி) தலைவராக மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட வில்மா தன் இறுதி நாள் வரையிலும் அத்தலைமைப் பொறுப்பில் பணியாற்றியுள்ளார். ஆண்களும் பெண்களும் சம வாய்ப்புகளையும் உரிமைகளையும் வழங்கும் சமத்துவமிக்க, நீதியான சமுதாயத்தை உருவாக்குவதற்கான போராட்டத்தில் கியூபப் பெண்களை அவர் வெற்றிகரமாக வழிநடத்தினார். வில்மா கியூபாவில் பாலின சமத்துவத்தை நிலைநாட்டப் போற்றுதற்குரிய வகையில் பெரும்பங்கு ஆற்றியுள்ளார். கியூபப் பெண்கள் கூட்டமைப்பைச் சேர்ந்த 100,000 பெண்கள் கியூபாவெங்கும் 10 இலட்சம் மக்கள் எழுத்தறிவு பெற உதவினர். 1960இல், பன்றி வளைகுடாப் படையெடுப்பிற்கு முன்னர் கியூபா முழுதும் சர்க்கரை ஆலைகளும் கரும்பு வயல்களும் தாக்குதலுக்கு உள்ளான போது, கியூப மகளிர் கூட்டமைப்பு அவசர மருத்துவ உதவிக்கான படைப்பிரிவுகளை உருவாக்கியது.

பணிபுரியும் பெண்களுக்கு உதவியாக ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளைக் கவனிக்கும் ஒரு நிறுவனத்தை உருவாக்கும் பணி, ஃபிடல் காஸ்ட்ரோவால் கியூப மகளிர் கூட்டமைப்புக்கு அவ்வமைப்பின் முதலாவது பேராயத்தின் இறுதி அமர்வில் வழங்கப்பட்டது. பகல்நேரப் பராமரிப்பு மையங்களின் வலையமைப்பை உருவாக்கும் பணியை வில்மா சிறப்பாகச்

செயல்படுத்தினார். 1961 ஏப்ரல் மாதம் அவை செயல்பாட்டிற்கு வந்தன.

1968இல் வில்மா குழந்தைகளுக்கான நிறுவனத்தை உருவாக்கினார். இது அதிகாரபூர்வமாக 1971 மே 31இல் நிறுவப்பட்டது - இது பள்ளி முன்பருவக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பதற்கும் உதவுவதற்குமான அரசுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்புடைய நிறுவனம் ஆகும். .

கியூப அரசும், மகளிர் கூட்டமைப்பும் பெண்களைத் தொழிலாளர் படையில் சேர ஊக்குவித்தன, 1975ஆம் ஆண்டு வில்மாவின் முன்முயற்சியால் கியூப குடும்ப நெறிமுறைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் வேலை செய்யும் தாய்மார்களுக்கான பணிச்சுமைகளை குறைக்கும் விதத்தில் வீட்டு வேலைகளையும், குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்புகளையும் ஆண்கள் பகிர வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

குழந்தை பராமரிப்பிலும், வீட்டு கடமைகளிலும் “உதவி" என்ற சொல்லை நாம் பயன்படுத்தினால், அவை பெண்களின் பொறுப்புகள் என்றே நாம் ஏற்றுக்கொள்கிறோம், ஆனால் அது அவ்வாறு இல்லை: நாம் “பகிர்” என்று சொல்கிறோம் ஏனென்றால் அவை ஒரு குடும்ப பொறுப்பு என்று வில்மா குறிப்பிட்டுள்ளார்.

1976 ஆம் ஆண்டில் தொழிலாளர் அமைச்சகம் உடல்நலக் கேடுகளை விளைவிக்கும் என்ற பெயரில் கிட்டத்தட்ட 300 வகை வேலைகளில் இருந்து பெண்களை தடைசெய்யும் தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்த 300 வகை வேலைகளை இறுதியில் வில்மாவின் கடும் முயற்சியால் 30 ஆகக் குறைக்கப்பட்டது. மாற்றுபாலினத்தவர், ஓரினச் சேர்க்கையாளர்கள் மீதான பாகுபாடுகளையும், ஒடுக்குமுறைகளையும் நீக்க வில்மா தொடர்ந்து போராடியுள்ளார்.

சர்வதேச அரங்கில் வில்மாவும், அவர் பெற்ற விருதுகளும்:

சர்வதேச அளவில், அவர் ஒரு சிறந்த அரசியல் தலைவராக கருதப்பட்டார். அவர் பல்வேறு சர்வதேச நிகழ்வுகளில் கியூபாவை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

செப்டம்பர் 1959 இல் சிலியில் நடந்த சர்வதேச ஜனநாயக பெண்கள் கூட்டமைப்பின் பேரவையில் கலந்து கொண்ட கியூப பிரதிநிதிகளுக்கு வில்மா தலைமை தாங்கினார். சர்வதேச பெண்கள் மாநாடுகளுக்கான கியூப பிரதிநிதிகளுக்கும் தலைமை தாங்கினார்.

1963-ல்கியூப தலைநகரில் நடைபெற்ற அமெரிக்காவின் மகளிர் பேராயத்தில் வில்மா கியூபாவை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

1969-ஜூன் மாதம் ஹெல்சின்கியில் நடைபெற்ற உலக மகளிர் பேராயத்திற்கு தலைமை

தாங்கினார்.

1970-வியட்நாமிய பெண்கள் கூட்டமைப்பின் அழைப்பின் பேரில் வியட்நாம் ஜனநாயகக் குடியரசுக்குச் சென்ற கியூப தூதுக்குழுவிற்கு வில்மா தலைமை தாங்கினார். அதே காலகட்டத்தில் தான் ஆசிய நாட்டிற்கு எதிரான அமெரிக்க குண்டுவெடிப்பு தாக்குதல்களை மீண்டும் தொடங்கியது.

1975-ல் அவருக்கு அனா பெட்டான்கோர்ட் விருது வழங்கப்பட்டது. அதே ஆண்டு அக்டோபரில், அவர் பெர்லினுக்குப் பயணம் செய்தார், அக்டோபர் 20 முதல் 24 வரை நடைபெற்ற உலக மகளிர் பேராயத்தில் கியூப தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கினார்.

1977-பிப்ரவரி 20 அன்று, பல்கேரியா மக்கள் குடியரசின் மாநில கவுன்சிலால் இராணுவ உறவுகளை வலுப்படுத்தியதற்கான விருது வில்மாவுக்கு வழங்கப்பட்டது. அதே ஆண்டில் மார்ச் 8 ஆம் தேதி, கியூப புரட்சிகர ஆயுதப்படைகளின் 20 வது ஆண்டு நினைவு பதக்கம் அவருக்கு வழங்கப்பட்டது. அதே ஆண்டு, வில்மா ஜனநாயக பெண்கள் கூட்டமைப்பின் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1978-பிப்ரவரியில், அவர் ஜமைக்கா சென்றார், அங்கு லத்தீன் அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களை ஆர்வத்துடன் பங்கேற்கச் செய்வதற்கான பிராந்திய துணைக்குழுவின் முதல் கூட்டத்தில் கலந்து கொண்டார். மே மாதம், மாஸ்கோவில் நடைபெற்ற உலக ஜனநாயக பெண்கள் கூட்டமைப்புத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

1979-ஏப்ரல் மாதம், அவருக்கு லெனின் சர்வதேச பரிசு வழங்கப்பட்டது. மக்களிடையே சமாதானத்தை வலுப்படுத்த அவர் ஆற்றிய பங்களிப்புக்காக உலக ஜனநாயக பெண்கள் கூட்டமைப்பு டிசம்பர் 27 அன்று அவருக்கு அப்பரிசை வழங்கியது.

1981-செப்டம்பர் 8 ஆம் தேதி, பாரிஸில், கியூப பெண்களின் திறன்களை மேம்படுத்துவதில் கியூப மகளிர் கூட்டமைப்பு ஆற்றிய பணிக்காக யுனெஸ்கோ வழங்கிய நாதேழ்தா க்ருப்ஸ்கலா பரிசை வில்மா பெற்றார்.

1982- வேளாண் தொழிலாளர்கள் சங்கத்தால் வழங்கப்பட்ட மார்கோஸ் மார்த்தி சிறப்பு விருதையும், புரட்சி பாதுகாப்பு குழுக்களால் வழங்கப்பட்ட செப்டம்பர் 28 விருதையும் பெற்றார்.

1983-ஜனவரியில் வில்மா ஐ.நா. மகளிர் நிறுவனத்தின் ஆலோசகர் குழுவின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார். அடுத்த ஆண்டும் அவர் அதே பதவிக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1985- ஜூலை மாதம், பெண்களின் நிலைமை குறித்த ஐ.நா மாநாட்டில் கலந்து கொண்டார். அதே ஆண்டு, ஆகஸ்ட் 23ல் கியூப மகளிர் கூட்டமைப்பின் 25 வது ஆண்டு நிறைவு விழாவின் போது வில்மாவுக்கு மரியானா கிராஜல்ஸ் விருது வழங்கப்பட்டது. அக்டோபரில் செக்கோஸ்லோவாக்கியாவின் கம்யூனிஸ்ட் கட்சி பாசிசத்திற்கு எதிரான வெற்றியின் 40 வது ஆண்டு நினைவு பதக்கத்தை வில்மாவுக்கு வழங்கியது.

1987-மாஸ்கோவில் நடந்த உலக பெண்கள் பேராயத்தில் கலந்து கொண்டார்.

1989-பிப்ரவரியில் லாவோஸ் ஜனநாயக குடியரசின் அமைச்சர்கள் குழு அவருக்கு நட்பிற்கான விருதை வழங்கியது. நிகரகுவாவில் உள்ள சாண்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணி அவருக்கு சாண்டினிஸ்டா புரட்சியின் 10 வது ஆண்டு நினைவு விருதை வழங்கியது.

1991-மார்ச் மாதம் அவர் வெனிசுலா பெண்களின் 2 வது பேராயத்தில் வில்மா பங்கேற்றார்.

1992-- ஜனவரி மாதம் அவர் பிரேசிலின் நிடெரோய் நகரில் நடைபெற்ற கியூபாவுடனான ஒருமைப்பாட்டிற்கான நிகழ்வின் இறுதி அமர்வில் வில்மா கலந்து கொண்டார். 31 ஆம் தேதி ரியோ டி ஜெனிரோ மாநிலத்தில் பிரேசில் நகரத்தின் மரியாதைக்குரிய மகள் என்று பெயரிடப்பட்டார். நகராட்சி அரசால் உலகின் சிறந்த ஆளுமைகளை கௌரவிக்கும் அரரிபோயா நோ கிரெயின் விருது அவருக்கு வழங்கப்பட்டது. பிப்ரவரியில், அவர் ஜெனீவாவுக்குச் சென்றார், அங்கு பெண் விவசாயிகளின் நிலைமை குறித்த உச்சி மாநாட்டில் கலந்து கொண்டார். நவம்பர் 20 ஆம் தேதி, அவர் மீண்டும் பிரேசிலின் நைட்ரோய் சென்றார், அங்கு கியூபாவின் நன்கொடையாக ஒரு குடும்ப மருத்துவர் அலுவலகத்தை திறந்து வைத்தார்.

1994-செப்டம்பரில், அர்ஜென்டினாவில் நடைபெற்ற உலக ஜனநாயக பெண்கள் கூட்டமைப்பின் இரண்டாவது பிராந்திய கூட்டத்தில் கலந்து கொண்டார். அவர் அர்ஜென்டினாவைச் சேர்ந்த பெண் சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தார் மேலும் லத்தீன் அமெரிக்காவிற்கான ஐ.நா. பொருளாதார ஆணையம் (செபால்) ஏற்பாடு செய்த பெண்கள் குறித்த ஆறாவது பிராந்திய மாநாட்டிலும் பங்கேற்றார்.

1995 - ஐ.நாவால் அறிவிக்கப்பட்ட உலக குடும்ப ஆண்டின் வெற்றிக்கு வில்மா அளித்த பங்களிப்புக்காக ஐ.நா அவரை சிறப்பித்தது.

1998 செப்டம்பரில் அவர் சிலியில் நடைபெற்ற அமெரிக்காவின் முதல் பெண்கள் மற்றும் பெண் சட்டமன்ற உறுப்பினர்களின் 7 வது மாநாட்டில் கியூபாவை பிரதிநிதித்துவப்படுத்தினார். பினோசே சர்வாதிகாரத்தால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் கூட்டமைப்பை அவர்

சந்தித்தார்.அக்கூட்டமைப்பு அவருக்கு "அவர்கள் எங்கே" என்ற மனித உரிமைகள் குழுவால் வழங்கப்பட்ட மிக உயர்ந்த சிறப்புக்குரிய பதக்கத்தை வழங்கியது.

2000-அவர் பனாமாவில் பெண்கள் தொடர்பான கொள்கைகளை பின்பற்றுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பேற்ற பெண் அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார். அந்த ஆண்டு பனாமாவில் நடைபெற்ற 5 வது ஐபரோ-அமெரிக்க உச்சிமாநாட்டிற்கான ஏற்பாடுகளின் போது இந்த சந்திப்பு நிகழ்ந்தது. ஜூன் 6 ஆம் தேதி, ஐ.நா பொதுச் சபையின் அசாதாரண அமர்வுகளின் இரண்டாம் நாளில் அவர் கலந்து கொண்டார், இது 1995 முதல் 2000 வரையிலான காலகட்டத்தில் பெண்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கான முடிவுகளை ஆய்வு செய்தது. அந்த சந்தர்ப்பத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் புதிய தாராளமயக் கொள்கைகள். பெண்களின் நிலைமையில் எதிர்மறையான தாக்கம் செலுத்துவதை வில்மா கண்டித்தார். கியூபா மீதான அமெரிக்க விரோதக் கொள்கையைப் பற்றிக் குறிப்பிடுகையில், தங்கள் இறையாண்மையையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கான கியூப மக்களின் தீர்மானத்தை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

2001-மார்ச் மாதத்தில், லத்தீன் அமெரிக்க தேசத்தின் தேசிய மகளிர் நிறுவனத்தின் அழைப்பை ஏற்று வெனிசுலாவுக்கு சென்றார். லத்தீன் அமெரிக்க பெண்களின் உரிமைகளுக்கான போராட்டத்தில் அவரின் சிறந்த பங்களிப்பிற்காக அவ்வமைப்பு அவருக்கு ஆர்கெலியா லயா என்ற விருதை வழங்கியது. ஹியூகோ சாவேஸ் வில்மாவிற்கு "பிரான்சிஸ்கோ டி மிராண்டா" விருதை வழங்கி சிறப்பித்தார்.

அதே ஆண்டு, கியூபாவின் மேலவை அவருக்கு கியூப குடியரசின் கதாநாயகி பட்டம் அளித்தும் பிளாயா கிரோன் விருது வழங்கியும் சிறப்பித்தது.

2002-ல் லெபனானின் பெய்ரூட்டில் நடைபெற்ற உலக ஜனநாயக பெண்கள் கூட்டமைப்பின் 13 வது மாநாட்டில் கலந்து கொண்டார்.

## வில்மாவின் நினைவில்:

புற்று நோயால் பாதிக்கப்பட்ட வில்மா 2007ஆம் ஆண்டில் ஹவானாவில் இறந்தார். அவர் இறந்த மறுநாள் ஹவானாவில் உள்ள கார்ல் மார்க்ஸ் அரங்கில் கியூப கம்யூனிஸ்ட் கட்சி அவருக்கு இறுதி மரியாதை செலுத்தியது. கியூப அரசு அவரை "நம் நாட்டிலும் உலகளவிலும் பெண்களின் விடுதலைக்கு மிகவும் பொருத்தமான போராளிகளில் ஒருவராக" வில்மாவைப் புகழ்ந்து

அறிக்கை வெளியிட்டது. அவரது உடல் தகனம் செய்யப்பட்டு கியூபாவின் சாண்டியாகோ மாகாணத்தில் உள்ள இரண்டாவது பிராங்க் பாஸ் கிழக்கு முன்னணி கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. சாண்டியாகோவில் உள்ள அவரது வீடு அருங்காட்சியகமாக மாற்றப்பட்டுள்ளது.

ஃபிடல் காஸ்ட்ரோ வில்மாவுக்கு நினைவஞ்சலி செலுத்தும் விதமாக "வில்மாவின் போராட்டங்கள்" என்ற தலைப்பில் தன் மனப்பதிவுகளை பகிர்ந்துள்ளார். அதில் அவர் "வில்மாவின் உதாரணம் முன்பை விட இன்று மிகவும் அவசியம். கியூபாவில் பெரும்பாலானோர் உலகின் பிற பகுதிகளைப் போலவே, மதிப்புக்குரிய புரட்சிகர விதிவிலக்குகளுடன், பாகுபாட்டை எதிர்கொண்ட போது, அவர் தனது முழு வாழ்க்கையையும் பெண்களுக்காக போராடுவதற்கு அர்ப்பணித்தார். "

"புரட்சி வெற்றிபெற்றதும், கியூபப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக அவரது தடுத்து நிறுத்த முடியாத போர் தொடங்கியது, இது கியூபப் பெண்கள் கூட்டமைப்பை அமைப்பதற்கு வழிவகுத்தது. எந்தத் தேசிய அல்லது சர்வதேசக் கூட்டங்களிலும் அவை எவ்வளவு தூரத்திலிருந்தாலும் அவர் கலந்து கொள்ளத் தவறியதே இல்லை; தனது முற்றுகையிடப்பட்ட தாயகத்தையும் புரட்சியின் உன்னதமான நீதி இலட்சியங்களையும் அவர் பாதுகாத்தார்.

"கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலம் வில்மாவின் போராட்டங்களுக்கு நான் சாட்சியாக இருந்தேன். சியரா மேஸ்ட்ராவில் ஜூலை 26 இயக்க கூட்டங்களில் அவரை என்னால் மறக்க முடியாது. இறுதியாக இரண்டாம் கிழக்கு முன்னணியில் ஒரு முக்கியப் பணிக்காக அவர் தலைமையால் அனுப்பப்பட்டார். எந்த ஆபத்திற்கும் வில்மா பின்வாங்கமாட்டார்" என்றும் ஃபிடல் காஸ்ட்ரோ நினைவு கூர்ந்துள்ளார்.

2013 ஏப்ரலில் ஃபிடல் காஸ்ட்ரோ ஹவானாவில் வில்மா எஸ்பின் 83ஆவது பிறந்த நாளில் வில்மாவின் நினைவாக ஒரு தொடக்கப் பள்ளியைத் திறந்து வைத்தார்.

கியூபாவில் 85 சதவீதப் பெண்கள் கியூபப் பெண்கள் கூட்டமைப்பின் உறுப்பினர்களாக உள்ளனர். உலகளவில் பெண்களின் விடுதலைக்கான போராட்டத்தில் போற்றுதற்குரிய ஒரு முன்னுதாரணமாக வில்மா திகழ்ந்துள்ளார். பெண் விடுதலைக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்துப் புரட்சிக்குள் புரட்சி செய்த வில்மா எஸ்பினை, கியூபப் புரட்சி வரலாற்றில் நீக்கமற நிறைந்த அந்தப் புரட்சிப் பெண்ணை நம் செயல்பாடுகளால் போற்றிடுவோம்.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

சமந்தா

# டாலருக்கு வந்த வாழ்வு (3)

## எண்ணெயால் மினுக்கும் டாலர்:

சவுதி அரேபியா உலகளவில் 10% எண்ணெய் இருப்புகளைக் கொண்டு ஒபெக்கில் மேலாதிக்கம் பெற்றிருந்தது. சவுதி அரேபியாவுக்குத் தன் எண்ணெய் வயல்களைப் பாதுகாக்கத் தெரியாதா என்ன, எதற்கு அமெரிக்காவிற்கு இந்தக் காவல்காரன் வேலை? பாலுக்குப் பூனை காவல் காப்பது போலத்தான் அமெரிக்கா சவுதி அரேபியாவின் எண்ணெய் வயல்களைப் பாதுகாக்கிறது.

பிற நாடுகளிலுள்ள பலவீனமான அம்சங்களை தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் வில்லத்தனத்தில் அமெரிக்காவுடன் யாரும் போட்டி போட முடியாது. சவுதி அரச குடும்பம் ஊழலில் திளைத்திருந்தது. பெட்ரோ-டாலர் என்ற இந்த பரஸ்பர உறவால் சவுதி அரச குடும்பம் டாலருக்குப் புத்துயிர்ப்பு அளித்துள்ளது கைம்மாறாக, அமெரிக்க அரசு சவுதி அரச குடும்பத்தைப் பாதுகாக்கிறது. அமெரிக்க ரவுடி அரசின் ஆதிக்கம் இல்லாதிருந்தால் அங்கு எப்போதோ ஜனநாயகம் மலர்ந்திருக்கும். வெனிசுலா, கியூபா, சீனா, ஈரான் என உலகெங்கும் ஜனநாயகம் மீறப்படுவதாகக் கூச்சல் போடும் அமெரிக்க அரசு உண்மையிலே ஜனநாயகக் காவலனாக இருந்திருக்குமானால் என்ன செய்திருக்க வேண்டும்? சவுதி அரேபியாவிலுள்ள முடியாட்சிக்கு முடிவு கட்டி ஜனநாயகத்தைக் கொண்டுவர முயற்சி எடுத்திருக்க வேண்டும். ஆனால் இன்று வரை முடியாட்சி அங்கு கட்டிக் காக்கப்படுவதற்கு அமெரிக்க அரசும், அதனுடன் கொண்ட பெட்ரோ-டாலர் ஒப்பந்தமும் முக்கியக் காரணமாக உள்ளது. அமெரிக்க அரசின் ஜனநாயகம் எவ்வளவு போலியானது என்பது சவுதி அரேபியா விஷயத்தில் வெளிப்படையாக அம்பலப்படுகிறது.

1973ஆம் ஆண்டு யோம் கிப்பூர் போரில் இஸ்ரேலுக்கு இராணுவ உதவி அளித்ததற்காக அமெரிக்காவிற்கும், பிற இஸ்ரேலிய நட்பு நாடுகளுக்குமான எண்ணெய் ஏற்றுமதியை பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு நிறுத்தியது. ஒபெக்கின் இந்தப் பொருளாதாரத் தடையினால் ஆறு மாதங்களில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெயின் விலை 3 அமெரிக்க டாலரிலிருந்து 12 ஆக உயர்ந்தது; அதாவது டாலர் நான்கு மடங்கு மதிப்பிழந்தது. தடை முடிந்த பின்னரும் எண்ணெய் விலை அதிகமாகவே நீடித்தது. டாலர் கச்சா எண்ணெயிடம் இவ்வாறு தொடர்ந்து மதிப்பிழக்குமானால் டாலரால் உலகப் பணமாகத் தொடர்ந்து நீடிக்க முடியுமா? முடியாது. கச்சா எண்ணெய் விலையை அமெரிக்கா தனது கட்டுக்குள் வைப்பதன் மூலம்

டாலரை உலகப் பணமாக நீடிக்க வைக்க முடியும். அதைத்தான் நிக்சனும், கிஸ்ஸிங்கரும் செய்தனர். கச்சா எண்ணெய்க்கு என்றென்றும் தேவையும், மதிப்பும் அதிகரித்துக் கொண்டே வருவதால் தோல்வியுற்ற டாலரை, அதனுடன் இணைத்து பெட்ரோ-டாலராக்கி வெற்றிகரமாக அதன் மதிப்பைக் கூட்டினர் (நட்டத்தில் இயங்கும் தனியார் வங்கிகளின்/நிறுவனங்களின் மதிப்பைக் கூட்ட இலாபத்துடன் செயல்படும் அரசு வங்கிகளுடன்/நிறுவனங்களுடன் இணைக்கும் அரசின் கொள்கைகள் நினைவுக்கு வருகின்றனவா?).

ஒரு நாணயம் உலகப் பணமாக இருக்க வேண்டுமானால் அந்த நாணயத்தில் மற்றப் பொருட்களின் மதிப்பு அதிக ஏற்ற இறக்கங்களுக்கு உள்ளாகக் கூடாது, நிலைத்தன்மையுடன் இருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் நிலைத்தன்மையை இழந்தால் அந்த நாணயத்தின் மீதான நம்பிக்கையும் அதற்கான நிகரத் தேவையும் குறைந்து விடும். எதனால் என்றால் பணம் வெறும் பரிவர்த்தனைக்கான ஊடகம் மட்டுமல்ல செல்வத்தை சேமிப்பதற்கான ஊடகமாகவும் உள்ளது. ஒவ்வொரு நிதி நெருக்கடியின் போதும் தங்கத்தின் மதிப்பு கூடும் போக்கு காணப்படுகிறது. எதனால் என்றால் தங்கம் மற்ற ஊடகங்களைக் காட்டிலும் குறைந்த அளவு தேய்மான மதிப்பைக் கொண்டுள்ளதால் தங்கம் என்றென்றும் உலகப் பணமாக இருக்கும் தகுநிலையைப் பெற்றுள்ளது.

தங்கத்தை விட மதிப்பு அதிகமான ஒரு பொருள் உள்ளது என வைத்துக் கொள்வோம், உதாரணமாக சூரியகாந்திப் பூ தங்கத்தை விட விலை உயர்ந்து விட்டது என வைத்துக் கொள்வோம், அப்பொழுது சூரிய காந்திப் பூவை வாங்கி விற்பதன் மூலம் இலாபம் சம்பாதிக்க முயல்வார்களே தவிர, சூரியகாந்திப் பூக்களையே சேமிப்பு ஊடகமாக அப்படியே வைத்துக் கொள்ள யாரும் முன்வர மாட்டார்கள், ஏனென்றால் அது விரைவில் வாடிப் போவதால் மதிப்பிழந்து விடும்.

எண்ணெய் விலை டாலரில் அதிகமாகிக் கொண்டே போனால், அதாவது டாலர் மதிப்பிழந்தால் சேமிப்பாளர்கள், நிதி முதலீட்டாளர்கள் டாலரைக் கைவிட்டு தங்கத்தில் முதலீடு செய்யவே விரும்புவார்கள். எண்ணெய் விலை ரியாலிலோ, தினாரிலோ நிலைத் தன்மையுடன் நீடித்தால் டாலரை விட்டு ரியால், தினாரில் முதலீடு செய்யும் போக்கே காணப்படும். டாலரை பெட்ரோல் விற்பனையுடன் கோத்துவிட்ட பெட்ரோ-டாலர் என்ற இந்தப் புதிய ஏற்பாடு பெட்ரோலியப் பொருட்களின் விலை ஏற்ற இறக்கங்களிலிருந்தும், நம்பிக்கையின்மையிலிருந்தும் டாலரை கட்டிக் காத்து அதை உலகப் பணமாக நீடிக்க செய்வதற்கான முக்கியக் காரணியாக

உள்ளது.

அமெரிக்கா உற்பத்தி செய்த பொருளை அதன் நாணயத்திலே விற்க விரும்பினால் அதை யாரும் கேள்வி கேட்கப் போவதில்லை. தன் நாட்டில் உற்பத்தியாகாத பொருளுக்கு உரிமை கொண்டாடுவதில் என்ன நியாயம் உள்ளது? அமெரிக்காவில் உற்பத்தியான பொருளை ரியாலிலோ தினாரிலோ விற்க அமெரிக்கா அனுமதிக்குமா?.

பெருமளவு சர்வதேசப் பரிவர்த்தனைகள் டாலரிலே மேற்கொள்ளப்படுவதால் டாலரின் மதிப்பு உயர்கிறது. உலகெங்கும் கச்சா எண்ணெய் அதிகம் தேவைப்படுவதாலும், எண்ணெய் அமெரிக்க டாலர்களில் விலை நிர்ணயம் செய்யப்படுவதாலும், ஒவ்வொரு முறை டாலரில் எண்ணெய்ப் பரிவர்த்தனை செய்யும் பொழுதும் டாலரின் மதிப்பு உயர்கிறது. இது உலக நாடுகள் எண்ணெய் வாங்க டாலர் கையிருப்பு வைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது. ஆனால் அமெரிக்காவுக்கு அப்படிப்பட்ட தேவையில்லை. கச்சா எண்ணெயின் விலை ஏறும் போது, அதை இறக்குமதி செய்யும் நாடுகளுக்கான செலவினங்கள் அதிகரிக்கின்றன. ஆனால் இப்படிப்பட்ட பிரச்சனை அமெரிக்காவுக்குக் கிடையாது. அமெரிக்க இறக்குமதியாளர்கள் நாணயப் பரிமாற்ற வீத ஏற்ற இறக்கங்களைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை. அவர்களால் மட்டுமே தம் சொந்த நாணயத்தில் கச்சா எண்ணெய் வாங்க முடிந்தது. பிற நாடுகளின் மத்திய வங்கிகள் சர்வதேசச் சந்தையில் டாலருக்கு ஈடான தங்கள் நாட்டு நாணயங்களின் மதிப்பின் ஏற்ற இறக்கங்களைத் தடுக்கப் பெருமளவிற்கு டாலர் இருப்பை வைத்துகொள்ளும் கட்டாயத்தில் உள்ளன.

இத்தகைய காரணங்களால் அமெரிக்க டாலருக்கான தேவை தொடர்ந்து அதிகரித்தது, அதனால் டாலரின் மதிப்பும் உயர்ந்தது. பெரும்பாலான நாடுகள் டாலர் தேவைகளுக்காகத் தம் நாட்டின் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்கின்றன. அமெரிக்கா மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைக் காட்டிலும், பிற நாடுகளிலிருந்து அதிகளவில் இறக்குமதி செய்து கொள்வதால் அமெரிக்கா அதிக வர்த்தகப் பற்றாக்குறை கொண்ட நாடாக மாறியது. மற்ற நாடுகளில் தொடர்ந்து வர்த்தகப் பற்றாக்குறை ஏற்பட்டால் அங்கு நிதி நெருக்கடி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். ஆனால் அமெரிக்க டாலர் உலகப்பணம் என்பதால் அமெரிக்கா அதன் வர்த்தகப் பற்றாக்குறையை / நடப்புக் கணக்குப் பற்றாக்குறையை மூலதனக் கணக்கு உபரியின் மூலம் சமன் செய்து கொள்ள முடிகிறது. பெட்ரோ-டாலர் மறு சுழற்சி என்ற வழிமுறையின் மூலம் மூலதனக் கணக்கில் உபரியைப் பெறுகிறது. பெட்ரோ-டாலர் மறுசுழற்சி

முறையில் கச்சா எண்ணெயை ஏற்றுமதி செய்யும் நாடுகள் உபரி வருவாயை / பெட்ரோ-டாலர்களை அமெரிக்க கடன் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. டாலரில் மதிப்பிடப்படும் அமெரிக்கச் சொத்துகளில் முதலீடு செய்கின்றன. இதனால் அமெரிக்கச் சொத்துக்களின் மதிப்பு எக்கச்சக்கமாக உயர்ந்துள்ளது. அதிக டாலர்களை உருவாக்குவதும் சொத்துக்களின் விலைகளை உயரச் செய்கிறது.

பல ஆண்டுகளாக யு.எஸ். கருவூலப் பத்திரங்களில் முதலீடு செய்த பெட்ரோ-டாலர்களிலிருந்து வட்டியாக வந்த டிரில்லியன் கணக்கான டாலர்களைக் கொண்டு அமெரிக்க நிறுவனங்கள் சவுதி அரேபியாவை மேற்கத்திய வகையில் நகரமயமாக்கியுள்ளன. இவ்வாறு அமெரிக்க நிறுவனங்களுக்கு வேலைவாய்ப்புகளையும் அதன் மூலம் இலாபங்களையும் வழங்கவும் பெட்ரோ-டாலர் காரணமாக உள்ளது. உலகெங்கிலும் உள்ள நிதி முதலீட்டாளர்களும் நாணயப் பரிவர்த்தனையால் ஏற்படும் ஏற்ற இறக்கங்களிலிருந்து தம் செல்வத்தைப் பாதுகாக்க அமெரிக்கக் கடன் பத்திரங்களிலும், அமெரிக்க சொத்துக்களிலும் போட்டி போட்டுக் கொண்டு முதலீடு செய்கின்றனர். இதனால் அமெரிக்கா அதற்குத் தேவையானதை விட அதிகக் கடனை நிதிச் சந்தைகளில் பெறமுடிகிறது. இது அமெரிக்க மத்திய வங்கி வட்டி விகிதங்களை குறைவாக வைத்திருக்க அனுமதிக்கிறது மேலும் அமெரிக்காவில் பணவீக்கமற்ற வளர்ச்சியையும் ஊக்குவிக்கிறது.

ஒருவருக்குக் கடன் கொடுக்க யாரும் முன் வரவில்லையென்றால் அவர் முடிந்தோ, முடியாமலோ கடனைத் திருப்பி செலுத்த மாட்டார் என்று கருதப்படும். ஆனால் இந்த தர்க்கம் அமெரிக்க நாட்டிற்கு பொருந்தாது. (இந்திய வங்கிகள் கார்ப்பரேட்டு நிறுவனங்களுக்கு அளிக்கும் கடன்களும் இப்படிப்பட்டதுதானே!). அமெரிக்கா அதிகக் கடன்பட்ட நாடுகளில் ஒன்று. உலகம் அமெரிக்காவுக்குக் கடன்படவில்லை, அமெரிக்காதான் உலகத்திற்குக் கடன் பட்டுள்ளது.

அரசியல் பொருளாதாரத்தில் எண்ணிலடங்கா தோற்றப் பிழைகள் உள்ளன. வெளித் தோற்றம் ஏமாற்றும் என்பார்களே, அது முக்கியமாகப் பொருந்துவது பொருளாதாரத்திற்குதான், வெளியில் பார்த்தால் என்ன தோன்றும்? உலக நாடுகளுக்கெல்லாம் அமெரிக்க வங்கிதான் மலிவுக் கடன் கொடுத்து அனைத்து நாடுகளின் நிதி நிலையையும், சர்வதேசப் பொருளாதாரத்தையும் சமநிலைக்கு கொண்டுவர அரும்பாடு படுவது போலத் தோன்றும், ஆனால் உண்மையில் மற்ற நாடுகள் தான் போட்டி போட்டுக் கொண்டு அமெரிக்கக் கடன் பத்திரங்களின் வழியில் கடன் தருகிறார்கள், அமெரிக்காவிற்கு மலிவுக் கடன் கிடைக்கிறது. கடன் எங்கே

தேவைப்படுகிறதோ அங்கே வழங்கப்படுவதில்லை.

இந்தியாவின் விவசாயிகளும், சிறு உற்பத்தியாளர்களும் கடன் கிடைக்காமல் முடங்கிப் போயுள்ளனர். இந்திய மாநிலங்கள் கடன் கிடைக்காமல் தவிக்கின்றன. ஆனால் இந்திய நிதி முதலீட்டாளர்கள் 'ஏழை' அமெரிக்காவிற்கு கடன் வழங்குகிறார்கள். ரூபாயை மதிப்பிழக்க செய்கிறார்கள். இப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வுமிக்க இந்தப் பொருளாதார அமைப்பினால் மூன்றாம் உலக நாடுகளின் நாணயங்களது மதிப்பு எப்பொழுதும் குறைந்தே உள்ளது. இதனால் அமெரிக்கா மூன்றாம் உலக நாடுகளிலிருந்து அனைத்தையும் மலிவாகவே பெற முடிகிறது.

இங்கே நமக்கெல்லாம் ஆடித் தள்ளுபடி ஒரு மாதம்தான் அதுவும் இரண்டாந்தரத் துணிவகைகளைத்தான் 'மலிவாக'ப் பெற முடியும், ஆனால் அமெரிக்காவுக்கு ஆண்டு முழுவதும் ஆடித் தள்ளுபடிதான். அமெரிக்காவுக்குத் தேவையான எல்லாத் தரமான பொருட்களும் தள்ளுபடி விலையில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உலகப்பணம் என்ற தகுநிலையால் டாலரின் மதிப்பு ஏறுகிறது. டாலரின் செல்வாக்கு வளர்ந்து, எண்ணெய் மற்றும் பிற பொருட்களைப் பெரும் தள்ளுபடியில் வாங்குவதன் மூலம் அமெரிக்காவின் பணவீக்கத்தை ஏற்றுமதி செய்ய இது அனுமதிக்கிறது.

'பெட்ரோ-டாலர்' அமைப்பு அமெரிக்க தேசத்தை பெரிதும் வளப்படுத்தியுள்ளது. ஆனால் இது மற்ற நாடுகளின் இழப்பிலிருந்து பெறப்பட்டது. உலகளவில் 2⁄3 பங்குக்கும் மேலான அந்நியச் செலவாணி இருப்புகள் டாலராக உள்ளன. அமெரிக்க மத்திய வங்கி வரம்பில்லாமல் டாலர் அச்சடிப்பதற்கும் இது வழிகோலுகிறது. அமெரிக்காவில் பணப் புழக்கத்தை நிரந்தரமாக விரிவாக்குவதன் மூலம், அமெரிக்காவின் வாழ்க்கைத் தரமும் அதிகரித்துள்ளது. புவிசார் அரசியல் வழியில் பொருளாதார மேலாதிக்கம் கொண்ட, உலகின் ஒரே வல்லரசாக அமெரிக்கா இருந்துவர இந்த அமைப்பு உதவுகிறது.

இவ்வாறு பெட்ரோ-டாலர் அமைப்பு யு.எஸ். டாலர்களுக்கான உலகளாவிய தேவையை அதிகமாக்குகிறது. யு.எஸ். கடன் பத்திரங்களுக்கான உலகளாவிய தேவையையும் அதிகமாக்குகிறது. மேலும் இது அமெரிக்காவிற்கு விருப்பப்படி அச்சிடக்கூடிய நாணயத்துடன் எண்ணெய் வாங்குவதற்கான திறனை வழங்குகிறது. அமெரிக்காவிற்கு மலிவான ஏற்றுமதியையும் ஊக்குவிக்கிறது பெட்ரோ-டாலர் ஒப்பந்தம் டாலரை உலகின் சர்வாதிகார நாணயமாக நிலைநிறுத்த உதவியது. இந்த உயர் தகுநிலையால், அமெரிக்கா உலகளாவிய பொருளாதார மேலாதிக்க சக்தியாக உருவாகியுள்ளது. இதனால் அமெரிக்கா எப்பொழுதும்

வர்த்தகப் பற்றாக்குறையுடனும், நடப்புக் கணக்கு பற்றாக்குறையுடனும் நீடிக்க முடிகிறது. அதன் நடப்புக் கணக்குப் பற்றாக்குறைக்கு மிகக் குறைந்த வட்டி வீதத்தில் நிதியும் பெற முடிகிறது.

1980ஆம் ஆண்டு முதல், உலகின் மிகப் பெரிய கடனாளி தேசமாக அமெரிக்கா இருந்து வருகிறது. இருந்த போதும் அமெரிக்கா தனது ஏகாதிபத்தியச் செலவினங்களையும், பொறுப்பற்ற போர்களையும் தொடர்ந்து அதிகமாக்கிக் கொண்டே வருவதால் கடன் மேலும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. பெட்ரோ-டாலர் என்ற அமைப்பால் உலகப்பணமாக நீடிக்கும் டாலரின் மீதான நம்பிக்கையும், அதற்கான தேவையும் தொடர்ந்து அதிகரிப்பதாலும், இதனால் சாத்தியமாகும் மலிவுக் கடனாலும் அமெரிக்கா வர்த்தக / நடப்புக் கணக்குப் பற்றாக்குறையுடன் நீடிக்க முடிகிறது.

அமெரிக்க அரசியலாளர் ரான் பால் பெட்ரோ-டாலர் குறித்துப் பின்வருமாறு கூறியுள்ளார் "பெட்ரோ-டாலர்தான் டாலருக்கு உலக நாணயங்களில் ஒரு சிறப்பிடம் கொடுத்தது, சாராம்சத்தில் டாலருக்கு எண்ணெய் மதிப்பளித்தது. இந்த ஏற்பாடு அமெரிக்காவிற்கு மிகப்பெரும் நிதி நன்மைகளுடன் டாலருக்குச் செயற்கையாக வலிமையளித்தது,. டாலரின் செல்வாக்கு உயர்வதால் எண்ணெய் மற்றும் பிற பொருட்களைப் பெரும் தள்ளுபடியில் வாங்குவதன் மூலம் நமது பணவீக்கத்தை ஏற்றுமதி செய்ய இது நம்மை அனுமதிக்கிறது."

"உண்மையான மதிப்புள்ளவற்றை மட்டுமே நாணயமாக இருக்கக் கோரும் நேர்மையான பரிமாற்றத்திற்கான பொருளாதாரச் சட்டத்தை ரத்து செய்ய முடியாது. உலகளாவிய ஒப்புறுதியளிக்கப்பட்ட(Fiat) பணத்துடனான நமது 35 ஆண்டுகால சோதனையிலிருந்து உருவாகும் குழப்பம் ஒரு நாள் நம்மை உண்மையான மதிப்புள்ள பணத்திற்குத் திரும்ப செய்யும். எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் தங்கள் எண்ணெய்க்கு டாலர்கள் அல்லது யூரோக்களைக் கோராமல் தங்கத்தை அல்லது அதற்கு இணையானவற்றைக் கோரும் நாள் நெருங்கி வருவதை நாம் அறிவோம்." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புவிசார் அரசியல் வரலாற்றின் மிகவும் தந்திரமான உத்தியாக பெட்ரோ-டாலர் இருந்து வருகிறது. பெட்ரோ-டாலர் அமைப்பின் நிலைத்தன்மை மத்திய கிழக்கின் புவிசார் அரசியலுடன் இணைக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா தொடர்ந்து ஒரு வல்லரசாகச் செயல்பட வேண்டுமானால் பெட்ரோ-டாலர் அமைப்பின் மூலம் டாலர் உலகப் பணம் என்ற தகுநிலையைப் பாதுகாக்க வேண்டும் என்பதால்தான் மத்தியக் கிழக்குப் பகுதியெங்கும் ஆயிரக்கணக்கான இராணுவத் தளங்களை நிறுவி அங்குள்ள நாடுகளைப் போர்களின் மூலமும் பொருளாதாரத் தடைகளின்

மூலம் அழித்து வருகிறது.

(தொடரும்)

---

## தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

பொதுச்செயலாளர்: தோழர் ***தியாகு***

அன்பிற்குரியீர்! வணக்கம்.

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் அரசியல்-கருத்தியல் நிலைப்பாடுகளையும் நடைமுறைச் செயல்பாடுகளையும் தொடர்ந்து கவனித்து வருவீர்கள் என நம்புகிறேன். தமிழ்த் தேசிய விடுதலைக்கும் சமூக நீதிக்குமான கொள்கைவழியைத் தொடர்ந்து பற்றி நிற்கிறோம். பதவி அரசியலைப் புறந்தள்ளிப் போராட்ட அரசியலை உறுதியாகக் கடைப்பிடிக்கிறோம். மக்கள் நலன் கருதி ஒன்றுபட்ட இயக்கங்களில் தொடர்ந்து எங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்து வருகிறோம். உணர்வு அரசியலில் மயங்காமல் அறிவார்ந்த அரசியல் களத்தில் ஊன்றி நிற்கிறோம். தமிழீழம் உள்ளிட்ட தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட அரசியலில் எமது இடம் சிறிதென்றாலும் இன்றியமையாத ஒன்றென்னும் அறிந்தேற்புப் பெற்றுள்ளோம்.

எம் கொள்கை நிலைப்பாடுகளையும் கருத்துகளையும் திங்கள்தோறும் வெளிவரும் ***உரிமைத் தமிழ்த்தேசம்*** மின்னிதழில் உங்கள் பார்வைக்குப் படைத்து வருகிறோம். ***அறிவுக்குரல்*** வாயிலாகவும் புரட்சியச் சிந்தனைகளை விரிய விதைத்து வருகிறோம். எம் விடாமுயற்சியின் பயனாக இயக்கம் சீராகவும் உறுதியாகவும் வளர்ந்து வருகிறது. அறிவியல் நோக்கும் ஈகவுணர்வும் உழைப்பார்வமும் கொண்ட புதிய ஆற்றல்களை இயக்கத்தின் பால் ஈர்த்துள்ளோம்.

ஆனால், இன்றைய அரசியல் சூழலின் தேவைகளை நிறைவு செய்ய எமது வலிமையும் வளர்ச்சியும் போத மாட்டா என்பதை உணர்ந்துள்ளோம். இயக்கத்தின் பரவலான வளர்ச்சிக்கும் மக்கள்-பணிக்கும் மேலும் முழுநேர, பகுதிநேர ஊழியர்களைக் களமிறக்க வேண்டும். சமூக ஊடகங்களை இன்னும் விரிவாகப் பயன்படுத்தவும், மெய்ந்நிகர் அரசியல் செயல்நிரலைக் கடைப்பிடிக்கவும் தொடர்ச்சியான பொருள்வளம் தேவைப்படுகிறது. இதற்கென எம் தலைமைக் குழுவில் பேசி முடிவெடுத்து இந்தத் திங்கள் பங்களிப்புத் திட்டத்தை அறிவிக்கிறோம்:

எம் இயக்கப் பணிகளில் உங்களுக்கு நம்பிக்கையும் அக்கறையும் இருக்குமானால் தொடர்ந்து ரூ.100/- முதல் 2000/-க்குள் திங்கள் பங்களிப்பாகத் தாருங்கள். இது ஓராண்டுக்கான திட்டமாகும். இதற்கான படிவம் நிரப்பித் தந்து இத்திட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டுகிறேன். சிறுதுளி பெருவெள்ளம்!

தமிழர் விடுதலைப் போர்முழக்கம்! சமூகநீதித் தமிழ்த்தேசம்!

நன்றி!

தோழமையுடன்

தியாகு / சென்னை /04/05/2020

**தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்**

பொதுச்செயலாளர்: ***தியாகு***

**திங்கள் பங்களிப்புப் படிவம்**

| | |
|---|---|
| **பெயர்:** | |
| **ஊர் / முகவரி:** | |
| **தொலைபேசி / புலனம் எண்:** | |
| **மின்னஞ்சல் முகவரி:** | |
| **திங்கள் பங்களிப்பு:** | **ரூ.** |
| **திங்கள்தோறும் பங்களிப்பு நாள்:** | |
| **பங்களிப்பு வழி (நேரில்/ வைப்பகக் கணக்கு/ ஏனைய வழி)** | |
| **இயக்கத்திடம் உங்கள் எதிர்பார்ப்பு:** | |

**கையொப்பம்**

**நாள்**